வர்ம திறவுகோல் திரட்டு

(RETRIEVAL TECHNIQUES IN THANUOLOGY)

© Copyrigt Reserved

564811

11.8.64

By

DR. S. CHIDAMBARATHANU PILLAI

Publishers & Sellers:

INTERNATIONAL INSTITUTE OF THANUOLOGY
E-32, Anna Nagar (East)
Madras - 600 102.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	VARMA THIRAVU KOL THIRATTU (Retrieval Techniques in Thanuology)
Author	:	Dr. S. CHIDAMBARA THANU PILLAI E-32, Anna Nagar (E) Madras - 600 102.
Publishers	:	INTERNATIONAL INSTITUTE OF THANUOLOGY E-32, ANNA NAGAR (E) MADRAS - 600 102.
Publication No	:	50
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	20.7.1993
Paper used	:	13.7 Kgs
Size of the Book	:	21 × 14 cms
No. of Pages	:	128
Printing Types used	:	10 Points
No. of copies printed	:	1200
Price	:	Rs.300 / $45 / £30
Printers	:	M/s. Print Shop, Madras - 5.
Binding	:	Card board
Artist	:	Sri. Neelamegam, Madras
Subject	:	VARMAM (THANUOLOGY)

இறை வணக்கம்

சம்புவே அரன் அய்யா
சடைமுடி தரித்த ஈசா
அம்பிகை நன்னை நீயும்
அனுதினம் சுமந்து கொண்டு
தன்பதியாள்க்கு பாதிசரீரத்தை
ஈன்றாய் என்றும்
துன்பமே அனுபவிக்குமெனக்கு
துய்யனே துணை செய்வாயே !

- ஆசிரியர்

NOTICE

All rights are reserved. No part of this book may be reproduced, stored in a retrieval system or transmitted to any form or by any means, including publication without the prior written permission of the global copy right owner.

Dr. S. Chidambarathanu Pillai
Advocate & Notary Public
Madras 600 102

அணிந்துரை

தமிழ் மருத்துவத்தை நிலைநாட்டப் பாடுபடும் சான்றோர்களில் ஒருவர் டாக்டர் வைத்தியரத்னா: சிதம்பரதாணுப் பிள்ளையவர்கள். அவர்கள் பேசும் போதெல்லாம் தமிழ் மருத்துவம் உலகெங்கும் பரவ வேண்டும். தமிழ் மருத்துவ நூல்கள் எங்கும் ஆங்கில மொழியில் கிடைக்க வேண்டும். அதில்தான் தனது மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது என்று கூறுவார்கள். அவர்களுடைய மருத்துவப் பாங்கினைத் தமிழகம் அறியத் தலைப்பட்டதற்கு உண்மையிலேயே மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.

'தந்தையர் ஒப்பர் மக்களென்பதனால்', என்பது தொல்காப்பியம். 'குல விச்சை கல்லாது பாகம் படும்' என்பது மொழி. இவற்றிற்கிணங்க தம் தந்தையார் விட்டுச் சென்ற தமிழ் மருத்துவத்தை நிலைநிறுத்தப் பாடுபட்டு வருவதோடு, தானே மருத்துவராகவும் விளங்குகிறார்கள்.

தமிழ் மருத்துவ நூல்களை ஆங்கில மொழியாக்கம் செய்து பாரெங்கும் தமிழ் மருத்துவ மணம் கமழ, எண்ணிறைந்த நூல்களை வெளியிட்டும் வருகிறார்கள்.

பாரதியார் கண்ணனைத் தோழனாய், சேவகனாய், தந்தையாய், தாயாய் கடவுளாய்ப் போற்றியது போல் வைத்தியரத்னா சிதம்பர தாணுப் பிள்ளையவர்கள் நீதித்துறை, வங்கியல், வர்ம மருத்துவதுறை, வணிகவியல் போன்ற வெவ்வேறு துறைக் கல்வி வல்லுநராக வீற்றிருந்து தமிழ் மருத்துவத்தையும் நிலை நாட்டிக் கொண்டு வருகிறார்கள்.

'நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'

என்பது இவரின் மருத்துவ பண்பு.

இவர் இதுவரை நூறு தமிழ் மருத்துவ நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

வர்மத் திறவுகோல் திரட்டு என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூலில், வர்ம பாதிப்புகளை குறிப்பிட்டு அழகுற விளக்கி அதற்கு மருத்துவமும் சொல்லியிருக்கிறார்.

வர்ம இலக்கணத்தையும், வர்ம மருத்துவத்தையும் சொல்லித் தரக்கூசுகின்ற, மறைத்து வருகின்ற இந்நாட்களில், அதன் பெருமையை உலகறியப் பறைசாற்ற முன்வந்துள்ளார். அவர்கள் வாயிலாக, இதுவரை வெளிவராத கருத்துக்கள் பல நூல் வடிவில் இப்போது வெளி வருவது குறித்து தமிழ் மக்களும், உலகமும் பெருமையடைய வேண்டிய காரியமாகும்.

வர்ம மருத்துவம் உலகறியா ஒரு உன்னத நரம்பியல் மருத்துவத்துறை. நரம்பியல் மருத்துவத்தை உலகத்தாருக்கு வழங்கும் சிறப்பு மருத்துவம், வர்ம மருத்துவம் மாத்திரமே என்றால் மிகையாகாது. உலக மக்கள் வர்ம மருத்துவத்தை அறிய முடியாதும், அதன் பயன் கிட்டாதும் இருக்கின்றனர். இதன் விளைவாக கோடி கோடி மக்கள், நூற்றுக்கணக்கான நோய்களில் உழன்றும், ஆயிரக்கணக்கான மக்கள் தினம் தினம் மாண்டும் வருகின்றனர். இது ஓர் அவலை நிலையாகும். இந்த நிலமையை உலக சுகாதார நிறுவனம் (W.H.O) அறிந்தும், அறியா தன்மையில் இருக்கின்றனர். இந்நிலையில் கி.பி 2000-க்குள் உலக மக்கள் எங்ஙனம் பூரண உடல் நலம் தேட முடியும்?

உடலில் எந்தெந்த இடங்களில் வர்ம இடங்கள் உள்ளன, அவை பாதிக்க இளக்கு முறைகள் என்னென்ன என்பதையும், பலவகையான எண்ணெய்களையும், சிகிச்சை முறைகளையும் தெளிவுற இதில் தெளிவித்திருக்கிறார். இவற்றின் பெருமையை உணர்ந்து தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் புகழ்ந்து இதுபோன்ற பல நூல்கள் வெளிவரவும், அவற்றை மக்கள் பெற்றுப் பயனடையவும், முழு முதலிறையை வணங்குகிறேன்.

வித்துவான். சா. தனபாலன்.

முன்னுரை

உடலும் உயிரும் சேர்ந்த கலவையே மனிதன். பல்வேறு பாதிப்பால், உடலின் உயிரோட்டம் (பிரணாக்கலை) பாதிக்கப்படுகிறது. இப்பாதிப்பு, பிணிகளை விளைவிக்கிறது. உலகில் எந்த மருத்துவமும் இந்தப்பண்பை கொண்டதில்லை. எனவே வர்ம மருத்துவம், வருங்காலத்தில் மருந்துவ உலகில் ஒரு புரட்சியை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. வர்ம மருத்துவத்தை உலகில் ஓர் அதிசய மருத்துவமாகக் கருதலாம். பல பிரிவுகள் கொண்ட வர்ம மருத்துவத்தில் படுவர்மம், தொடுவர்மம் என்பது முக்கிய பிரிவுகளாகும்.

இந்த வர்மங்களில் பாதிப்புகள் ஏற்பட, எழும் உபாதைகள், கையாளும் திறவு முறைகள், சிகிச்சைகள் முதலியன இதன்கண் காண்க.

பொறிபட்டு மயக்கமாய் வரும் நோயாளியை, மருத்துவர் முதலில் குறி குணங்களை நன்றாகப் பார்த்து அறிந்து, பின்பு கைநாடி மற்றும் இடிகொண்ட இடங்களையும் பார்த்தறிந்து, பிழைக்குமென்று நம்பிக்கையிருந்தால் அடங்கல் முறைப் படியாவது, அல்லது குருவினால் சுற்பிக்கப்பட்ட இடங்களிலாவது பிடித்து இளக்கி, தடவு முறைப்படித் சிகிச்சை நல்க வேண்டும்.

நோயாளியை விலாவோடு சேர்த்துப் பிடித்துத் தூக்கி நிலத்தில் குத்தி இருத்தவும். நெட்டு எடுக்கவும். கையோடு கை பினைத்து தலையில் வைத்து, உச்சியில் இரண்டடி போடவும். பிடரிக்கும், மூலத்துக்கும் தட்டொன்று வீதம் போடவும். முதுகு வரியில் புறங்கால் கொண்டு அடியொன்று அடித்து நிமிர்த்தி இருத்தவும். நெஞ்சில் பதமாக ஒரு அடியும் போடவும். காது இரண்டையும் ஊதிவிடவும். உடலை நிமிர்த்தி உச்சிமுதல் மூலாதாரம் வரை தடவவும். சங்குதிரியை தடவி விடவும்; கைக்குழி முதல் ஆண்- பெண் குறி வரை தடவி தாழ்த்தவும். இரு கைகளை உதறச் செய்யவும். இத்தனையும் - குருவை மனதில் நினைத்து செய்து முடிக்க வர்மப்பாதிப்பு நீங்கும்.

வர்ம மருத்துவம் கர்ம வினைகளையும், சோதிட கருத்துக்களையும் தழுவியது. கர்ம நிவிர்த்திக்கு கருக்கடையாய் செய்யும் சாந்தி முறைகள் இந்நூலின் சிறப்பை பிரதிபலிக்கிறது.

நம்பினோர்க்கு வாழ்வு இவ்வுலகில் உண்டு என்பதின் சத்தான அம்சத்தை எந்நாளும் மனித இனம் மறக்கலாகாது.

'வர்ம திறவு கோல் திரட்டு' என்ற இந்நூல் வர்மங்கள் நூற்றெட்டு, படுவர்ம திறவு கோல், தொடுவர்ம திறவு கோல், வர்மாணி திறவு கோல் (பொது), மற்றும் 'வர்ம பொறி நாடி திறவு கோல்', 'சர்மகாண்டம்' என்ற ஆறுகாண்டங்களை உள்ளடக்கியுள்ளது. இந்நூலின் சாராம்சத்தை கடைபிடிப்போர், ஆசானின் கண்காணிப்பில் வர்ம விபரங்களையும், யுத்திகளையும், கண்டுணர்ந்து, கைப்பழக்கப்படுத்திக் கொண்டால் சால பயனுண்டு.

மற்றும், வர்ம மருத்துவத்தில், 108 வர்மங்கள் முக்கியமானவை. இந்த 108 வர்மங்களுக்கு சரியான விளக்கத்தை, பல நூல்கள் படித்தாலும், அறிய முடியாது. இந்தக் குறையை தீர்க்குமாறு, பல நண்பர்களும், மாணாக்கர்களும் பல ஆண்டுகளாக கேட்டவாறு இருந்தனர். அக்குறையை நிவர்த்திக்க இந்நூலில் 'வர்மங்கள் 108' என்றப்பகுதியை, முதலில் சேர்த்து, நண்பர்களின் நீண்ட கால வேண்டுகோளுக்கு பதில் தந்தாற் போல், 108 வர்மங்களின் இடம், வர்மப்பாதிப்பு ஏற்பட்டால் எழும் விளைவுகள், இளக்குமுறை, தடவுமுறைகள் மற்றும் மருந்துக்களையும் தந்துள்ளேன்.

சென்னை 600 102-ல் இயங்கும் இன்டர் நேஷனல் இன்ஸ்டிடூட் ஆப் தாணுவாலஜி நடத்தும் இருவருட வர்ம டிப்ளமோ (Th.D) பாடத்திட்டத்திற்கு, "வர்மத்திறவு" என்ற பாடப்பகுதிக்கு இந்த நிறுவன பாடத்திட்டக்குழு, இந்நூலை பாடப்புத்தகமாக தேர்ந்தெடுத்து, மாணவர்களுக்கு பயிற்சியளித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நுலை எழுதுவதில், பிரதிகள் எடுக்க, அச்சுப்பிழை திருத்தம் செய்ய உதவிய தலக்குளம். DR. V. முருகானந்தம், DSM அவர்களுக்கு என் நன்றி.

இந்நூலை ஆக்க அருளும், அனுக்கிரகமும் பொழியும் என் குருநாதர் DR. ஆ. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் கமல பாதங்களுக்கு இதனை படைத்து வாசக பெருமக்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

10.5.1993 ஆசிரியர்

பொருளடக்கம்

பக்கம் எண்

காண்டம் I 15

வர்மங்கள் நூற்றெட்டு 15

1. கொண்டைகொல்லி (உடன் கொல்லி) வர்மம் 16
2. சீறுகொல்லி வர்மம் 17
3. பிடரிவர்மம் (பேன்குழிக்காலம்) (கொண்டைக்காலம்) 18
4. சுருதி வர்மம் 19
5. பொற்சை (பொறச்ச) வர்மம் 20
6. செவிக்குத்தி வர்மம் 20
7. பொய்கை (பொய்ய) காலம் 21
8. நட்சத்திர வர்மம் 22
9. காமபூரி (காம்பூரி) வர்மம் 23
10. நுனி (மூர்த்தி) (பசுமை) வர்மம் 24
11. திலர்தவர்மம் (பொட்டுவர்மம்) (சுடரொளியின் காலம்) 24
12. மின்வெட்டி (முன்வெட்டி) (விழிபிதுங்கி) வர்மம் 25
13. மந்திரக்காலம் 26
14. அடக்க வர்மம் 27
16. பட்சி வர்மம் 27
17. கண்ணாடி (மூக்கிறாணி வர்மம்) 27
18. பால வர்மம் 28
19. சூண்டிகை வர்மம் 28
20. கொண்ட வர்மம் 28

21. கூறு வர்மம் 28
22. ஒட்டு வர்மம் (குந்த காலம்) முன்னோட்டு வர்மம்) (அடிநாடி வர்மம்) 28
23. உறக்க வர்மம் 29
24. சங்கு திரி (சங்கு பூட்டு) வர்மம் 30
25. சுமை (சிமை) (பொறி) வர்மம் 31
26. காக்கட்டை வர்மம் 31
27. கதிர் (வில்வெட்டி) வர்மம் 32
28. கதிர்காம வர்மம் 32
29. காரை (சக்தி) வர்மம் 33
30. திவளை வர்மம் 33
31. ஏந்தி வர்மம் 34
32. கைக்கூட்டு வர்மம் 34
33. குத்து வர்மம் 35
34. உள்குத்து வர்மம் 35
35. புள்பற்று வர்மம் 35
36. குறுக்கு வர்மம் 35
37. தூசி வர்மம் 35
38. தூசிக வர்மம் 35
39. துடி வர்மம் 35
40. பிடி (இடி) வர்மம் 35
41. கனல் (கழலை) வர்மம் 35
42. வளை வர்மம் 35
43. ஈளை (குலை) வர்மம் 35
44. வில் வர்மம் 35
45. அனுமார் வர்மம் 35
46. கூம்பு வர்மம் (எம வர்மம்) (அனுமார் முடிப்பு வர்மம்) 36
47. அரி (விஷ்ணு) வர்மம் 37
48. பன்றி (உறுமி) வர்மம் 38
49. அடப்பக்காலம் 38
50. முண்டெல்லு வர்மம் 39
51. வலிய அத்திச் சுருக்கி வர்மம் 40

52. சிறிய அத்திச் சுருக்கி வர்மம் 41
53. சருதி வர்மம் 42
54. பள்ளை வர்மம் 42
55. சுருக்கு வர்மம் 43
56. காரீரல் வர்மம் 43
57. தும்மி (வாயு) (தள்ளல் குழி) வர்மம் 44
58. கைக்கட்டி வர்மம் 44
59. சடப்பிற வர்மம் (ஆனந்த சடப்பிற வர்மம்) 45
60. கிளிப்புற வர்மம் } பூணூல் வர்மம் 45
61. கிளிமேக வர்மம் } 46
62. புஜ வர்மம் 47
63. விலங்கடி வர்மம் (விலங்கு வர்மம்) 47
64. சுழியாடி (மேல் சுழியாடி) வர்மம் 48
65. சுளுக்கு வர்மம் (காரைக் குழி வர்மம்) 49
66. நெட்டெல்லு (தண்டெல்லு) (முனை வாசிக்காலம்) வர்மம் 50
67. கச்சை வர்மம் 54
68. கைக்கூட்டி வர்மம் 55
69. வாசிக்கால (வாசுக்கால) வர்மம் 55
70. பிரம்ம வர்மம் (அன்னக் காலம்) (உந்தி வர்மம்) (ஆபென்ற வர்மம்) (அயன் வர்மம்) 56
71. வருண வர்மம் (மழை வர்மம்) (மூத்திரக் கால வர்மம்) 57
72. கல்லிடைக்காலம் (அக்கினி வர்மம்) (வித்து வர்மம்) (தொந்தை வர்மம்) 58
73. வலம்புரி வர்மம் 59
74. இடம்புரி வர்மம் 60
75. வில்லுறுமி வர்மம் 60

76. வல்லுறுமி வர்மம் 60

77. நரங்குக்குத்தி வர்மம் 61

78. அணிவர்மம் (மேலணி வர்மம்) 61

79. ஆந்தை வர்மம் 62

80. மொளிப்புற காமணை வர்மம் (தட்சணை காலம்) 62

81. சூண்டோதரி வர்மம் 63

82. குண்டோதரி வர்மம் (சூட்டு வர்மம்) 63

83. வெள்ளை வர்மம் (துதிக்கை வர்மம்) 63

84. மணி பந்த வர்மம் 64

85. கை- ஆந்தை வர்மம் 64

86. கவளி வர்மம் (கவளி அடங்கல்) (சன்னி அடங்கல்) -I 65

87. கவளி வர்மம் (கவளி அடங்கல்) (சன்னி அடங்கல்) -II 65

88. கவளி வர்மம் (கவளி அடங்கல்) (சன்னி அடங்கல்) -III 65

89. மூட்டு வர்மம் 66

90. மொளி வர்மம் (மொளிப் பிறை காலம்) 66

91. முண்டக வர்மம் 67

92. முடக்கு வர்மம் 67

93. மூட்டு மணி பந்த வர்மம் 67

94. கால்வெள்ளை வர்மம் (பாதச் சக்கர வர்மம்) (அடங்கல் வர்மம்) 67

95. உப்புக்குத்தி வர்மம் 68

96. மொளி வர்மம் - கால் 68

97. சூண்டிகை வர்மம் (குண்டு காலம்) 68

98. விறுத்தி வர்மம் 69

99. கால் சுண்டோதரி வர்மம் (விதிர் வர்மம்) 69
100. பட வர்மம் (திட வர்மம்) 69
101. கண்ணு புகழ் வர்மம (பூழிக்காலம்) 69
102. குதிகால் வர்மம் 69
103. குதிரைமுக வர்மம் 70
104. கொம்பேறி வர்மம் 70
105. முடிச்சு மைய வர்மம் (பட்சி வர்மம்) 70
106. கோணச்சன்னி வர்மம் (அடக்க வர்மம்) 71
107. மூட்டுவர்மம் (சிரட்டை வர்மம்) (கெஜ கேசரி வர்மம்) (கோச்சல் வர்மம்) 72
108. கால் உறுமி வர்மம் (தொடை வர்மம்) 72

அனுபவ மருந்துகள் 73

(1) கூழ் 73
(2) சூரணம் 73
(3) கிழாயம், கிழாயம் (வேறு) 73
(4) தலைக்குத் தேய்க்க குறுந்தொட்டி எண்ணெய் 75
(5) வசவு எண்ணெய் 75
(6) வர்ம வறட்சை, இருமலுக்கு உபதேச மருந்து 76
(7) வர்மத்தால் எழும் சயம் முதலியவற்றிற்கு கோழி நெய். 76

காண்டம் II 78

படுவர்ம இறவு கோல் 78

காப்பு 79
படுவர்மத்தில் ஊனம் கொண்டால் இளக்கு முறை 79
ஒத்தடம் 81
உள்ளுக்குக் கொடுக்க எண்ணெய் 82
மந்திர முறை. 84

காண்டம் III 85

தொடு வர்ம திறவு கோல் 85

காப்பு 85
பொது திறவு முறைகள் 86
கர்ப்பிணிக்கு தொடு வர்ம திறவு 88
நாசித்தூள் 89

காண்டம் IV 92

வர்ம ஆணி திறவு கோல் (பொது முறைகள்) 92

காப்பு 92
வர்மத்தால் கண்ணடைத்தால் திறவு முறை 92
தலையில் அடிபட்டு வாய்விட்டு அலறினால் 93
வாய்பூட்டிடுகில் 94
கண் விழி பிசகி தலை வலித்தால் 94
கண் விழி திறந்த நிலையுற்றால் 94
மூக்கு சுளித்து, விறையல், சன்னி, சுரம் கண்டால் 95
வாய் திறந்திடுகில் 95
பெருமூச்சுவிட்டு, வலியும், இக்கலுற்றால் 95
தலை ஆட்டங் கொண்டால் 95
நாக்கு வெளியே தள்ளினால் 96
நாக்கு உள்ளே இழுத்து விட்டால் 96
லிங்கத்தில் இந்திரியம் கசிந்தால் 96
கைப் புழம் நழுவி விழுந்தால் 97
மூத்திரமடைத்தால் / இளகினால் 97
உள்வர்ம இளக்கு முறை 98
மூத்திரமும், மலமும் அடைப்பட்டால் 98
சன்னி வந்து வலித்திழுத்தால் 98
மல சலமடைத்தால் 99
காம வெறியுற்று லிங்கம் நிமிர்ந்திட்டால் 99
சுவாசம் விட அவதியுற்றால் 100
ஆண்குறி உள்வாங்கினால் 100
ஆண்குறி வெளியே நீண்டிடுகில் 100
உள் மூலம் வெளியே தள்ளினால் 101
உள்யோனிப் பாகம் வெளியே தள்ளினால் 101
வாந்தியுடன் சுரம், விக்கலெடுத்தால் 101

இக்கல், விக்கல் கொண்டால் 102
இரத்தம் முறிந்து பாய்ந்திட்டால் 102
சன்னி, வலிவந்து இழுத்திடுகில் 102
கழுத்தைக் கோணியிழுத்து நோவுற்றால் 103
கழுத்துக் குழைந்து விழுமானால் 103
இடுப்புக் குழைவுற்றுக் கடுத்திட்டால் 104
குழந்தை திவங்கி அழுது சோர்ந்திடுகில் 104
குழந்தைக்குத் தடவு முறை 105
கையின் மணிக்கட்டு நகர்ந்திட்டால் 106
கால் மூட்டு சிரட்டை புரண்டு விட்டால் 106

காண்டம் V 108

வர்ம பொறி நாடி திறவு கோல் 108

காப்பு 108
வர்மப்பாதிப்பு ஏற்படின் அறிகுறிகள் 109
மார்பில் வர்மம் கொண்டால் 109
தலையில் வர்மம் கொண்டால் 110
மரணக்குறிகள் 112


காண்டம் VI 115

கர்ம காண்டம் 115

காப்பு 115
திசைபலன் 116
ஆண், பெண் இருக்கைப் பலன் 188
கர்ம நிவர்த்தி 118
மருந்து வகைகள் 122

மேகத்துக்கு சூரணம் 122
இலேகியம் 123
மதனகாமேஸ்வர இலேகியம் 124

கர்ம நிவர்த்தி-சாந்தி முறை 125



வர்ம திறவு கோல் திரட்டு

காண்டம் I

வர்மங்கள் நூற்றெட்டு

மனித உடலில் வியாபித்துள்ள முக்கிய வர்மங்கள் 108. இவை நிலைத்துள்ள இடங்கள், வர்மம் கொண்டால் எழும் குணங்கள், இளக்கும் நேரம், இளக்கும் விதம், மற்றுமுள்ள சிகிச்சை முறைகள் முதலியவற்றை இங்கு அறிய முற்படுவோம்.

1.	கழுத்துக்கு மேல்	25
2.	கழுத்துக்குக் கீழ் நாபி வரை	45
3.	நாபி முதல் மூலம் வரை	9
4.	கைகளில்	14
5.	கால்களில்	15
	மொத்த வர்மங்கள்	108

பெருவர்மம் 12; தொடு வர்மம் 96 என்பவை 108-ல் அடங்கும்.

இந்த வர்மங்களை ஒன்றின் பின் ஒன்றாக விளக்கக் காண்பீர்.

1. கொண்டை கொல்லி (உடன்கொல்லி) வர்மம்

இடம் :- கொண்டை கொல்லி வர்மம் தலையின் நடுவில் (சிரசின் மீது) – உச்சந்தலை பதப்பில் (குழியில்) நிலைத்துள்ளது.

வர்மத்தில் பாதிப்புக் கொண்டால் குணம்:

இந்த இடத்தில் அடி, இடி, தாக்கு பலமாக படுமிடத்து தலை குழைந்துவிடும். கை-கால்கள் சோர்வுற்றுப் போகும். உடல் அயர்ந்துப்போம். பெண் மோகம் இல்லாமலாகும். நாவில் இரத்தம் காணும். சிலேற்பனம் மீறி சன்னி உண்டாகும். நாசியிலிருந்து நீர் வடியும். கண்கள் மயங்கும்; வட்டமிடும். உடல் வெறி பிடித்து தன் உணர்வை இழக்கும். உடலின் இயல்பான நிறம் மாறி கறுப்பாகும். உடல் வலு உள்ளவர் 32 நாட்கள் வரை தாக்குப் பிடித்து, அதன்பின்பு தளர்நிலை இழப்பர். ஆண்குறி சிறுத்துவிடும். இளக்கு முறை செய்தாலும் ஆண்மையை இழப்பர். மேலும் 18-ம் மாதம் பைத்தியம் பிடிக்கும்.

இளக்கும் நேரம் :- வர்மம் கொண்ட ஆறு மணி நேரத்துக்குள் இளக்குதல் உத்தமம்.

இளக்கு முறை :- நோயாளியை தரையில் எடுத்திருத்தி (உட்காரச்செய்து) உச்சிமீது மருத்துவர் தனது இடது கையை விரித்து, கவிழ்த்தி வைத்து அதன்மீது மறுகை விரல்களை மடக்கி ஒரு குத்து போடவும். பிட்டியின் (கீழ்தாரையின்) மத்தியில் ஒரு அடியும் போடவும்.

நாசி, முகம் இவற்றைத் தடவித் தூக்கி விடவும்.

கும்பத்தில் நீர் கொண்டுவந்து செபித்து முகத்தில் எறிய கிலி பிடித்திருப்பின் அதுவும் நீங்கும்.

மயக்கம் இருப்பின் வாயில் சுக்கைப் போட்டு மென்று அதன் வேகத்தை நோயாளியின் மூக்கிலும், செவியிலும் ஊதவும். அல்லது "கெந்திராசி" நசியத்தை மூக்கில் ஏற்றவும்.

பின்பு சாமை அரிசி இட்டு வேக வைத்த கஞ்சியை சூடாக ஊட்டவும். தலைக்கு எண்ணெய் வைத்து தேய்த்து வெந்நீரில் குளிக்கச் செய்யவும். கிழாயம், பொடி, நெய் இவற்றை தயார் செய்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

கொண்டைக் கொல்லி வர்மத்தின் பாதிப்பு அசாத்தியமாயிருப்பின், ஒரு வருடம் செல்ல, சில நோய்கள் உடலில் உருவாகும். தலையில் குத்தல், உளைச்சல் வரும்; தும்மல் ஏற்படும். அடிக்கடி கூச்சல் போடுவர். உடல் மெலியும். மூன்று வருடத்தில் இரண்டு கண்களின் பார்வை மங்கும். மனதில் துக்கம் எழும். உடலில் சக்தியும் குன்றும். இக்குறி குணங்கள் ஏற்படும் முன்னர் இளக்கு முறைகள் செய்து, மூன்று நாட்கள் தொடர்ந்து கிழி ஒத்தடம் (வேது) கொடுக்கவும்.

தினை அரிசி இட்டு கஞ்சி தயார் செய்து சூடாகச் சாப்பிடக் கொடுக்கவும். தலையில் தப்பளமிடவும்.

2. சீறு கொல்லி வர்மம்

இடம் :- தலையின் நடுவில் உச்சிவர்மத்திலிருந்து பின்னால் ஒரு சாண் அளவு கீழாக சீறு கொல்லி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் உடன் மயக்கம் ஏற்படும். தலையை உருட்டுவர். நாக்கு உள்வாங்கி விடும். வாயிலிருந்து நுரை-பதை வெளியாகும். முதுகு கூனிப்போகும். நாவைச் சுற்றி இரத்தக் குறிகள் காணும். கண்கள் வட்டமிடும்.

அடிபட்ட இடத்தில் நெல் அளவு முறிவு ஏற்பட்டாலும் பிழைப்பது கடினம். உடல் துடி துடித்து அறிவை இழப்பர். சில வேளையில் நினைவு ஏற்படும் போது பைத்தியக் காரனைப் போல் புலம்புவர். எதிலும் பற்றில்லாமல் இருப்பர். கண்களில் பீளை தள்ளும். அதிக இருமல் உண்டாகும். சுக்கிலம் தானாக வழியும்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நேரத்திலிருந்து ஆறு மணிக்குள்ளாக இளக்கி விடுதல் நல்லது.

இளக்கு முறை :- அடங்கல் முறைப்படித் தடவி மயக்கத்தை நீக்கவும். அடுத்தாற் போல் நோயாளியை உட்காரவைத்து உடலின் இருபுறங்களையும் நன்றாக அழுத்தித் தடவவும். தடவும் போது மருத்துவரின் விரல்கள் நோயாளியின் உடலில் நன்றாக பதியும்படி இருத்தல் வேண்டும்.

மற்றும் தலையின் எல்லா பாகங்களையும் இரண்டு அல்லது மூன்று தடவை நன்றாகத் தடவி, பொருத்துக்களை இரு கைகளால் அமுக்கி நெருக்கி விடவும். இரு காதுகளையும் கீழ் மேலாக இழுத்துவிடவும். தலை முதல் கால் பாதம் வரை எல்லாப் பாகங்களையும் நன்றாகத் தடவி விடவும். தலையின் பொருத்துக்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதை நினைவில் வைத்துக் கொண்டு தடவவும். தொடர்ந்து மருந்துகள் செய்து கொடுக்கவும்.

குறிப்பு :- இந்த வர்மம் கொண்டவர்கள் சிகிச்சை பெறும் போது சிறிது காலம் உடலுறவை நீக்கவும். தவறினால் அல்லது மீறினால் கண், காது வழியாக சுக்கிலம் பழுப்பு நிறமாகக் கொட்டுவதுடன், பதினாறு மாதங்களில் மரணமும் ஏற்படும்.

3. பிடரி வர்மம் (பேன் குழிக்காலம்) (கொண்டைக்காலம்)

இடம் :- மனிதனின் பிடரிப் பகுதியில் பிடரி வர்மம் உள்ளது. அதாவது தலையின் பின்புறப் பகுதியானது முடிகின்ற பகுதியில் (தலையின் பின்புறத்தில் உள்ள தலைமுடி முடிகின்ற பகுதியில்) உள்ள குழியின் நடுவில் நிலைத்துள்ளது. (அதாவது, சிறு கொல்லி வர்மத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீட்டர்) கீழாக உள்ளது).

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் வாய்பிளந்து, நாக்கு வெளியே தள்ளும். கண்களிரண்டும் மூடிவிடும். தலை குழைந்து தன்னிலையை இழக்கும். கண்விழிகள் துடிதுடிக்கும். உடல் தளர்வுற்று நடுக்கம் உண்டாகும். பெரு மூச்சு விடுவர். உடல் நிலை கேடடையும். மேலும் கண்களிரண்டும் சிவந்து சிறிக் காணும் அல்லது அடைத்துக் கொள்ளும். உடல் சரிந்து விழும். மூச்சு வாங்கும். பொறுக்க இயலாத கழுத்து வலி ஏற்படும்.

இந்த வர்ம நிலையத்தில் மூர்க்கமாக பாதிப்பு ஏற்பட்டு முறிவு தோன்றினால் உடன் மரணம் உண்டாகும்.

இளக்கும் நேரம் :- வர்மம் கொண்ட இருபது மணி நேரத்திற்குள் இளக்குமுறை செய்யவேண்டும். இல்லையெனில் மரணம் ஏற்படும்.

இளக்குமுறை :- நோயாளியின் இரு கால்களையும் மடக்கி, நெஞ்சோடு சேர்த்துப் பிடித்துத் தூக்கி தரையில் தக்கென இருத்தவும். மருத்துவர் தன் கையை மடக்கி, நோயாளியின் உச்சியில் ஒரு குத்து போடவும். அகங்கழுத்தில் இருவிரல்களால் முறைப்படித் தடவி, தொண்டைக்குழியில் மெதுவாக அழுத்தவும். கழுத்துப்பட்டையை வலமும், இடமும் மெதுவாகத் தடவி பிடரிக் குழியில் கொண்டு சேர்க்கவும். பிடரியின் இரு பக்கங்களிலும் பலமாகத் தடவி, பிடரி பக்கத்து நரம்புகளைப் பிடித்து விடவும்.

கும்பத்தில் தண்ணீர் மொண்டு வந்து முறைப்படி செபித்து முகத்தில் எறியவும். அரிசியுடன் வெந்தயமிட்டு தயார் செய்த கஞ்சியை சூடாகச் சாப்பிடக் கொடுக்கவும். மொசு மொசுக்கைத்தைலம் தயாரித்து உள்ளுக்கும் கொடுத்து, தலையிலும் தேய்த்து வென்னீரில் முழுகச் சொல்லவும்.

எனினும் முன்னூறு நாட்கள் சென்ற பின்பு பிடரிவலி, மூச்சு முட்டல், கண்பார்வை குன்றுதல், பசியின்மை அல்லது அதிக பசி, காது இரைச்சல், பிரமையின் காரணமாக புலம்பல், தலையில் ஊரல் (அரிப்பு), பெண் மீது அதிக மோகம் ஏற்படுதல், விந்து வீணாகுதல் முதலிய உபாதைகள் எழும்.

4. சுருதி வர்மம்

இடம் :- சீறு கொல்லி வர்மத்தின் நான்குவிரல் அகலத்தில் (உச்சியிலிருந்து எட்டு விரல் கீழாக) சுருதிவர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- சுருதி வர்மம் கொண்டால் உடன் மயக்கம் ஏற்படும். தலையை உருட்டுவர். சன்னி, இருமல், கபம் உண்டாகும். அறிவு இழப்பு ஏற்படும். இந்த வர்மம் கொண்டவனுக்கு மயக்கம் தெளிந்தாலும், தன்னிலை தெரியாது. அதாவது பைத்தியம் பிடித்த நிலைக்கு தள்ளப்படுவான். (அல்லது) இந்தவர்மம் கொண்டவன் இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பான். சுக்கிலம் தானாக வழியும். கண்களிலிருந்து பீளை பொங்கிக் கொண்டே இருக்கும். எதிலும் பற்றற்று இருப்பான்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நேரத்திலிருந்து ஏழு மணி நேரத்துக்குள்ளாக நோயாளியை இளக்கிவிடல் உத்தமம்.

இளக்குமுறை :- வர்மமுற்றோரை அடங்கல் முறைப்படித் தடவிவிட மயக்கம் தெளியும்.

பின்பு சீறு கொல்லி வர்மம் கொண்டால் தடவும் முறைப் படி சுருதி வர்மம் கொண்ட நோயாளியை தடவி விடவும்.

இன்னும் சாமையரிசி கஞ்சி அல்லது பாசிப்பயிறு வேகவைத்துக் கொடுக்கவும். நாற்பத்தியொரு நாட்கள் தொடர்ந்து ஆட்டின்பால் கலந்த கஞ்சியைக் நோயாளிக்குக் கொடுக்கவும்.

குறிப்பு :- இவ்வர்மம் கொண்டவர்கள் உடலுறவை அறவே நீக்கவும். மீறினால் கண்-காது -மூக்கு வழியாக சுக்கிலம் இரத்தத்துடன் கலந்து கொட்டும். பதினைந்து மாதங்களில் மரணமும் ஏற்படும்.

5. பொற்சை (பொறச்ச) வர்மம்

இடம் :- சுருதி வர்ம நிலையத்திலிருந்து இரண்டு விரல் (5 செ.மீ.) அளவு கீழாக பொற்சை வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- பொற்சை வர்மம் கொண்டால் கண்களில் புகைச்சல் காணும். அதிக சுரம் தோன்றும். கண்கள் இரண்டும் குத்தி நிற்கும். புருவம் தூறிக்காணும்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் இளக்குமுறைச் செய்யவும். தக்க மருந்து வர்மப்பாதிப்புற்றோருக்கு செய்து தரவும்.

இளக்குமுறை :- பிடரி வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை பொற்சை வர்மமுற்றோருக்கு கையாளவும்.

குறிப்பு :- பொற்சை வர்மத்தில் காயம் ஏற்படின் உயிர் பிழைப்பது அரிது.

மாத்திரைக்குக் குறைவாக வர்மம் ஏற்படின் எண்ணெயிட்டும், அரிசி அல்லது கோதுமை தவிடு வறுத்து கிழிகட்டி ஒத்தடம் இட்டும், பின்பு தடவு முறையும் செய்யவேண்டும்.

6. செவிக்குத்தி வர்மம்

இடம் :- இரு காதுகளின் துவாரங்களை அடுத்துக் காணப்படுகின்ற சிறு தண்டின் அருகே உள்ள குழிப் பகுதியில் செவிக்குத்தி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் சீவன் பதறும். புத்தி கலக்கமுறும். வாயிலிருந்து பதை பதையாக நுரை வெளியேறும். கண் விழிகள் இரண்டும் பெருவிழியாக மாறி வெளியேத் தள்ளும். இரு காதுகளும் அடைத்துவிடும். கூப்பிட்டால் சத்தம் கேளாது. பேசும் சொற்கள் செம்மையற்றுப் போகும். சிலவேளையில் முகம் ஒரு பக்கமாக திரும்பும். முகத்தில் வியர்வை ததும்பும். சுழன்று கீழே விழுவர். உடல் துடிக்கும். சிலநேரங்களில் கண் விழிகள் அடைத்துவிடும். இருட்டி விடியும் முன்பு மரணம் ஏற்படும்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட ஒன்பது மணி நேரத்திற்குள் நோயாளியை இளக்கு முறைப்படி இளக்கவும்.

இளக்குமுறை :- அடிபட்ட காதின் மறுபுறத்தில் மருத்துவர் தம் கைவிரல் கொண்டு ஊன்றி கை அமர்த்தி, மறு கையை பொத்தி ஒரு தட்டு தட்டவும். பின்னர் நோயாளியின் கையை உயர்த்தி, தலையில் வலது கை மீது இடது கையை வைத்து, மருத்துவர் தன் கையால் (உச்சியில்) ஒரு குத்து போடவும். மேலும், நடு முதுகில் கால் படத்தால் மெதுவாக தட்டு தட்டவும். முதுகு, நெஞ்சு, குறிப்பாக வர்மம் கொண்ட செவியின் பகுதிகளையும் நன்றாகத் தடவி விடவும்.

மருத்துவர், சுக்கை தன் வாயிலிட்டு மென்று முதுகின் வேகத்தை நோயாளியின் மூக்கு, செவித் துவாரங்களில் ஊதவும். வர்மம் இளகும். நோயாளியும் சுயநிலைக்கு வருவர்.

தொடர்ந்து தேவையான மருந்துகளை நோயாளிக்கு செய்து கொடுக்கவும்.

7. பொய்கை (பொய்ய) வர்மம்

இடம் :- செவிக்குத்தி வர்ம இடத்தின் இரண்டு விரல் (5 செ.மீட்டர்) மேலாக பொய்கை வர்மம் உள்ளது. அதாவது, பொய்கை வர்மம், சென்னியில் எலும்பு பொருத்துக்கள் சேருமிடத்தில் நிலைத்துள்ளது.

குணம் :- பொய்கை வர்மத்தில் பாதிப்பு கொண்டால் உடன் மயக்கம் உண்டாகும். ஐம்டொறிகளும் தன்னிலையை இழக்கும். கண்கள் மயங்கும் அல்லது அடைத்துவிடும். உடலில் அயர்வு உண்டாகுட. வாயிலிருந்து நுரை நுரையாக வெளியாகும். தலையும் மேலாக நிமிர்ந்து (அண்ணாந்து) வாய் பிளந்திருக்கும். உணர்வு மாயும். உடல் முதிர்ந்துவிடும். நரம்புகளில் வலி அதிகமாகும். திடீரென எழுந்திருப்பர்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட பன்னிரண்டு மணி நேரத்திற்குள் நோயாளியை இளக்கவும்.

இளக்குமுறை :- சுருதி வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை பொய்கை வர்மப்பாதிப்புக்குள்ளான நோயாளிக்குச் செய்யவும்.

குறிப்பு :- வர்மம் முற்ற நாளிலிருந்து 5, 7, 12 நாட்கள் அவதிகளில் மயக்கம் வராதிருந்தால், நோயாளி சுகமடைந்து இப்புவியில் நெடுநாட்கள் வாழ்வர்.

மயக்கம் ஏற்பட்டால் நோயாளி பிழைப்பது அரிது. நோயாளி படபடத்து, துடிதுடித்து மரணமடைவர்.

முன் சொன்ன அவதி நாட்களுக்குள் தக்க சிகிச்சைச் செய்யவும். மேலும் முன்சொன்ன அவதி நாட்களில் மயக்கம் ஏற்பட்டால் சிகிச்சைச் செய்யாமல் நீங்கவும். மயக்கம் ஏற்பட்டால் மேலும் சில குறி குணங்கள் தோன்றும். அதையும் உன்னிப்பாக கேட்பாய்.

குறிப்பாக நோயின் குணம் மாறுபடும். வர்மபாதிப்பின் தன்மையால் மயக்கம் எழும்; நோயாளியின் முகம் ஒரு பக்கமாக கோணலுறும்; கண்கள் அடைபடும்; செவி கேட்காது; நாக்குழறல் உண்டாகும்; உமிழும் எச்சி விசையற்று விழும். இந்தக் குறி குணங்கள் நோயாளியிடம் காணப்பட்டால் மருத்துவம் செய்ய வேண்டாம்.

8. நட்சத்திர வர்மம்

இடம் :- கடைக்கண் பகுதியில் ஒரு இறை (விரல்) (2.5 செ.மீ)க்குக் கீழாக உள்ளக் குழியில் நட்சத்திர வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இவ்விடத்தில் வர்மம் கொண்டால் கண்கள் மஞ்சள் நிறமாக மாறும். முகமும் மஞ்சள் நிறமாகும். அடிபட்டவனின் முகம் வேறுபடும். முகத்தை ஒரு பக்கமாக இழுத்து வைக்கும். உடல் முழுவதும் வியர்வை பெருகும். செவிகள் கேட்காது. கண்கள் சிவந்து சீற்றமுறும். பக்கவாட்டில் கண்விழிகளை இழுத்து வைக்கும். நாக்குக் குழறும். வாய் புலப்பம் ஏற்படும். உடல் தன்னிலைக்கெட்டு மல்லார்ந்து வானை பார்த்த நிலையில் காண்பர். உடல் துடிதுடிக்கும். வாயிலிருந்து நீர் வடியும்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நேரத்திலிருந்து ஏழு மணி பத்து நிமிடத்திற்குள் இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- அடிபட்ட கண்ணின் நேராக பின்புறத்தில் கையை விரித்து சரிவாகத் தட்டவும். அடிபட்ட கண் பகுதியினை மெதுவாகத் தடவிவிட வேண்டும். அத்துடன் இரண்டு விலாப்புறங்களையும், முதுகு - மார்புப் பகுதியையும் தடவிட வேண்டும். இன்னும் நோயாளியின் தலையில் (உச்சியில்) மருத்துவர் தன் கையை வைத்து, அக்கையின் மீது மறுகையால் ஒரு தட்டு தட்டவும். மருத்துவர் சுக்கை தன் வாயிலிட்டு மென்று அதன் வேகத்தை நோயாளியின் செவி, நாசி இவைகளில் ஊதிவிடவும். வர்மம் இளகும்.

தொடர்ந்து தக்க மருந்துகளை செய்து நோயாளிக்கு தரவும்.

9. காமபூரி வர்மம்

இடம் :- காமபூரி வர்மம், நட்சத்திர வர்மத்திலிருந்து இரண்டுவிரல் (5 செ.மீ) கீழாக உள்ள எலும்பில் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் உடன் மயங்கும். விழிகள் பிதுங்கும். கீழே விழுந்துவிடுவர். நாக்கு வெளியேத் தள்ளும். கூப்பிட்டால் காது கேட்காது. வாயிலிருந்து நுரை வழியும். உடல் வில் போல் வளைந்து விடும். கொடிய வர்மம் கொண்டவரைப் போல் காணப்படுவர். கண்பார்வையும் குறையும்.

மாத்திரைக்கு மிஞ்சி காமபூரி வர்மம் கொண்டால் மரணம் ஏற்படும்.

இளக்கும் காலம் :- காமபூரி வர்மம் கொண்ட 1 மணி 15 நிமிட நேரத்திற்குள் முறைப்படி இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- முதலில் கண்களை பார்வையிடவும். கண்கள் சிவந்து காணப்பட்டால் மருத்துவம் செய்யாமல் விலகவும். இல்லையெனில் அடங்கலில் ஊன்றி மயக்கம் தெளிவிக்கவும். பின்பு வெளியே தள்ளியிருக்கும் நாக்கை உள்ளே தள்ளவும். (வலதுபக்க மார்பின் ஒரு விரல் மேலாக அழுத்தவும். அல்லது நோயாளியின் தொண்டை பதப்பில் அழுத்தித்தடவி விடவும். நாக்கு உள்ளே போய்விடும்). அடுத்து, அடிபட்ட இடத்திற்கு நேர் எதிர்புறம் மருத்துவர் தம் கையை விரித்துவைத்து பதமாகத் தட்டவும். மேலும் மருத்துவர் தமது இடது கையை நோயாளியின் தலையின் மேல் விரித்து வைத்து, வலது கையால் ஒரு குத்து விடவும்.

மருத்துவர் சுக்கை தனது வாயிலிட்டு மென்று அதன் வேகத்தை நோயாளியின் காது, மூக்கு இவற்றில் ஊதவும். மயக்கம் தெளியும். கண்களை திறந்து பார்ப்பர்.

முசுணையின் முதிர்ந்த இலையைப் பிழிந்து சாறு எடுத்து வர்ம முற்றோரின் தலையில் வைக்கவும்.

*எவ்வளவு சிகிச்சைச் செய்தாலும் நோயாளி உயிர் பிழைப்பது கஷ்டம்.

10. நுனி (மூர்த்தி) (பசுமை) வர்மம்

இடம் :- நுனி வர்மம், மூக்கின் அற்றத்தில் (நுனியின்) சற்று உள்ளாக நிலைத்துள்ளது.

குணம் :- நுனி வர்மத்தில் வர்மம் கொண்டால் நோயாளி பதறி எழுவர். மயக்கம், சன்னி ஏற்படும். உடல் குளிர்ந்து விடும்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நேரத்திலிருந்து 4 மணி 45 நிமிடத்திற்குள் நோயாளியை இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- நோயாளி மயக்கமாக இருந்தால் முதலில் மயக்கம் தெளிவிக்கவும். நோயாளியின் இரண்டு கால்களையும் தடவித் தாழ்த்திவிடவும். முதுகு வரியை மேலிருந்து கீழாகத் தடவித்தாழ்த்தி, சங்கு திரியை மெதுவாக அசைத்து அசைத்து விடவும். பிறகு தலை மயிரை (உச்சிமுடியை) பிடித்துத் தூக்கி, மருத்துவர் தம் கையினால் உச்சியில் ஒரு அடியும் அடிக்கவும். இதனால் வர்மம் இளகும்.

பின்னர் இருபது நாட்கள் தொடர்ந்து வர்ம தைலம் (காயத்திருமேனி எண்ணெய்) இட்டுத் தடவி விடவும்.

இங்ஙனம் செய்தாலும், 845-ம் நாள் மரணம் ஏற்படும்.

11. திலர்த வர்மம் (பொட்டு வர்மம்)
(சூடரொளியின் காலம்)

இடம் :- இரண்டு புருவங்களுக்கு இடையில் (மத்தியில் = நெற்றி நடுப்பகுதியில்) திலகம் இடுகின்ற இடத்திலிருந்து ஒரு நெல்லிடை கீழாக திலர்த வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- திலர்த வர்மத்தில் பாதிப்பு ஏற்பட்டால் கண்கள் சிவந்து, மயக்கம் ஏற்படும். வாய் பிளந்த நிலையில் நிமிர்ந்து காணப்படுவதோடு, பார்வையும் வானைப் பார்த்து இருக்கும். பேச இயலாது.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நேரத்திலிருந்து 1 மணி 30 நிமிடத்திற்குள் திலர்த வர்மம் பாதித்தவரை இளக்க வேண்டும்.

குறிப்பு :- இந்தநேரம் கடந்தால் மருத்துவம் செய்ய வேண்டாம். மரணம் ஏற்படும்.

இளக்குமுறை :- மருத்துவர் தன் மூன்று விரல்களால் அடங்கலில் ஊன்றி, திலர்த வர்ம முற்றோரை எடுத்திருத்தி இறைவனை துதித்து பங்கன்மால் சிவசக்தி நரம்பைப் பற்றி மாத்திரைக்கு அளவாக இளக்கவும்.

பின்பு அடிபட்ட நோயாளியின் சிரசு முடியை பிடித்துத் தூக்கி இருத்தவும். மருத்துவர் தம் கையை கவிழ்த்தி, நோயாளியின் பிடரிப்பாகத்தில் சற்று பலமாகவும், சரிவாகவும் அடிக்கவும். நோயாளியின் இருகைகளையும் பிணைத்து நோயாளியின் தலையின் மீது வைத்துக் கொண்டு, அந்தக்கைகளின் மீது மருத்துவர் தம் கையால் ஒரு அடி அடிக்கவும். பின்னர் மருத்துவர் சுக்கை தன் வாயிலிட்டு மென்று அதன் வேகத்தை நோயாளியின் மூக்கிலும், காதிலும் ஊதி விடவும்.

கிலி பிடித்திருந்தால் கும்பத்தில் நீர் மொண்டு வந்து செபித்து, முகத்தில் நீர் கோரி எறியவும்.

இரண்டு நாட்கள் வர்மம் கொண்ட இடங்களில் தடவி விடவும். தொடர்ந்து போதிய மருந்துகளை நோயாளிக்கு ஊட்ட நலமுறுவர்.

12. மின் வெட்டி (முன்வெட்டி) (விழி பிதுங்கி) வர்மம்

இடம் :- முன் வெட்டி வர்மம், திலர்த வர்மத்தின் அரைவிரல் கீழாக (புருவம், மூக்கு இணையும் இடத்தில்) வலது பக்கம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் உடன்மயக்கம் ஏற்படும். வர்மமுற்றோர் கீழே மல்லாந்து விழுவர். வாய் பிளந்து இருக்கும். உடனே அனல் அதிகரிக்கும். காது

அடைந்துவிடும். செவி கேளாது. உடல் கடுமையாக வலிக்கும். மூக்கு, கண், காது, வாய், தாடை எலும்புகள் கடினமாக பாதிக்கப்பட்டு, இரத்தம் அதிகமாகக் கொட்டும். உடலில் அசதி ஏற்படும். உடலின் கனம் குறைந்துவிடும். உடல் வெடு வெடென்று நடுங்கும்.

இளக்கும் காலம் :- மின்வெட்டி வர்மம் கொண்ட நேரத்திலிருந்து 3 மணிக்குள் நோயாளியை இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கம் தெளிவிக்கவும். பின்பு நோயாளியின் இரண்டு கைகளையும் மடக்கிய நிலையில் வசதியாக உட்கார வைக்கவும். இரண்டு கைகளையும் நன்றாக உதறச் சொல்லவும். இரண்டு விலாப்பக்கங்களையும் அழுத்த மாகத் தடவி விடவும். கூழுத்தை மேலும் - கீழும், வலது - இடது புறமாக அசைத்து விடவும். பொறி இடங்களில் ஒத்தடமிடவும்.

குறிப்பு :- மின்வெட்டி வர்மம் கொண்டவுடன் கண்களில் மின் மினி பூச்சிப் பறப்பது போல் இருக்கும். அல்லது மின் வெட்டினாற்போல் இருக்கும். எனவே இந்த வர்மத்துக்கு மின்வெட்டி என்ற பெயர் வந்தது போலும்.

குறிப்பிட்ட நேரத்திற்குள் மின்வெட்டி வர்மமுற்றவரை இளக்காவிட்டால் அலகு(வு) ஒரு பக்கமாக கோணலுறும்.

13. மந்திரக் காலம்

இடம் :- மந்திரக்காலம் என்ற வர்மம் கண்ணின் மேல் புருவத்தின் நடுவில் உள்ள குழியில் நிலைத்துள்ளது.

குணம் :- மந்திரக்காலத்தில் வர்மம் கொண்டால் கண்கள் விழித்தபடியே இருக்கும். அல்லது அடைத்துவிடும். தூக்கம் வராது. மயக்கம் வரும். முகம் சீறி காணப்படும். அடிக்கடி கொட்டாவி விடுவர். மற்றும் மின் வெட்டி வர்மம் கொண்டால் காணப்படும் சில குறி குணங்களையும் மந்திரக் காலம் கொண்டவரிடம் காணலாம்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நேரத்திலிருந்து இரண்டு மணிக்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- மின்வெட்டி வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை மந்திரக் காலம் கொண்ட நோயாளிக்குச் செய்யவும்.

14. அடக்க வர்மம்

இடம் :- அடக்சு வர்மம், மந்திரக்காலத்தின் இரு பக்கங்களிலும் நிலைத்துள்ளது.

15. நேம வர்மம்

இடம் :- நேம வர்மம் கண்ணின் கருவிழியின் நடுவில் நிலைத்துள்ளது.

குணம் :- நேம வர்மத்தில் பாதிப்பு ஏற்பட்டால் சயம் மீறும். மூச்சு அடைக்கும். தலை சீற்றமுறும். தலையை உருட்டுவர். உடல் சீற்றமுடன் காணப்படும். உடல் குளிர்ந்து விடும். சன்னி ஏற்படும். நேம வர்மப் பாதிப்பு அசாத்தியத் தன்மையுடையது.

16. பட்சி வர்மம்

இடம் :- பட்சி வர்மம், பட்சத்தின் கீழாக (கருவிழியின் அரை விரல் (1.5 செ.மீட்டர்) கீழாக நிலைத்துள்ளது. இதுவும் அசாத்தியப் பிரிவை சார்ந்தது.

17. கண்ணாடி (மூக்கிறாணி) வர்மம்

இடம் :- மூக்கின் நடுப்பகுதி (மூக்குக் கண்ணாடி அணிந்தால் அது மூக்கில் எந்த இடத்தில் பதியுமோ, அந்த இடத்தில் கண்ணாடி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் உடனடியாக மயக்கம் ஏற்படும். உடல் தளர்ந்து விடும். காதிலும் மூக்கிலும் இருந்து இரத்தம் வடியும். மாத்திரைக்கு மிஞ்சி வர்மம் கொண்டால் மரணம் ஏற்படும்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நேரத்திலிருந்து 1 மணி 30 நிமிடத்துக்குள் நோயாளியை இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கம் தெளிவிக்கவும். பின்பு மின்வெட்டி வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை கையாளவும்.

18. பாலவர்மம்

இடம் :- நேமவர்மத்தின் (கண் கருவிழி நடுவிலிருந்து) அரை விரல் கீழாக பால வர்மம் உள்ளது.

குணம் :- இவ்விடத்தில் வர்மம் கொண்டால் உதிரசன்னி ஏற்படும். சிலேற்பனம் மீறும். அஷ்டகுன்மம், கொளுத்து, வலிப்பு ஏற்படும்.

வர்ம பாதிப்பு அளவுக்கு மீறாது இருந்தால் பிற்காலத்தில் சயம், பாண்டு, ஈளை எழும்.

இது அசாத்தியப் பிரிவைச் சார்ந்தது.

19. சூண்டிகை வர்மம்

இடம் :- சூண்டிகை வர்மம், பாலவர்மத்தின் அருகில் உள்ளது.

20. கொண்ட வர்மம்

இடம் :- சூண்டிகை வர்மத்தின் அருகில் கொண்ட வர்மம் நிலைத்துள்ளது.

21. கூறுவர்மம்

இடம் :- செவியிலிருந்து நான்கு அங்குலம் (10 செ.மீட்டர்) கீழாக கூறுவர்மம் நிலைத்துள்ளது.

22. ஒட்டுவர்மம் (குந்தக்காலம்) (முன்னோட்டு வர்மம்) (அடிநாடி வர்மம்)

இடம் :- ஒட்டுவர்மம் கீழ்நாடியின் அடிப்பகுதியில் சற்று கீழாக (வெட்டுபோல் காணும் இடத்தில்) நிலைத்துள்ளது.

குணம் :- இவ்விடத்தில் வர்மம் கொண்டால் மயக்கம் வரும். சன்னி தோன்றும். நெஞ்சிலும், வயிற்றிலும் வாய்வு அதிகரித்து வேதனை ஏற்பட்டு, கூச்சலிட்டு புலறிவிடுவர். உடல் வில் போல் வளைந்து நிமிர்ந்து விறைத்துவிடும். நெஞ்சடைக்கும். கண்கள் சிவக்கும். குப்புற விழுவர். புரளுவர். வேதனை

அதிகமாகி துடி துடிப்பர். இரண்டு நாடிகளும் பூண்டு விடும். வர்மம் கொண்ட மூன்று மணி நேரத்தில் வாந்தி உண்டாகும்.

இளக்கும் காலம் :- ஒட்டு வர்மம் கொண்ட நேரத்திலிருந்து 7 மணி 30 நிமிடத்துக்குள்ளாக இளக்கவும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கம் தெளிவிக்கவும். அடுத்தாற்போல் நோயாளியின் கால்களை மடக்கி சம்மணக்காலிட்டு உட்காரச் செய்து, தோள்களை பிடித்து, இடுப்பை அசைத்துவிடவும். கை-கால்களை உதறச் செய்யவும். நோயாளியின் கை-கால்களை மாறி மாறிப் பிடித்து மடக்கி, நீட்டி, உயர்த்தி, உடம்பைத் தூக்கி உதறவும். பிடரி நரம்பைப் பிடித்து ஒரு தட்டு போடவும். இன்னும் உச்சியில் கையால் ஒரு அடி போடவும். மூக்கு, முகம் இவைகளை தடவி விடவும். சாமையரிசி கஞ்சி தயார் செய்து சூடாக சாப்பிட கொடுக்கவும்.

குறிப்பு :- இங்ஙனம் செய்தாலும் இரண்டு ஆண்டுகள் கழிந்தப் பின்பு ஒட்டுவர்மம் கொண்ட நோயாளியின் கண்ணும், மூக்கும் பக்கவாட்டில் கோணி வைக்கும்.

23. உறக்க வர்மம்

இடம் :- அலகின் மேலாக (கீழ்நாடியில் தாடை எலும்பின் கீழ் பகுதியில் - தரல் வளையின் வலது - இடது பகுதிகளில் கழச்சி வடிவத்தில் ஒருவித சுரப்பி காணப்படும்) இடத்தில் உறக்க வர்மம் நிலைத்துள்ளது.

இந்த இடத்தில் அழுத்தி பிடித்தாலும் வர்மம் உண்டாகும்.

குணம் :- உறக்க வர்ம நிலையத்தில் பாதிப்பு ஏற்பட்டால் நோயாளி நித்திரையில் அரைக் கண்ணிட்டு தூங்குவது போன்ற நிலையில் காணப்படுவர்; அல்லது தூங்குவர். விட்டு விட்டு இமைகள் மூடி மலரும். உடலில் சூடு தோன்றும். உடல் பொருமும். வாய் பிளந்து நாக்கு வெளியே தள்ளும். தளர்ச்சை ஏற்படும்.

இளக்கும் காலம் :- இவ்வர்மம் கொண்ட மூன்று மணி நேரத்துக்குள் இளக்க வேண்டும்.

இந்த நேரம் தாண்டினால் மரணம் ஏற்படும்.

இளக்குமுறை :- நோயாளியை பிடித்திருத்தி, அவர் கைகளை அவரது உச்சி மீது பிணைத்து வைத்து, அதன்மீது

மருத்துவர் தம் கையால் ஒரு தட்டு போடவும். பிடரிக் குழியின் கீழாக இலேசாக ஒரு குத்து போடவும். முதுகு வரியைத் தடவித் தாழ்த்தி விடவும். தலையை மேலும் கீழும், வலமும்-இடமும் அசைத்து விடவேண்டும். நோயாளியின் இடுப்புப் பாகத்தை வலமும்-இடமுமாக அசைத்து விடவும். பின்னர் [illegible] கைகளை பிணியாளியின் கமுக்கூட்டில் இட்டுத் தூக்கி உடம்பை உதறிவிடவும்.

பின்னர் மருத்துவர் சுக்கை தனது வாயிலிட்டு மென்று, அதன் வேகத்தை நோயாளியின் செவியிலும் மூக்கிலும் ஊதவும்.

24. சங்குதிரி (சங்கு பூட்டு) வர்மம்

இடம் :- சங்குதிரி வர்மம் தொண்டைபின் (குரல்வளையில்) இரண்டு பக்கமும் நிலைத்துள்ளது.

குணம் :- இவ்விடத்தில் வர்மம் கொண்டால் உடன் மயங்கும். மூச்சு பதறும். முகம் கோணும். வயிறு கனத்துவிடும். பேச்சு வராது. விழிகள் பிதுங்கும். சன்னி ஏற்படும்.

இளக்கும் காலம் :- சங்குதிரி வர்மம் ஏற்பட்ட நோயாளியை உடன் இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- முதலில் அடங்கலில் ஊன்றி மயக்கத்தை தெளிவிக்கவும்.

பின்னர் நோயாளியை உட்காரவைத்து, கீழ் நாடியை சற்று மேலாக ஏந்தி, உச்சியில் மருத்துவர் தனது இடதுகையை வைத்து, வலது கையால் ஒரு குத்துவிடவும். நாடியை பிடித்து வலது-இடது பக்கங்களில் அசைத்துவிடவும். இதனால் சங்குதிரி வர்மம் இளகும்.

மற்றும் தக்க மருந்துகள் செய்து நோயாளிக்கு சாப்பிட கொடுக்கவும்.

குறிப்பு :- மூன்று மாதம் கழித்து காய்ச்சல், ஆஸ்துமா முதலிய நோய்கள் உண்டாகும்.

25. சுமை (சிமை) (பொறி) வர்மம்

இடம் :- சுமை வர்மம் சங்குதிரி வர்மத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீட்டர்) கீழாக கழுத்தின் வலது பக்கம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் வாயிலிருந்து நுரை-பதை தள்ளும்.

இளக்கும் காலம் :- வர்மப்பாதிப்பு ஏற்பட்ட உடன் இளக்கவும்.

இளக்குமுறை :- அடங்கல் முறைப்படி தடவி இளக்கவும்.

26. காக்கட்டை வர்மம்

இடம் :- சுமை வர்ம நிலையத்திலிருந்து ஐந்து விரல் அருகே (தோளிலிருந்து இரண்டு அங்குலம் (5. செ.மீ.) நீங்கி) வெளிப்புறத்தில் காக்கட்டைவர்மம் நிலைத்துள்ளது. அதாவது தோள் கழுத்தோடு சேரும் பகுதியிலுள்ள பள்ளம். இது இரண்டு தோள்களிலும் உண்டு.

குணம் :- காக்கட்டை வர்மத்தில் பாதிப்பு கொண்டால் மயக்கம் ஏற்படும். தலை குழைந்துவிடும். கழுத்தில் தாங்க முடியாத வேதனை ஏற்படும். சில நேரத்தில் வாய்வழியாக இரத்தம் வெளி வரும். உடல் நிமிர்ந்து விடும். கைகால்களில் கொளுத்துப் பிடிப்பு ஏற்படும். நாடியை சோதனை செய்து பார்த்தால் தொந்தமாக இருக்கும்.

இளக்கும் காலம் :- காக்கட்டை வர்மம் கொண்ட நேரத்திலிருந்து நான்கு மணிக்குள்ளாக இளக்கவும்.

இந்நேரத்திற்குள் இளக்காவிடில் கேடுவிளையும். மரணமும் ஏற்படலாம். கழுத்துக் குழைவு நிரந்தரமாகவே ஆகிவிடும். வர்மம் கொண்ட பக்கத்தின் கை நிரந்தரமாக முடமாகும்.

இளக்குமுறை :- அடங்கலில் உன்றி முதலில் மயக்கத்தை தெளிவிக்கவும். பின்னர் விலாவின் இரண்டு பக்கங்களிலும் நிதானமாகத் தடவி விடவும். இரண்டு கைகளையும் நீட்டி-மடக்கி, மேலாகத் தூக்கி தாழ்த்தி விடவும்.

தொடர்ந்து தக்க மருந்துகள் செய்து நோயாளிக்குக் கொடுக்கவும்.

குறிப்பு :- மிளகை நீர் விட்டரைத்து கண்களில் அஞ்சனம் எழுதவும். கண்களிலிருந்து நீர் வடிந்தால் காக்கட்டை வர்மபாதிப்பு சாத்தியம் என்றும், நீர் வராவிடில் அசாத்தியம் என்று சோதனை மூலம் தெரிந்து கொள்ளவும்.

27. கதிர் (வில்வெட்டி) வர்மம்

இடம் :- அடித் தொண்டையிலிருந்து 4 விரல் (10 செ.மீ) தாழ்வாக கதிர் வர்மம் நிலைத்துள்ளது. (காரை எலும்பின் கீழே இரண்டு பக்கமும் பக்கவாட்டில் தள்ளி உள்ளது).

குணம் :- கதிர் வர்ம நிலையத்தில் ஊனம் கொண்டால் வாய் பேச முடியாது. காய்ச்சல் உண்டாகும். தலை சுழன்று மயங்கி கீழே விழுந்து விடுவர். இரத்த வாந்தி ஏற்படும். கண்களிரண்டும் வெளியே தள்ளும். மயக்கம் ஏற்படும். தொடர்ந்து வாந்தி, விக்கல் தோன்றும். கழுத்து ஒரு பக்கமாக சாய்ந்துவிடும். நாக்கு உள்ளே இழுத்து விடும். பேச்சுவராது. மூக்கிலிருந்து நீர் வடியும். சுயநினைவு இழந்து விடுவர். குறட்டை யிட்டு தூங்குபவர் போல் காணப்படுவர். கதிர் வர்மம் கொண்ட ஆறு நாட்களுக்குள் கபம் தோன்றும்.

கதிர் வர்ம நிலையத்தில் மாத்திரைக்கு மிஞ்சி ஊனம் கொண்டால் பிழைப்பது அரிது.

குறிப்பு :- இந்த வர்மம் கொண்டு நாக்கு குழறாமல் இருந்தால் மட்டுமே சிகிச்சைச் செய்ய வேண்டும். சீதம் ஏற்பட்ட மூன்று மணி நேரத்தில் மரணம் ஏற்படும்.

28. கதிர் காம வர்மம்

இடம் :- கதிர் வர்ம நிலையத்திலிருந்து 3 அங்குலம் வெளியே தள்ளி கதிர் காம வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இவ்விடத்தில் வர்மம் கொண்டால் மயக்கம் ஏற்படும். சன்னி தொடர்ந்து வரும். மயக்கமாக இருக்கும்போது பெரிய சப்தத்துடன் குறட்டைவிடுவர். உடல் அபரிதமாக குளிர்ந்து விடும். திடீரென காய்ச்சல் ஏற்பட்டு உடல் அனலாகி கொதிக்கும். அடுத்து உடல் குளிரும். உடல் குளிர்ந்த மூன்று மணி நேரத்தில் மரணம் ஏற்படலாம்.

கதிர் காம வர்மம் அசாத்தியப் பிரிவைச் சார்ந்தது.

இளக்கும் காலம் :- கதிர் காம வர்மம் கொண்ட மூன்று மணி நேரத்துக்குள் பாதிக்கப்பட்ட வரை இளக்க வேண்டும். தவறினால் உயிருக்கு ஆபத்து விளையும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கத்தைத் தெளிவித்து சன்னியை தீர்க்கவும். தொடர்ந்து வர்ம மருத்துவப்படி இளக்கு முறை செய்யவும்.

29. காரை (சக்தி) வர்மம்

இடம் :- கதிர்வர்ம இடத்திலிருந்து 1 ½ விரல் (4. செ.மீ) கீழாக (அடித் தொண்டையிலிருந்து 5 ½ விரல் கீழாக) காரை வர்மம் உள்ளது.

காரை வர்மம் அசாத்தியப் பிரிவைச் சார்ந்தது.

30. திவளை வர்மம்

இடம் :- காரை (சக்தி) வர்மத்தின் கீழாக (காறை எலும்பின் ஐந்து விரல் கீழாக) பக்கவாட்டில் திவளை வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- திவளை வர்ம நிலையத்தில் வர்மம் கொண்டால் உடன் மயக்கம் ஏற்படும். மூக்கிலிருந்து நீர் வடியும். வாயில் நுரைதள்ளும். கை-கால்கள் வலிக்கும். இந்த வர்மத்தில் அடிபடும் போது அந்தப் பக்கத்து நுரையீரல் கடுமையாக பாதிக்கும். காலக்கிரமத்தில் ஆஸ்துமா நோய் எழும். இதனை தடுக்க முடியாது.

இளக்கும் காலம் :- திவளை வர்மம் கொண்ட ஏழு மணி நேரத்திற்குள் இளக்குமுறை செய்ய வேண்டும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கத்தை தெளிவிக்கவும். அடுத்தாற்போல் வர்மம் கொண்ட இடத்திற்கு எதிர்பக்கம் அழுத்தித் தேய்க்கவும். பின்புறம் (முதுகுபக்கம்), மற்றும் விலாப் புறங்களில் அழுத்தித் தேய்க்கவும்.

குறிப்பு :- இளக்கு முறை செய்த பின்பு மயங்காமல் இருந்தால் இரண்டு மாதங்களுக்குப் பிறகு சயம், ஆஸ்துமா வருவதை தவிர்க்க இயலாது. சயத்தால் மரணம் ஏற்படும்.

31. ஏந்தி வர்மம்

இடம் :- திவளை வர்ம இடத்திலிருந்து இரண்டு விரல் (5 செ.மீ) கீழாக பக்க விலாக்களில் ஏந்தி வர்மம் நிலைத்துள்ளது.

குறிப்பு :- வலது பக்கமுள்ளதை வலமேந்தி என்றும், இடது பக்கமுள்ளதை இடமேந்தி எனவும் கூறுவர்.

குணம் :- ஏந்தி வர்மப்பாதிப்பால் சன்னி வரும். கை -கால்களில் களைப்புத் தோன்றும். காது கேளாது.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட மூன்று மணி நேரத்துக்குள் இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- வர்ம முறைப்படி இளக்கவும்.

குறிப்பு :- ஏந்தி வர்மம் பாதிக்கப்பட்டவருக்கு எங்ஙனம் சிகிச்சைச் செய்தாலும், வலது கையில் வாதம் வரும்.

32. கைக்கூட்டு வர்மம்

இடம் :- கைக்கூட்டு வர்மம், ஏந்தி வர்ம நிலையத்தின் பின்புறம் நிலைத்துள்ளது.

குணம் :- கைக்கூட்டு வர்ம நிலையத்தில் பாதிப்புக் கொண்டால் கைப்புஜமானது விழுந்துவிடும். மயக்கம் வரும். கை உயர்த்தி தடி போல் நிற்கச் செய்யும். நாக்குளறல் ஏற்படும். சன்னியும் தோன்றும்.

இளக்கும் காலம் :- கைக்கூட்டு வர்மம் கொண்ட வரை நான்கு மணி நேரத்திற்குப் பிறகு இளக்கவும்.

இளக்குமுறை :- வர்ம மருத்துவ முறைப்படித் தடவி இளக்கவும்.

குறிப்பு :- வாய்வு ஏற்பட்டால் குளிர்சுரம், குன்மம் உண்டாகும்.

33. குத்து வர்மம்
34. உள் குத்து வர்மம்
35. புள்பற்று வர்மம்
36. குறுக்கு வர்மம்

மேற்சொன்ன நான்கு வர்மங்களும் முதுகு புறதாரையில் நிலைத்துள்ளது. இந்த நான்கு வர்மங்களின் பாதிப்பும், குறி குணமும் ஒன்று போல் இருக்கும்.

37. தூசிவர்மம்
38. தூசிக வர்மம்
39. துடி வர்மம்
40. பிடி (இடி) வர்மம்
41. கனல் (கழலை) வர்மம்
42. வளை வர்மம்
43. ஈளை (சூலை) வர்மம்
44. வில் வர்மம்
45. அனுமார் வர்மம்

இடம் :- மேற்சொன்ன ஒன்பது வர்மங்களும் முலைக்காம்பைச் சுற்றி நிலைத்துள்ளது. (திவளை வர்மத்திலிருந்து இரண்டு விரல் (5 செ.மீ) கீழாக உள்ளது).

ஆண்களுக்கு சரியாக காணலாம்.

பெண்களுக்கு சரியாக கணிக்க இயலாது.

குணம் :- இந்த வர்மங்கள் நுரையீரலின் மீது நிலைத்துள்ளதால் இதற்கு சக்தி அதிகம். நுரையீரலில் உடனடியாக பாதிப்பு ஏற்படும். மயக்கம் வரும். மற்றும், வாய்வழியாக இரத்தம் கலந்த வாந்தி வரும். அடங்காத தண்ணீர் தாகம் எழும். பேதி, மூத்திரம் போகாது. சயம் தோன்றும். முதுகு வீங்கும். அதோடு கூனலும் ஏற்படும். கூனல் ஏற்படும்போது கை-கால் குறுகும்.

இந்த வர்ம நிலையங்களின் மறுபுறம் பாதிப்புக் கொண்டால் கிராணி நோய் ஏற்படும்.

இளக்கும் காலம் :- இந்த வர்மங்கள் கொண்ட மூன்று மணி நேரத்திற்குள் இளக்கவும். தவறினால் இரத்த வாந்தி ஏற்பட்டு மரணமடைவான்.

இளக்குமுறை :- மயக்கம் தெளிவித்து (மயக்கம் தெளிவது கடினம்), வர்மம் கொண்ட இடத்தின் எதிர்பக்கம் மார்பிலும், முதுகிலும் நன்றாகத் தடவி விடவும்.

குறிப்பு :- எங்ஙனம் சிகிச்சைச் செய்தாலும் மேல்படி வர்மங்களினால் ஏற்பட்ட பாதிப்பு நீங்காது.

46. கூம்பு வர்மம் (எம வர்மம்) (அனுமார் முடிப்பு வர்மம்)

இடம் :- கூம்பு வர்மம் நெஞ்சின் கீழாக (நெஞ்செலும்பு கூடுகள் சேரும் பகுதியில் கீழாக உள்ள குழியில்) குமிழ்போன்ற பகுதியில் (நெஞ்சுக் குழியின் நேர்கீழாக காணப்படும் கூம்பு பகுதிக்கு இரண்டு விரல் கீழாக உள்ளடங்கி) நிலைத்துள்ளது.

குணம் :- கூம்பு வர்ம நிலையத்தில் பாதிப்பு கொண்டால் உடல் அயரும். வியர்வை வெளிப்படும். குளிர் தோன்றும். உடல் குழைந்து விடும்.

இந்த வர்மத்தில் மாத்திரைக்கு மிஞ்சி பாதிப்பு ஏற்பட்டால் உட்பகுதி முறிவுண்டாகும். நோயாளி இருமும் போது இரத்தம் வாய்வழியாக வெளியே வரும்.

இளக்கும் காலம் :- இவ்வர்மம் கொண்ட 8 மணி 30 நிமிடநேரத்திற்குள் பாதிப்புக்குள்ளான நோயாளியை இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- நோயாளியை ஒரு சாண் உயரமான இடத்தில் இருத்தவும். மருத்துவர் தம் கையால் நோயாளியின் உச்சியில் ஒரு அடி அடிக்கவும். நேர்வர்மத்தின் மறுபக்கம் (முதுகுப்புறத்தில்) மருத்துவர் தம் பின்னாங்காலினால் ஒரு தட்டு தட்டவும். விலா, நெஞ்சு, முதுகுப் பகுதிகளை தடவி விடவும். இன்னும் நோயாளியின் கைகளைத் தூக்கி, அவர் தலை மீது கைகளை பிணைத்து வைத்து மருத்துவர் தம் கையினால் ஒரு அடி அடிக்கவும்.

பின்பு சுக்கை மருத்துவர் தன் வாயிலிட்டு மென்று, அதன் வேகத்தை நோயாளியின் மூக்கிலும், நாசியிலும் ஊதவும்.

அடுத்தாற் போல் தக்க மருந்துகள் செய்து கொடுக்கவும்.

47. அரிவர்மம், (விஷ்ணு வர்மம்)

இடம் :- அரிவர்மம், நேர் (உருத்திர) வர்மத்திலிருந்து (நெஞ்சின் நடுவிலிருந்து 8 விரல் கீழாக – அதாவது, கும்பு வர்மத்திலிருந்து 2 விரல் கீழாக) நிலைத்துள்ளது.

குணம் :- அரி வர்மம் கொண்டால் கண்கள் சிவந்து காணப்படும். மயக்கம் ஏற்படுவதோடு சன்னியும் தோன்றும். அட்டை சுருண்டு கிடப்பது போல் வர்மமுற்றோர் சுருண்டு கிடப்பர். மேலும் சத்தம் போடுமளவு வேதனை ஏற்படும். மூச்சு வாங்கும்.

இளக்கும் காலம் :- அரிவர்மம் கொண்ட 7 மணி 45 நிமிட நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- நோயாளியை தரை மீது செவ்வையாக இருக்கச் செய்து, கால் விரல்களில் நெட்டி (சொடுக்கு) எடுத்து விடவும். நோயாளியின் இரண்டு கைகளையும் தூக்கி, அவர் தலையில் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கவும். முதுகுப் புறத்தை நன்றாகத் தடவி, நடுமுதுகில் மருத்துவர் தம் கையால் ஒரு தட்டு போடவும். நோயாளியின் கமுக்கூட்டில் மருத்துவர் தம் கைகளை இட்டுத்தூக்கி இடவலமாக அசைத்து உதறி விடவும். பின்னர் தோள்களைப் பிடித்து இருத்தவும். மருத்துவர் தம் காலின் படத்தால் நோயாளியின் பிட்டிப்பாகத்தில் ஒரு தட்டு போடவும். இன்னும் நோயாளியின் உச்சி மீதும் மருத்துவர் தம் கையால் ஒரு தட்டு தட்டவும். மேலும் தலை பொருத்துகளை விரல்களால் அழுந்தித் தடவி விடவும். மூக்கு, முகம், புருவம், நெற்றி பாகங்களையும் தடவி விடவும்.

காலம் பிறளாது, நோயாளிக்கு அனுசரணையான மருந்துகள் செய்து கொடுக்கவும்.

குறிப்பு :- அரி வர்மம் கொண்டவர்கள் 90 நாட்கள் பத்தியம் காக்கவும். குறிப்பாக உடலுறவு கூடாது. மீறினால் வாயு, குன்மம், வலி தோன்றும். பித்தம் அதிகரித்து தலைசுற்று ஏற்படும். இதனைத் தொடர்ந்து சூலையும், பீனிசமும், இருமலும், இரத்தக்கபமும் ஏற்படும். பீசத்தில் வேதனை தோன்றும். முதுகுபுறத்தில் உளைச்சல் ஏற்பட்டு, பிடரி வழியாக முதுகுத்தாரையில் வேதனை தோன்றும்.

மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு எந்நேரத்திலும் மரணம் ஏற்படும்.

48. பன்றி வர்மம் (உறுமி வர்மம்)

இடம் :- கும்பு வர்ம நிலையத்திலிருந்து மூன்றுவிரல் கீழாக (தொப்புளிலிருந்து நான்கு விரல் மேலாக) பன்றிவர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- பன்றி வர்மம் கொண்டால் பன்றி உறுமுவது போன்று உறுமிக்கொண்டே இருப்பர். இரண்டு கண்விழிகளும் திறந்திருக்கும். சத்தமிட்டு கூப்பிட்டாலும் காது கேட்காது. வாய் பேச இயலாது. நினைவு கெட்டுப் போகும். உணர்வு இழப்பர். உடலானது குறுகி அட்டைபோல் சுருண்டு கிடப்பர்.

இளக்கும் காலம் :- பன்றி வர்மம் கொண்ட ஐந்து மணி நேரத்துக்குள் இளக்கவும். தவறினால் கேடுவிளையும்.

இளக்குமுறை :- பன்றி வர்மம் கொண்ட நோயாளியை எடுத்திருத்தி, இரு கைவிரல்களும் ஒன்றோடு ஒன்று பொருந்தும்படி பிணைத்து தலையில் வைக்கவும். பின்பு மருத்துவர் தம் கையினால் உச்சியில் ஒரு அடி போடவும். இவ்வர்ம பகுதியின் நேர் பின்புறம் (முதுகு வரியில் 12 அங்குலம் கீழாக) மருத்துவர் தம் படங்காலால் ஒரு தட்டு தட்டவும். தொண்டை பதப்பிலிருந்து கீழாகத் தடவி விடவும். இன்னும் நோயாளியை தூக்கி உதறி விட வேண்டும். கைகால்களை உதறிவிடச் சொல்லி, விரல்களில் நெட்டி எடுத்துவிடவும்.

இதன் பிறகு மருத்துவர் சுக்கை தன் வாயிலிட்டு மென்று அதன் வேகத்தை நோயாளியின் செவி, மூக்கு இவற்றில் ஊதிவிடவும். மூர்ச்சையும் தெளியும்.

மற்றும் தக்க மருந்துகள் செய்து நோயாளிக்கு கொடுக்கவும்.

49. அடப்பக் காலம்

இடம் :- முண்டெலும்பிலிருந்து நான்கு விரல் மேலே அடப்பக் காலம் நிலைத்துள்ளது. (முண்டெலும்பு என்பது விலா எலும்புகள் முடியக்கூடிய பகுதியில் இருக்கும் எலும்பாகும். இதனை முஷ்டி எலும்பு என்றும் கூறுவர். கழுக்கூட்டிலிருந்து நேர் கீழாக விலா எலும்பின் கடைசி நிலைத்துள்ளது). இது உடலின் இரண்டு பக்கங்களிலும் காணப்படும்.

குணம் :- அடப்பக் காலத்தில் வர்மம் கொண்டால் உடல் நிமிர்ந்து, மயக்கம் ஏற்படுவதுடன் கீழே விழுந்து விடுவர்.

வாயிலிருந்து நீர் வடியும். கை-கால்கள் முதிர்ந்து விடும். உடல் விறைத்து குளிர்ந்து விடும். பாதிக்கப்பட்டவரின் குறிகுணங்கள் பேதப்படும். கூப்பிட்டால் சத்தம் கேட்காது. பிணம் போல உணர்ச்சியற்று போவர்.

இளக்கும் காலம் :- அடப்பக் காலம் பாதித்த இரண்டு மணி நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- முதலில் நோயாளியின் மயக்கத்தைத் தெளிவிக்கவும். அடுத்து நோயாளியின் கால்களை மடக்கி, அவரை மருத்துவர் தன் நெஞ்சோடு அணைத்துத் தூக்கி, மருத்துவர் நிற்கும் இடத்திலிருந்து ஒரு அடி பள்ளத்தில் உட்கார வைக்கவும். மருத்துவர் தம் இடது கையை நோயாளியின் உச்சந் தலையில் வைத்து, அதன் மீது வலது கையால் ஒரு அடி அடிக்கவும். எந்தப் பக்கம் வர்மம் ஏற்பட்டதோ, அதன் எதிர்பக்க விலாப்புறத்தில் மருத்துவர் தம் காலினால் ஒரு தட்டுத் தட்டவும். முதுகு, நெஞ்சு, விலா பகுதிகளைத் தடவி தாழ்த்தி விடவும். மேலும் நோயாளியின் கமுக்கூட்டில் மருத்துவர் தனது கைகளை இட்டுத் தூக்கி உதறி விடவும். தொடர்ந்து வேண்டிய மருந்துகளை நோயாளிக்கு கொடுக்கவும்.

குறிப்பு :- அடப்பக் கால வர்மப் பாதிப்பு எந்த பக்கம் ஏற்படுகிறதோ, பாதிக்கப்பட்டவரின் அந்த பக்கம் வளர்ச்சிக் குன்றும்.

மாத்திரைக்கு மிஞ்சாது வர்மம் கொண்டால் நாளடைவில் கொளுத்துப் பிடிப்பு, உளைச்சல், கை-கால் குத்தல் போன்றவை எழும்.

50. முண்டெல்லு வர்மம்

இடம் :- முண்டெலும்பில் முண்டெல்லு வர்மம் நிலைத்துள்ளது அதாவது இந்த வர்மம் விலாவின் முன் பக்க எலும்பு வளைவில் சற்று கீழாக உள்ளது. இது உடலின் இரண்டு பக்கமும் காணப்படும்.

குணம் :- முண்டெல்லு வர்மத்தில் பாதிப்பு கொண்டால் வயிற்றினுள் குடல் பகுதி கலங்கிவிடும். இதனால் பேதி வெளியே தள்ளும். குளிர் சுரம் உண்டாகும். மயக்கம் ஏற்படும். இருமல், காய்ச்சல், சன்னி போன்றவை தொடர்ந்து எழும்.

இளக்குமுறை :- மயக்கம் நீக்கியப் பிறகு முண்டெலும்பின் நேர் பின்புறம் உள்ள முதுகுப் புறப்பகுதியினை மெதுவாகத் தடவி விடவும்.

வர்ம கிழாயம் ஊட்டவும். வர்ம தைலத்தை வர்மமுற்ற இடத்தில் பூசி, கையிதம் செய்யவும்.

குறிப்பு :- முண்டெல்லு வர்மத்தின் மீது ஓடும் நரம்பு மிகவும் சக்தியுள்ளது. பெண்கள் கர்ப்பமாக இருக்கும் போதும் இவ்வர்மத்தைப் பிடித்து இளக்கலாம். ஆனால் இதை கையாளுவோர் மிகவும் கவனமாக இளக்க வேண்டும்.

குறிப்பு :- ஒன்றரை மணி நேரத்திற்குப் முன்பு இறந்தவர்களின் உடலில் இந்நரம்பைப் பிடித்து இழுத்தால் சத்தமிடுவர். கர்ப்பிணி திடீரென கொள்ளும் அடி, இடி போன்றவைகளால் மயங்கி இன்னலுறும் போது, இந்த இடத்தைத் தடவினால் உணர்வு திரும்பும்.

இது சோதனைக் கேற்ற இடமாகும்.

51. வலிய அத்திச் சுருக்கி வர்மம்

இடம் :- விலா முண்டெலும்பிலிருந்து இரண்டு விரல் கீழாக வலிய அத்திச் சுருக்கி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- வலிய அத்திச் சுருக்கி வர்மம் கொண்டதும் மயக்கம் வரும். விலா எலும்புகள் முறிந்தது போலிருக்கும். விட்டு விட்டு பெருமூச்சு எழும். குறிப்பாக இந்த வர்மம் கொண்டவரின் உயரம் ஒரு பிடியளவு குறையும். உடல் குறுகி அயர்ந்துவிடும். நாக்குக் குழறும். வாய் மூடிவிடும். சன்னியும் தோன்றும்.

இளக்கும் காலம் :- வலிய அத்திச் சுருக்கி வர்மம் கொண்ட 1 மணி 30 நிமிட நேரத்திற்குள் இளக்க வேண்டும். தவறினால் இளக்க வேண்டாம். கேடு விளையும். கேடு விளையாதிருந்தால் 41 நாளில் அசாத்திய குறிகுணங்கள் தோன்றி மரணம் ஏற்படும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கத்தைத் தெளிவிக்கவும். நோயாளியை எடுத்திருத்தி, வர்மம் கொண்ட விலாவின் எதிர் விலாவில் மருத்துவர் தம் கையால் ஒரு தட்டு தட்டவும். உச்சியின் மீதும் ஒரு அடி அடிக்கவும். பிறகு, முதுகு எலும்புப் பகுதிகளை இதமாகத் தடவித் தாழ்த்தவும். இரண்டு விலா

பக்கங்களையும் ஒன்று போல் ஒத்துத் தடவவும். கழுத்தை அசைத்துவிட்டு, நோயாளியைத் தூக்கி உதறி இருத்தவும். கடைசியில் நோயாளியிடம் கை- கால்களை நன்றாக உதறிவிடச் சொல்லவும்.

தொடர்ந்து வர்மப்பாதிப்புகள் அகல போதிய மருந்துகள் நோயாளிக்குக் கொடுக்கவும்.

52. சிறிய அத்தி சுருக்கி வர்மம்

இடம்:- விலா முண்டெலும்பிலிருந்து முன்று விரல்கள் கீழாக (வலிய அத்தி சுருக்கி வர்ம நிலையத்திலிருந்து அரை விரலளவு தாழ்வாக) நிலைத்துள்ளது சிறிய அத்தி சுருக்கி வர்மம்.

குணம் :- சிறிய அத்தி சுருக்கியில் வர்மம் கொண்டால், வலிய அத்திச் சுருக்கி வர்ம நிலையத்தில் வர்மம் கொண்டால் காணப்படும் குறிகுணங்கள் காணப்படுவதுடன், வர்மமுற்றோர் நடுநடுங்கி சாய்வர். கை-கால்களை தரையில் பரதாபத்துடன் அடித்திடுவர். நோயாளிக்கு தாங்க முடியாத தாகம் ஏற்படும்.

இளக்கும் காலம் :- சிறிய அத்தி சுருக்கி வர்மம் கொண்ட 1 மணி -30 நிடிட நேரத்தில் நோயாளியை இளக்கவேண்டும்.

இளக்குமுறை :- மயக்கமாக இருந்தால் முதலில் மயக்கத்தைத் தெளிவிக்கவும்.

அடுத்தாற்போல் நோயாளியை எடுத்திருத்தி, இரண்டு விலாப்பகுதிகள், முதுகு, நெஞ்சு முதலிய பகுதிகளை சீராகத் தடவி விடவும். சிறிய அத்திச் சுருக்கி வர்மத்தின் நேர் பின்புறத்தில் (மறுபக்கத்தில் - முதுகு வரியில்) மருத்துவர் தம் படங்காலால் ஒரு தட்டு போடவும். நோயாளியின் கைகளை உயர்த்தி, அவரது தலையின் மேல் (உச்சியில்) பிணைத்து வைத்து அதன் மீது மருத்துவர் தன் கையால் ஒரு அடியும் போடவும். இரண்டு விலாட்பக்கங்களையும் தட.வி, நோயாளியைத் தூக்கி உதறி விடவும்.

மற்றும் சுக்கு, வெற்றிலை இவைகளை மருத்துவர் தனது வாயிலிட்டு மென்று அதன் வேகத்தை வர்மம் கொண்டவரின் இரு செவித்துவாரங்களிலும் ஊத வேண்டும். வர்மம் இளகும். பின்பு தக்க மருந்துகளை செய்து தரவும்.

குறிப்பு :- வலிய அத்திச் சுருக்கி வர்மம், சிறிய அத்திச் சுருக்கி வர்மம் இவைகளில் மாத்திரைக்கு மிஞ்சாது வர்மம் கொண்டால் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்த பாதிப்பு காணப்படும்.

53. சருதி வர்மம்

இடம் :- சிறிய அத்திச் சுருக்கி வர்ம நிலையத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீ.) மேலாக முன் சருதியும், ஐந்து விரல் (12.5 செ.மீ.) மேலாக பின் சருதியும் நிலைத்துள்ளது.

முன் பக்கமுள்ளதை முன் சருதி வர்மம் எனவும், பின் பக்கமுள்ளதை பின் சருதி வர்மம் எனவும் கூறுவர்.

இது உடலின் இரு பக்கங்களிலும் உண்டு.

குணம் :- இந்த இடங்களில் வர்மம் கொண்டால் வயிற்று வலி, சன்னி, கொளுத்துப் பிடிப்பு, உடல் முழுவதும் வீக்கம் போன்றவை எழும். உடலின் ஒருபக்கமாக வேதனை தோன்றுவதோடு பெரு மூச்சும் விடுவர். இடுப்புக்குக் கீழ் நடுக்கம் ஏற்படும். இரண்டு கால்களும் மரத்து விடும். நடக்க இயலாது.

இளக்குமுறை :- சருதி வர்மமுற்றவரை அடங்கல் முறைப்படித் தடவவும்.

குறிப்பு :- எங்ஙனம் செய்தாலும் வர்முற்றவரின் கால்கள் நடக்கும்போது பின்னிப் பிணையும். சருதி வர்மமுற்றவரால் வேகமாக நடக்க இயலாது. இதனை செம்மைப் படுத்துவது கடினம்.

54. பள்ளை வர்மம்

இடம் :- சருதி வர்மத்தைச் சார்ந்த விலாவினருகில் உள்ள அத்திச் சுருக்கி வர்மங்களின் முன்பாக உள்ள பள்ளையில் (தொப்புளின் வலது-இடது பக்கங்களில்) பள்ளை வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- பள்ளை வர்மம் கொண்டவுடன் உடல் கூனும். வாய்வு எழும்பும். முதுகில் அதிக வேதனை தோன்றும். இடுப்புப் பகுதி முறிவுற்றது போல் உணர்வர். இலேசான மயக்கம் தோன்றும்.

இளக்கும் காலம் :- பள்ளை வர்மம் கொண்ட ஏழு மணிநேரத்துக்குள் இளக்க வேண்டும்.

இளக்கு முறை :- முதலில் மயக்கத்தைத் தெளிவிக்கவும். மயக்கம் தெளிந்த பின், வர்ம அடங்கல் முறைப்படி தடவி இளக்கவும்.

55. சுருக்கு வர்மம்

இடம் :- வலிய அத்திச் சுருக்கி வர்ம நிலைய எலும்பின் மேலாக உள்ள எலும்பில் (பள்ளையின் எட்டாவது எலும்பில்) நிலைத்துள்ளது சுருக்கு வர்மம்.

குணம் :- சுருக்கு வர்மம் கொண்டால் மலம், மூத்திரம் வெளியேறாது அடைபடும். கால்கள் வலிக்கும். நாளடைவில் பல இன்னல்கள் ஏற்படும்.

இளக்குமுறை :- மலம்-மூத்திரம் வெளியேற வர்மமுறைப்படி தடவவும்.

56. காரீரல் வர்மம்

இடம் :- வெள்ளை ஈரலின் அருகில் உள்ள காரீரலில் காரீரல் வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- காரீரல் வர்மத்தில் பாதிப்பு கொண்டால் உள்வர்மம் கொண்டு பெருவிரலின் கீழே இரண்டு அங்குலத்தில் காணப்படும் நரம்பு (நாடி துடிப்பு அறிய பயன்படும் நரம்பு) தளர்ந்து மேலே எழும்பி வில்போல் வெளியே தெரியும்படியாக காணப்படும். உடல், தளர்ந்து வில்போல் வளைந்து விடுவதோடு விறைத்துவிடும். மேலும் தூசிக வர்ம பாதிப்பால் (38-வது வர்மபாதிப்பால்) காணப்படும் குறி குணங்களையும் காட்டும்.

இளக்கும் காலம் :- காரீரல் வர்மம் கொண்ட மூன்று மணி நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- தூசிக வர்மம் கொண்டால் செய்யும் இளக்கு முறையை காரீரல் வர்மப்பாதிப்பு ஏற்பட்டவருக்குச் செய்யவும்.

குறிப்பு :- காரீரல் வர்மம் மாத்திரைக்கு மிஞ்சி கொண்டால் வர்மம் கொண்ட நேரத்திலிருந்து முப்பது நிமிட நேரத்திற்குள் உயிர் பிரியும்.

இந்த வர்மநிலையத்தில் அடி இடி கொண்டால் பிழைப்பது அரிது. இது அசாத்தியப் பிரிவை சார்ந்த வர்மம். இளக்கினாலும் வர்மப் பாதிப்பு நலப்படாது. இரத்த வாந்தி ஏற்படும், மரணம் சம்பவிக்கும்.

57. தும்மி (வாயு) (தள்ளல் குழி) வர்மம்

இடம் :- தொண்டைக் குழியில் (குரல்வளையின் நேர் கீழே உள்ள குழியில் உட்பாகத்தில் (சங்கு வர்மத்தின் கீழே உள்ள குழியில்) தும்மி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் ஏற்பட்டால் சன்னி, தும்மல், மயக்கம், உடலெங்கும் வியர்வை எழும். கண்கள் சிவந்தேறும். நாக்கு உள்ளாக இழுபட்டு விடும்.

இளக்கும் காலம் :- தும்மி வர்மம் கொண்ட ஐந்து மணி நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கம் தெளியச் செய்யவும். வர்மமுறைப்படித் தடவி விடவும். மேலும் நோயாளியின் நெஞ்சில் மருத்துவர் தம் கையால் ஒரு அடி போடவும். வழக்கமாக தடவுவதை போல் மூக்கு, செவி இவைகளையும் தடவி இழுத்து விடவும். இடுப்பு, விலா பக்கங்களையும் தடவி விடவும். இங்ஙனம் செய்தப் பிறகு வசவெண்ணெயை உடலிலிட்டு சூடு வருமளவு தேய்க்கவும். வர்ம தைலத்தை நாசியிலும், செவியிலும் அடைக்கவும். இன்னும் சுடு தண்ணீரில் தலை முழுகச் செய்து, படலாதி எண்ணெயை உள்ளுக்குக் கொடுக்கவும்.

குறிப்பு :- இங்ஙனம் வர்ம பரிகாரங்கள் செய்தாலும் மூன்று மாதங்களுக்குப் பிறகு சுரமும், சயமும் தோன்றும். இந்த நோய்கள் தோன்றினால் கோழி கிழாயம் தயார் செய்து நோயாளிக்கு உள்ளுக்கு ஊட்டவும்.

58. கைகட்டி வர்மம்

இடம் :- தும்மி வர்மத்தின் கீழாக நான்கு விரல் அளவில் (நேர்வர்மத்தின் நான்கு விரல் மேலாக) நிலைத்துள்ளது கை கட்டி வர்மம்.

59. சடப்பிற வர்மம் (ஆனந்த சடப்பிற வர்மம்)

இடம் :- சடப்பிற வர்மம், மார்பிலிருந்து இரண்டு விரல் கீழாக குறிப்பாக அனுமார் வர்மத்திற்கு நேரே இருபக்கமும் முதுகில் (கை கட்டி காலத்தின் பின்புறம்) நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் ஏற்பட்டால் உடன் மயக்கம் வரும். தன்னுணர்வு கெடும். கண்கள் மூடாமல் திறந்தே இருக்கும். ஆனால் அடிபட்டவர் மயக்கமாக இருப்பர். உடலில் அதிக வேதனை ஏற்படும். அசதியும் தோன்றும்.

இளக்கும் காலம் :- சடப்பிற வர்மம் கொண்ட ஆறு மணி நேரத்திற்குள் இளக்க வேண்டும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கத்தை தெளிவிக்கவும். முதுகு வரியை தடவிவிடவும். மருத்துவர் தன் கால்களின் படத்தில் நோயாளியை இருத்தவும். மூன்றுமுறை கழுத்து முன்பக்கம் தாழ்த்தித் தடவவும். வயிற்றில் மூத்திரக் காலம், மலக்காலம் (சுகமெதுக்கி, இறுக்கி வர்மங்களை) தடவிவிடவும். அடுத்து பிட்டியின் மத்தியில் ஒரு தட்டு போடவும். உச்சி முடியைப் பிடித்துத் தூக்கி உச்சியில் ஒரு அடியும் போடவும். அடுத்து இரு காதுகளையும் மேலாகத் தூக்கி விடவும். நோயாளி உணர்வு பெற்று கண் விழிப்பர். இந்நிலையில் நோயாளியின் இரண்டு கைகளையும் மடக்கிக் கட்டி பலமாகத் தூக்கி உடலை உதறி விடவும். இப்பொழுது நோயாளி தெளிவடைந்து எழுந்து நடப்பர்.

இன்னும், வசிவெண்ணெய் கொண்டு வந்து உடல் முழுவதும் தடவி விடவும். இதை வாரத்தில் இரண்டு முறை செய்யவும். உள்ளுக்கு நெய்யும், தலையில் தேய்க்க தைலமும் கொடுக்கவும்.

60. கிளிப்புற வர்மம்

இடம் :- சடப்பிற வர்ம நிலையத்திலிருந்து ஒரு விரல் மேலாக (மார்பிலிருந்து ஒரு விரல் கீழாக) கிளிப்புற வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் வாயை ஒரு பக்கமாக இழுத்து வைக்கும். சிரிப்பு எழும். பேச இயலாது.

இளக்கும் காலம் :- கிளிப்புற வர்மம் கொண்ட ஏழு மணி நேரத்திற்குள் நோயாளியை இளக்கவும்.

61. கிளிமேக வர்மம்

இடம் :- கிளிப்புற வர்ம நிலையத்திலிருந்து இரண்டு விரல் அளவு மேலாக நிலைத்துள்ளது கிளிமேக வர்மம். (தோள்பட்டையின் பின்புறம் புஜ சிப்பியில்) தோளிலிருந்து இரண்டு அங்குலம் கீழாக நிலைத்துள்ளது.

குணம் :- கிளிமேக வர்மமானது உடல் பலவீனமானவருக்கு ஏற்பட்டால் 1 மணி 30 நிமிட நேரத்திற்குள் மயக்கம் எழும். அடுத்து கிளி கத்துவது போல் கத்துவர். கண்களிலிருந்து கண்ணீர் கொட்டும். தன் உணர்வை இழப்பர். பொருமலுடன் 'கூ'-என கூச்சலிடுவர்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட நான்கு மணி நேரத்திற்குள் இளக்கவும்.

குறிப்பு :- கிளிப்புறவர்மம், கிளிமேக வர்மம் என்ற இரண்டு வர்மங்களும் உடலின் இரண்டு பக்கங்களிலும் உண்டு. இவ்விரண்டு வர்மங்களையும் சேர்த்து **"பூணூல் வர்மம் " என்பர்.**

இடம் :- தோள்பட்டையில் கழுத்தினடி பகுதியில், அதாவது கழுத்தில் பூணூல் விழுமிடத்தில் நிலைத்துள்ளது.

குணம் :- இவ்வர்மம் கொண்டால் மயக்கம் ஏற்பட்டு விலகும். கொஞ்சம் கொஞ்சமாக கை-கால்கள் முடங்கும். கை-கால் மற்றும் அவயவங்களில் சுரணை இல்லாதுபோம். தொடர்ந்து இருமல் உண்டாகும். சன்னியும் தோன்றும். இரவு தூக்கத்தில் வாய் புலப்பம் ஏற்படும்.

இளக்குமுறை :- மயக்கமாக இருந்தால் முதலில் மயக்கத்தைத் தெளிவிக்கவும்.

சன்னி ஏற்பட்டிருந்தால் சன்னியை நிறுத்த வேண்டும்.

குறிப்பு :- சன்னி நிறுத்த வழிமுறை :- 1. கை பெருவிரல்-ஆள் காட்டி விரலுக்கு இடைப்பட்டப் பகுதி, 2. ஆள்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கும் இடைப்பட்டப் பகுதி, அல்லது 3. சுண்டுவிரலுக்கும் மோதிரவிரலுக்கும் இடைப்பட்டப் பகுதி. இவற்றில் ஏதேனும் ஒரு இடத்தை அழுத்தவும். சன்னி நிற்கும். பின்பு வர்ம முறைப்படி தடவி விடவும்.

குறிப்பு :- கிளிமேகவர்மம் கொண்டால் நாள் செல்லச் செல்ல நரம்புகளில் வீக்கம் ஏற்படும். பாதிக்கப்பட்ட இடத்தின் புஜம் வீழ்ந்து கோச்சல் ஏற்படும். உடலை ஒரு பக்கமாக

வளைத்துவிடும். பத்து வாயுக்களும் தன்னிலைக் கெடும். சீதம், வலிப்பு, கொளுத்து, சயம் ஏற்படும்.

தைலமிட்டு அடங்கல் முறைப்படி மருத்துவம் செய்தாலும் பயன் தாராது.

62. புஜ வர்மம்

இடம் :- புஜ வர்மம் காரை எலும்பின் முனையில் (காரை எலும்பின் இறுதிப் பகுதியில்) நிலைத்துள்ளது. இரண்டு புஜங்களிலும், புஜ வர்மம் உண்டு.

குணம் :- புஜ வர்மம் கொண்டால் கையை தூக்க இயலாது. உணர்வற்று விடும். அடிபட்ட புசத்தில் வீக்கம் உண்டாகும். தூக்கம் வராது. மயக்கம் ஏற்படும். கை-கால் திமிர் பிடித்தது போல் இருக்கும்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட ஒரு மணி 30 நிமிட நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- மயக்கம் நீங்கச் செய்து வர்ம முறைப்படி (திவளை வர்மம் கொண்டால் செய்யும் முறைப்படி) தடவி இளக்கவும்.

வர்மம் ஏற்பட்ட இடத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து காயத்திருமேனி எண்ணெயிட்டுத் தடவவும். இன்னும் நோயாளிக்குத் தக்க மருந்துகள் கொடுத்து பத்தியமாக இருக்கச் சொல்லவும்.

63. விலங்கடி வர்மம் (விலங்கு வர்மம்)

இடம் :- கழுத்தின் கீழே வலது - இடது பக்கங்களில் நெஞ்சின் மேல் பகுதியில் காணப்படும் பெரிய எலும்பு காரை எலும்பு எனப்படும். இந்த காரை எலும்பை ஒட்டி. சுழிவான பகுதி காணப்படும். இதுவே விலங்கடி வர்மம்.

(விலங்கு என்பது குறுக்கீடு என்ற ஒரு பொருள் உண்டு. இந்த வர்மம் மார்பின் மேல் பகுதியில் குறுக்காக அமைந்துள்ள காரை எலும்பில் அமைந்துள்ளதால் இந்த வர்மத்தை வில்ங்கு வர்மம் என்று கூறுவர்).

குணம் :- விலங்கடி வர்ம நிலையத்தில் பாதிப்பு கொண்டால் கையை கட்டிப் போட்டது போன்று

தூக்க முடியாத நிலை ஏற்படும். மயக்கம் வரும். சன்னி தோன்றும். தொடர்ந்து காய்ச்சல் எழும்.

இளக்கும் காலம் :- விலங்கடி வர்மம் கொண்ட பன்னிரண்டு மணி நேரத்திற்குள் நோயாளியை இளக்கவும்.

இளக்குமுறை :- மயக்கமாக இருந்தால் முதலில் மயக்கத்தைத் தெளிவிக்கவும்.

பின்பு, பிடரி வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையைச் செய்யவும். காயத்திருமேனி எண்ணெயிட்டு இளஞ்சூட்டில் ஒத்தடமிடவும்.

குறிப்பு :- விலங்கடி வர்மமானது மாத்திரைக்கு மிஞ்சி ஏற்பட்டால், கை நிரந்தரமாக பாதிக்கும்.

64. சுழியாடி (மேல் சுழியாடி) வர்மம்

இடம் :- முதுகுத் தண்டின் மேல் பகுதி (பிடரி வர்மத்திற்கு நான்கு விரல் கீழாக) அல்லது உச்சியிலிருந்து 11 விரல் கீழாக கடுகளவில் நிலைத்துள்ளது. இன்னும் விளக்கினால் பிடரியின் அருகில் பெரு நரம்பில் (முதுகுத்தண்டு ஆரம்பப் பகுதியில்) நிலைத்துள்ளது.

குணம் :- சுழியாடி வர்ம நிலைபத்தில் பாதிப்பு கொண்டால் மயக்கம், குளிர் காய்ச்சல் ஏற்படும். இது கடினமான வர்மம். இதில் மாத்திரைக்கு மிஞ்சி ஊனம் கொண்டால் பைத்தியம் ஏற்பட்டு நாய் போல் அலைவான்.

சுழியாடி வர்மம் கொண்டவர்க்கு கிரிசாத்துக் கிழாயம் உடனே கொடுக்கவும். மேலும் வர்ம தைலமிட்டு இதமான சூட்டில் ஒத்தடமிட வேண்டும். அடுத்தாற் போல் இளக்குமுறை செய்யவும்.

இளக்குமுறை :- சுழியாடி வர்மத்தால் பாதிக்கப்பட்டவர் மயக்கமாக இருந்தால் முதலில் மயக்கம் தெளிவிக்கவும். மயக்கம் தெளிந்தாலும் உணர்வு இருக்காது. கழுத்து முதல் இடுப்புவரை நன்றாகத் தடவி தாழ்ந்தி விடவும். பிட்டியின் மத்தியில் ஒரு அடி போடவும். உச்சி முடியை பிடித்துத் தூக்கிவிடவும். தொடர்ந்து, உச்சியில் ஒரு அடியும் போடவும். இரண்டு காதுகளையும் மேலாகத் தூக்கி விடவும். உணர்வு வரும்.

குறிப்பு :- இளக்குமுறை செய்தப் பின் நோயாளி ஏப்பம் விட்டால் வர்மம் இளகவில்லை என அறியவும். இதற்கு வர்ம குளிகையை கிரிசாத்துக் கிழாயத்தில் உரைத்துக் கொடுக்க வேண்டும். வர்மம் இளகி இதம் கிடைக்கும்.

எனினும் ஒரு வருடம் சென்றதும் பைத்தியம் தோன்றும்.

65. சுளுக்கு வர்மம் (காரைக் குழிவர்மம்)

இடம் :- கை புஜவர்மத்தின் மேல் அதாவது கை தோளோடு சேரும் பகுதியில்) அமைந்துள்ளது சுளுக்கு வர்மம். இன்னும் விளக்கினால், புஜ எலும்பும் - காரை எலும்பும் இணையும் பகுதியில் அமைந்துள்ள குழியில் சுளுக்கு வர்மம் நிலைத்துள்ளது.

சுளுக்கு வர்மத்தில் அடிபட்டால் கையின் நடுவிரல் சுளுக்கிக் கொள்ளும். இதற்கு காரணம் கைமூட்டு எலும்பின் மத்திய பாகத்தில் காணப்படும் நரம்பில் பிணைந்தது சுளுக்கு வர்மம். எனவே இந்த வர்மத்துக்கு சுளுக்கு வர்மம் என்று பெயர் ஏற்பட்டது.

சுளுக்கு வர்மம் உடலின் இரண்டு பக்கமும் உண்டு.

குணம் :- சுளுக்கு வர்மம் கொண்டால் மயக்கம் ஏற்படும். நாக்கு வெளியே தள்ளும். கழுத்து ஒருபுறமாக திரும்பி இருக்கும்.

இளக்கும் காலம் :- இந்த வர்மம் கொண்ட எழு மணி நேரத்திற்குள் வர்ம முற்றோரை இளக்கவும்.

இளக்குமுறை :- மயக்கம் தெளிவித்து நாக்கை உள்ளே தள்ள வேண்டும்.

நாக்கை உள்ளே தள்ளும் முறையாவது :- வலது பக்க மார்பில் ஒரு விரல் மேலாக அழுத்தவும். அல்லது தொண்டைப் பதப்பில் அழுத்திந் தடவவும். நாக்கு உள்ளே போகும். இன்னும், கழுத்தின் இருபுறங்களையும் தடவி விடவும்.

குறிப்பு :- சுளுக்கு வர்மம் ஏற்பட்டால் கழுத்து நிரந்தரமாக திருப்ப முடியாமல் போய்விட வாய்ப்பு அதிகம் உண்டு.

சுளுக்கு வர்மத்தில் தாக்குப்பட்டால் கையின் மத்திய பாகத்தில், நடுவிர லுக்கு வருகின்ற நரம்பைத் தடவி கொடுத்து, ஒவ்வொரு விரலையும் இழுத்து நெட்டி வாங்கி விடவேண்டும். நடுவிரலில் சொடுக்கு விட்டால், வர்மம் இளகி விட்டது என்று தெரிந்து கொள்ளவும்.

66. நெட்டெல்லு (தண்டெல்லு) வர்மம்
(முனைவாசிக்காலம்)

இடம் :- முதுகு எலும்பு முப்பத்திரண்டு துண்டெலும்புகளாக அமைந்துள்ளது. இதில் எட்டு வர்மங்கள் நிலைத்துள்ளது. இந்த எட்டு வர்மங்கள் சேர்ந்தது நெட்டெல்லு வர்மமாகும். ஒன்றின் கீழ் ஒன்றாக அமைந்துள்ள இந்த வர்மங்களில் பாதிப்பு ஏற்பட அதிகமான குணங்களைக் காட்டும்.

1. நெட்டெல்லு வர்மம் -I (மேல் சுழியாடி வர்மம்)

இடம் :- உச்சியிலிருந்து 11 விரல் கீழாக உள்ளது. முதுகுத்தண்டு ஆரம்பமாகும் இடத்தில் மேல் சுழியாடி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- மேல் சுழியாடி வர்ம நிலையத்தில் பாதிப்பு ஏற்பட்டால் பலவிதமான கேடுகள் உண்டாகும். குறிப்பாக, சயம், சுரம், குளிர் ஏற்படுவதோடு நோயாளி பசியின் தன்மையை இழப்பர். பிடரியில் தரிப்பு உண்டாகும். விசை நரம்பு பலமற்று குழைந்துப் போகும்.

மாத்திரைக்கு மிஞ்சி மேல் சுழியாடி வர்ம நிலையத்தில் ஊனம் கொண்டால் வர்மமுற்றோர் பைத்தியம் பிடித்து, நாய் போல் அலைவர்.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட உடனே இளக்கவும்.

இளக்குமுறை :- சங்குதிரியை பிடித்து விடவேண்டும். உடல் முழுவதும் மேலிருந்து கீழாகத் தடவி, இருபாதங்களையும் நேராக வைத்து, ஒவ்வொரு கால் பாதத்திலும் 6 குத்துகள் வீதம் 12 குத்துகள் போடவும். தலையில் (உச்சிபாகத்தில்) பிணியாளியின் கைவிரல்களை பிணைத்து வைத்து எட்டு குத்துகள் போடவும். இங்ஙனம் மூன்று நாட்கள் தொடர்ந்து செய்யவும்.

குறிப்பு :- இளக்குமுறை செய்தப் பிறகு ஏப்பம் விடுவாரானால் இவ்வர்மம் இளகவில்லை என்பதை தெரிந்து கொள்ளவும். வர்ம குளிகையை கிரிசாத்து கிழாயத்தில் உரைத்துக் கொடுக்கவும். சுயராந்தி எண்ணெய் 3 நாள் 6 வேளை உள்ளுக்கு ஊட்டவும். ஒரு வருடம் சென்ற பின்பு சயம், இரத்த வாந்தி ஏற்படுமாயின் அணில் நெய் கொடுக்கவும்.

இவ்வர்மம் கொண்ட 38 நாட்கள் சென்ற பின் சுயராதி சூரணத்தில் தேன் கலந்து நோயாளிக்கு சாப்பிட கொடுக்கவும்.

2. நெட்டெல்லு வர்மம் - II

இடம் :- நெட்டெல்லு வர்மம் II முன் சொன்ன இடத்திலிருந்து நான்கு விரல்களுக்குக் கீழ் நிலைத்துள்ளது.

குணம் :- நெட்டெல்லு வர்மம் IIன் நிலையத்தில் பாதிப்புக் கொண்டால் முன் சொன்ன குணங்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமான நோய்களைக் காட்டும். இரத்தம் அடிக்கடி வாய்வழி வடியும்.

இளக்குமுறை :- வர்ம முறைப்படி இளக்கவும். பின்பு பற்பம் அல்லது நெய் கொடுக்கவும்.

குறிப்பு :- இங்ஙனம் செய்து குணமான பின்பு தொண்ணூற்றெட்டாம் நாளுக்கு மேல் சுரம், இருமல், கபம் எழும். இதன் அறிகுறியாக கண்கள் புகையும். காசநோய் ஏற்பட்டது போல் தோன்றும். உடலிலிருந்து துர்நாற்றமும், பழுப்பும் - இரத்தமும் கலந்த மேகம் வெளியேறும். நோயாளியின் அருகே மற்றவர்கள் செல்ல இயலாது.

வர்மம் கொண்ட நாளிலிருந்து 208-ம் நாள் மரணம் ஏற்படும்.

3. நெட்டெல்லு வர்மம் - III

இடம் :- நெட்டெல்லு வர்மம் III நெட்டெல்லு வர்மம் II நிலையத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீ.) தாழ்வாக (கும்பின் நேர் பின்புறம் - நடுமுதுகின் நான்கு விரல் மேலாக) நிலைத்துள்ளது.

குணம் :- நெட்டெல்லு வர்மம் III-ல் வர்மம் கொண்டால் சுரம், குளிர், சயம் ஏற்படுவதோடு, இரண்டு விரைகளும் இருமலோடு கூடி இழுத்து உள்ளே வாங்கும். இங்ஙனம் விரைகள் மேலாக இழுத்த இரண்டு மணி நேரத்திற்குள் மேல் மூச்சு வாங்கும். மயக்கம் எழும். வாயிலிருந்து நுரைத் தள்ளும்.

இளக்குமுறை :- பொது இளக்குமுறை செய்யவும். குறிப்பாக முன் சொன்ன குறி குணங்கள் தோன்றினால்

நோயாளியை தரையில் குப்புற படுக்க வைத்து, முதுகுவரியை மேலிருந்து கீழாக தடவி விடவும். அதோடு விலாப் பக்கங்களையும் தடவி விடவும்.

கொத்தமல்லி கிழாயத்தில் சந்தனத்தை அரைத்து உடல் முழுவதும் பூசவும். மற்றும் கோழி கிழாயம் உள்ளுக்கு ஊட்டவும். கோழி நெய் தயார் செய்து அருந்தக் கொடுக்கவும்.

குறிப்பு :- இத்தனையும் செய்தாலும் வர்மம் கொண்ட நாளிலிருந்து முன்னூறாம் நாளில் திகைமுட்டு, இருமல், கபம், சோம்பல் எழும். இதனை மாற்றுவதற்குத் தேவையான மருந்துகளை கொடுக்கவும். நோய் நீங்கி உலகில் வாழுவர். ஆனால் நடுமுதுகில் சிறிய கூன் விழும்.

4. நெட்டெல்லு வர்மம் - IV

இடம் :- நெட்டெல்லு வர்மம் III-ன் இடத்திலிருந்து நாலு விரல் கீழாக (நடு முதுகில்) நெட்டெல்லு வர்மம் -IV நிலைத்துள்ளது.

குணம் :- நெட்டெல்லு வர்மம் IV-ல் பாதிப்பு கொண்டால் நடுமுதுகு சுருங்கி கூனிப்போகும். சிறுநீர் சொரிந்திறங்கும். உடல் மெலியும். அறிவு குன்றும். வர்மம் கொண்ட இரண்டு வாரங்களில் பேச முடியாத படி இருமல் தொடர்ந்து வரும். சபம் உண்டாகும்.

கோழி அடை செய்து உள்ளுக்குக் கொடுக்கவும். மிறுகமலாதி எண்ணெய் தயார் செய்து தலையில் வைத்து வெண்ணீரில் முழுகவும். இன்னும் கோழி நெய் உள்ளுக்குக் கொடுக்கவும்.

குறிப்பு :- வர்மம் கொண்ட நாளிலிருந்து 25-ம் வருடம் கண்களில் காயம் உண்டாகி பார்க்க இயலாத நிலை ஏற்படும்.

5. நெட்டெல்லு வர்மம் - V

இடம் :- நெட்டெல்லு வர்மம் V நடு முதுகிலிருந்து நான்கு விரல் அளவு கீழாக நிலைத்துள்ளது.

குணம் :- இந்த நிலையத்தில் வர்மம் கொண்டால் நஞ்சினை உண்டால் ஏற்படும் மயக்கம், தளர்ச்சி, அதி வியர்வை தோன்றும். இன்னும் நாவறட்சி, வயிற்று வேதனை, நீர்தரிப்பு, மலச்சிக்கல், அயர்வு முதலியவை தோன்றும்.

வர்மபாதிப்பு ஏற்பட்டவரின் உடல் முழுதும் சர்வாங்க தைலம் இட்டு வர்ம முறைப்படித் தடவி இளக்கவும்.

ஒரு வருடத்தில் உடல் நிலை சீர்கேடாகி 648-ம் நாள் உயிர் பிரியும்.

6. நெட்டெல்லு வர்மம் - VI

இடம் :- நெட்டெல்லு வர்மம் V-ன் இடத்திலிருந்து நான்கு விரல் கீழாக நெட்டெல்லு வர்மம் **VI** நிலைத்துள்ளது.

குணம் :- இவ்விடத்தில் வர்மம் கொண்டால் உடல் தளரும். மயக்கும் உண்டாகும். கைகால்கள் சோர்வடையும். கண்கள் பஞ்சடைத்துவிடும்.

இளக்குமுறை :- நோயாளியை தரையில் எடுத்திருத்தி, நிமிர்த்திக் கொண்டு குரல் வளையிலிருந்து கீழாகத் தடவி விடவும். இங்ஙனம் மூன்று முறை தடவவும். இரண்டு விலாப்புறங்களையும் தடவித் தாழ்த்தி, வர்ம முறைப்படித் தடவி, அடங்கலில் அழுத்தவும்.

தடவியதும், தயாராக வைத்துள்ள சாமையரிசி கஞ்சியில் சுக்குப்பொடி இட்டு கலக்கி வடித்து, வரும் தெளிவை கொடுக்கவும். தொடர்ந்து, தக்க மருந்துகள் செய்து கொடுக்கவும்.

குறிப்பு :- எங்ஙனம் சிகிச்சை அளித்தாலும் நாட்கள் செல்லச் செல்ல நீரெழிவு, குன்மம் போன்ற நோய்கள் ஏற்பட்டு மரணமடைவர்.

7. நெட்டெல்லு வர்மம் - VII

இடம் :- நெட்டெல்லு வர்மம் VI-ன் இடத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீ.) ஒதுங்கி இருபுறமும் உள்ள குழியில் (பிட்டியின் மேல் இரு குழிகள் தென்படும். அக்குழியில்) நெட்டெல்லு வர்மம் **VII** நிலைத்துள்ளது.

குணம் :- நெட்டெல்லு வர்மம் **VII** கொண்டால் சிறுநீரும், மலமும் வெளியாகும். சிறுநீர் சொட்டுச் சொட்டாக வடியும். இடுப்பு எலும்புகள் தன் நிலையிலிருந்து இறங்கி விடும்.

இளக்குமுறை :- வர்மமுறைப்படி தடவி இளக்கவும்.

குறிப்பு :- முறைப்படி இளக்கு முறைகள் செய்தாலும் வர்மம் கொண்ட நாளிலிருந்து ஆறாம் மாதத்தில் பல இன்னல்கள் தோன்றும். சயம், இருமல், மேகம், அதிக தாகம்,

மூச்சு வாங்கல் எழும். பலவிதமான எண்ணங்கள் மனதில் எழும். ஒரு மண்டலத்திற்குள் (41 நாட்களுக்குள்) நோய் கைக்கடங்காது சீற்றம் கொண்டு மூச்சுமுட்டல், கபம், விக்கல் தோன்றும்.

வர்மம் கொண்ட 60-ம் மாதம் (5 வருடத்தில்) உடலை விட்டு உயிர் பிரியும்.

குறிப்பு :- நெட்டெல்லு வர்மம் VII- நிலவும் இடம் ஒரு அடங்கலாகும். தடவும் போது மாத்திரைக்கு மீறினால் மயங்கி விழுவார். வாயில் நுரைதள்ளும். வயிறு இரையும். மார்பில் வேதனை உண்டாகும். இரத்தமானது சளியுடன் கலந்து வாய்வழி வெளியேறும்.

8. நெட்டெல்லு வர்மம் -VIII (கைகட்டி வர்மம்) (கேழ்சுளியாடி வர்மம்)

இடம் :- ஆயக்கால வர்மநிலையத்தின் கீழே முதுகுத் தண்டின் முடிவில் (முதுகுத்தண்டு மூலத்தோடு இணையும் பகுதியல்) கை கட்டி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- கை கட்டி வர்மம் கொண்டால் உடனே மயக்கம் ஏற்பட்டு ஏங்கி விழுவர். வாயிலிருந்து நுரையும் பதையும் வடியும். வெட்டுண்ட மரம் போல் கிடப்பர். பல சிகிச்சைகள் செய்து இளக்கினாலும் குடத்திற்குள் சிக்குற்ற காற்று இரைவது போல் வயிற்றில் இரைச்சல் எழும். மார்பில் வேதனை உண்டாகும். இரத்தச் சளி, கிராணி போன்ற நோய்கள் எழும். உயிர் பரதவிக்கும். குமட்டலுடன் வாந்தி ஏற்படும். கபம், இருமல், ஈளை, காசம் போன்ற நோய்கள் நாளுக்கு நாள் அதிகப்படும். நோய் அதிகரிக்க அதிகரிக்க நோயாளியின் மனதில் பயமும் உதயமாகும்.

இளக்கும் காலம் :- கைகட்டி வர்மம் கொண்ட ஏழு மணி நேரத்திற்குள் தடவி இளக்கவும்.

குறிப்பு :- வர்மம் கொண்ட நாளிலிருந்து ஒரு ஆண்டுக்குள் உயிர் பிரியும்.

67. கச்சை வர்மம்

இடம் :- நட்டெல்லு வர்மம் VIII-ன் சற்று கீழாக கச்சை வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- கச்சை வர்மம் கொண்டால் அதிகமாய் மயக்கம் ஏற்படாது. அதீதமான கால்வலி உண்டாகும். மலமும் மூத்திரமும் வெளியேறாது அடைபட்டு விடும். உடனடியாக பாதிப்பு தோன்றாவிடினும் நாளடைவில் பாதிப்பு தோன்றும். நெஞ்சில் வாயுவு தங்கி கடுமையாக அடைக்கும். இதனால் நெஞ்சு வேதனை ஏற்படும்.

இளக்குமுறை :- சுகமொதுக்கி, இறுக்கி வர்மங்களை (சிறிய அத்திச் சுருக்கி வர்மநிலையத்தின் கீழே வயிறு அரைப்பகுதியோடு இணையும் பகுதியில் இடது - வலது பக்கங்களை) தடவி விடவும். சிறுநீர், மலம் அடைபட்டது நீங்கும்.

68. கைக்கூட்டி வர்மம்

இடம் :- இரண்டு கைகளையும் கட்டினால் விரல்கள் எந்த இடத்தில் சென்று நிலைக்குமோ அந்த இடத்தில் (அடைப்பவர்ம நிலையத்திற்கு நான்கு விரல் கீழே) கைக்கூட்டி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- கைக்கூட்டி வர்மம் கொண்ட உடன் மயக்கம் ஏற்படும். சரியாக மூச்சு விடமுடியாது. விலா எலும்புகள் வேதனையால் துடிக்கும். மேல் மூச்சு - கீழ்மூச்சு வாங்கும். எச்சிலில் இரத்தம் காணும். கை - கால்களில் உளைச்சல் ஏற்படும். வயிறு பொருமும். உடலில் விறைப்புத் தன்மை ஏற்பட்டு நிமிர்ந்துவிடும். சிறிது சிறுதாக சிறு நீர் வெளியாகும்.

இளக்கும் காலம் :- கைக்கூட்டி வர்மம் கொண்ட ஏழு மணி நேரத்திற்குள் இளக்கவும். தவறினால் கேடு விளையும்.

இளக்குமுறை :- மயக்கம் தெளிவிப்பது முதல் சிகிச்சை. அடப்பக்கால வர்ம நிலையத்தைத் தடவி விடவும். இன்னும் வர்மமுறைப்படி உடலெங்கும் தடவி விடவும்.

69. வாசிக் கால (வாசுக்கால) வர்மம்

இடம் :- வாசிக் காலம் எட்டு முனை எலும்பில் உள்ளது. அதாவது முதுகில் பதினாறு முனைகளாக கொண்டுள்ளது. மறு பக்கமும் உண்டு.

70. பிரம்ம வர்மம் (அன்னக்காலம்) (உந்தி வர்மம்) (ஆமென்ற வர்மம்) (அயன் வர்மம்)

இடம் :- பிரம்ம வர்மம் அரி வர்மத்திலிருந்து எட்டுவிரல்களுக்குக் (20 செ.மீ.) கீழாக உள்ள தொப்புளில் நிலைத்துள்ளது.

குணம் :- பிரம்ம வர்மத்தில் பாதிப்பு ஏற்பட்டால் மூக்கிலிருந்து நீர்வடியும். மயக்கம் உண்டாகும். உடல் துடிக்கும். கைகள் குழைந்துப் போகும். இரண்டு கண்களும் மூடிக்கொள்ளும். உடலானது குங்குமப்பூ நிறமாக மாறும். மூலத்திலும், வாயிலும், சிறுநீரிலும் இரத்தம் காணும். விந்து தானாக வெளியேறும். வயிறு பொருமும். உடல் குழைந்துவிடும். வர்மம் கொண்ட ஏழு மணிநேரத்திற்குள் பல கேடுகள் வந்தடையும்.

இளக்கும் காலம் :- பிரம்ம வர்மம் ஏற்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- முதலில் நோயாளியின் மயக்கத்தை தீர்க்கவும். மருத்துவர் தம் கையை நோயாளியின் உச்சியில் ஊன்றி ஒரு தட்டு போடவும். நோயாளியின் கை - கால்களை நீட்டச் செய்து தடவிவிடவும். இடுப்பை அசைத்துவிட்டு பிட்டிப்பாகத்தில் கைவிரல்களை மடக்கி ஒரு குத்து போடவும். இரு விலாப்பக்கங்களையும் தடவி விடுவதோடு, கையைப் பொத்தி அவ்விடங்களில் தட்டவும். மேலும் நோயாளியின் உச்சியின் மீது மருத்துவர் தம் கையால் ஒரு அடியும் போடவும். தோள், முதுகு, கழுத்து, நெஞ்சு, வயிறு, தொப்புள் இவைகளை மெதுவாகத் தடவிவிடவும். கழுத்தை இட - வலமாக அசைத்து செவியை தூக்கிவிடவும். சுக்கை மருத்துவர் தன் வாயிலிட்டு மென்று அதன் வேகத்தை நோயாளியின் மூக்கிலும், செவியிலும் ஊதிவிடவும். விரைவில் தக்க மருத்துகள் செய்து நோயாளிக்கு கொடுக்கவும்.

குறிப்பு :- தேர்ந்த சிகிச்சைகள் செய்தாலும், பிரம்ம வர்மமுற்ற நோயாளிக்கு இரண்டு ஆண்டுகள் சென்ற பிறகு வாய்வு தொல்லை, சுரம், கிராணி, பித்தம், அசதி, கிறுகிறுப்பு, அதிக தாகம், தலைவலி, வயிறு பொருமல், பசிமந்தம், பித்தபாண்டு, சோகை, உடல்வீக்கம் போன்றவை ஏற்படுவதோடு உடல் களைப்பும் உண்டாகும். இந்தநோய்கள் தோன்றினால் "மேக் நாராயண செந்தூரமும்", "ஆட்டு இலேகியமும்"

தயார்செய்து 41 நாட்கள் தொடர்ந்து கொடுக்கவும். "படலாதி எண்ணெயை" தலையில் தேய்த்து வெந்நீரில் முழுகி வரவும். இதனால் நோய்கள் அகலும்.

மருந்து சாப்டிடும் காலத்தில் புளி, பழைய சோறு நீக்கவும். உடலுறவையும் தவிர்க்கவும். தலை முழுகும்போது சித்தாமுட்டி இலை இட்டுக் காய்ச்சிய நீரில் குளிக்கவும்.

நாபி முதல் மூலம் வரையுள்ள 9 வர்மங்கள்

71. வருண வர்மம் (மழை வர்மம்) (மூத்திரக்காலம்)

இடம் :- பிரம்ம வர்ம இடத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீ.) தாழ்வாக வருண வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- வருணவர்ம நிலையத்தில் பாதிப்பு ஏற்பட்டால் 12 மணிநேரத்திற்குள் கேடு விளையும். இந்த நேரத்துக்கு முன்பாக சிறுநீரும், மலமும் சிக்கி வெளிவராது. வயிறு பொருமும். மூத்திரப்பை புரண்டது போன்ற உணர்வுடன் சில வேளையில் சிறுநீர் உணர்வின்றி சொட்டுச் சொட்டாக வெளிவரும். உடல் மரத்துப்போகும். உடல் தளரும். கை-கால்கள் சட்டுவம் போல் நிமிர்ந்து விடும். உடலும் வில்போல் வளைந்து விடும். இந்நிலையில் சன்னி, மயக்கம், வலிப்பு தோன்றும். வலிப்பின் காரணமாக தலை தன்னிலைக் கெட்டு குலைத்துவிடும். நாக்கு வெளியே சாடும். இந்நிலை ஏற்பட்டால் மரணம் சம்பவிக்கும்.

இளக்கும் காலம் :- வருண வர்மம் கொண்ட ஏழு மணி நேரத்திற்குள் நோயாளியை இளக்குமுறைப்படி இளக்கவும்.

இளக்குமுறை :- இறைவனை மனதில் நினைத்து மயக்கம் தெளிவித்து, வருணவர்ம நிலையத்தின் பின்புறம் (முதுகுப் புறத்தில் பிட்டிக்கு மேல் உள்ள முதுகுவரியில்) காலை மடக்கித் தட்டவும். முதுகு, நெஞ்சு பகுதிகளை தடவவும். நோயாளியின் உடல் முழுவதிலும் ஒத்தடமிடவும். மேலும் உடல் முழுவதும் சர்வாங்க தைலம் இட்டு சூடு வரும்வரை தேய்க்கவும். உள்ளுக்கும் சர்வாங்க தைலம் கொடுக்கவும். மூத்திரக்காலத்தில்

அழுத்தி மேலிருந்து கீழாகத் தடவி விடவும். மூத்திரம் சரியாக போகும். நோயாளியைத் தூக்கி வலுவாக தரையில் இருத்தவும். ஆயக்காலத்திற்கு நான்கு விரல் (10 செ.மீ.) மேலாக குதிகாலால் (திரும்பி நின்றுக் கொண்டு) ஒரு தாக்கு தாக்கவும். நெஞ்சு முதல் பீஜம் வரை (முன் பக்கம்) நிதானமாகத் தடவி விடவும். மருத்துவர் தம் கையை விரித்து, நோயாளியின் உச்சியில் ஒரு தட்டு தட்டவும். பின்பு நோயாளியின் கழுக்கூட்டில் கையை இட்டுத்தூக்கி உதறி விடவும்.

குறிப்பு :- வலிப்பின் காரணமாக தன்னிலை கெட்டு, தலை குழைந்து, மீண்டும் நாக்கு தள்ளினால் உடனடியாக மரணம் ஏற்படும்.

மருத்துவம் செய்தப்பின்பு, நோயாளி உபிரோடு இருந்தால், உடல் உறவை தவிர்க்கவும். மீறி உடலுறவுக் கொண்டால் உடன் மரணம் ஏற்படும்.

72. கல்லிடைக்காலம் (அக்கினி வர்மம்) (வித்து வர்மம்) (தொந்தை வர்மம்)

இடம் :- தொப்புளுக்கு நான்கு விரல் கீழாக (ஆண்குறியின் ஒரு விரல் (2.5 செ.மீ.) மேலாக) கல்லிடைக்காலம் நிலைத்துள்ளது.

குணம் :- கல்லிடைக் காலத்தில் அழுத்தமாக வர்மம் கொண்டால் இரு விதைகளும் மேலே ஏறி, விதைப்பையின் துவாரத்தை அடைத்துக் கொள்ளும். உடல் குளிரும். மயக்கம் வரும். வாயிலிருந்து நுரை வெளியாகும். காது கேட்காது. நோயாளி தளர்ச்சியுற்று, நினைவும் கெட்டு, மயக்க முறுவர். பேச்சின்றி தன்னுணர்வின்றி கிடப்பர். ஆணுறுப்பில் நீர் கட்டும். சத்தம் போட முடியாது. சிறு நீர் போகாது. வயிறு பொருமும். மூச்சுவிட இயலாது. தூக்கத்தில் ஆழ்ந்தவர்கள் போல் குறைட்டை விடுவர். சிறுநீர் சொட்டுச் சொட்டாக விழும். நோயாளி ஆண்மையை இழப்பர்.

இந்த வர்மம் பெண்களுக்கு ஏற்படின் மாதவிடாய் கோளாறு ஏற்படும். உடலுறவின்போது ஏமாற்றம் ஏற்படும். உடல் சக்தி இழக்கும். உடலில் நடுக்கம் ஏற்படும். உடம்பு சாயும். சிலநேரங்களில் சிறுநீர் தொடர்ந்து வெளிவரும்.

இளக்கும் காலம் :- கல்லிடை காலத்தில் வர்மம் கொண்ட எட்டு மணி நேரத்திற்குள் இளக்கவும். தவறினால் வித்தானது கீழே இறங்காது.

இளக்குமுறை :- நோயாளியைத் தூக்கி 'தக்கென' தரையில் குத்தி இருத்தவும். நரங்கு பொருத்திலிருந்து நான்கு அங்குலம் மேலாக குதிகால் கொண்டு ஒரு தாக்கு தாக்கவும். நெஞ்சு முதல் பீசம்வரை மேலிருந்து கீழாக தடவி விடவும். மருத்துவர் தன் கையை மடக்கி நோயாளியின் உச்சியில் ஒரு தட்டு தட்டவும். பின்னர் நோயாளியின் கழுக்கூட்டில் மருத்துவர் தன் இரு கைகளை இட்டுத் தூக்கி உதறிவிடவும். நீர் செபித்து எறிந்து சங்காளம் தீர்க்கவும். எண்ணெயிட்டு ஒத்தடமிடவும்.

குறிப்பு :- இந்த வர்மத்தில் ஒரு மாத்திரைக்கு மிஞ்சி பாதிப்பு ஏற்படுமானால் வர்மம் கொண்டவர் இறந்துவிடுவர். மாத்திரைக்கு சற்றுக் குறைவாக வர்மம் ஏற்படுமாயின் சிறுநீர் வெளிவராது. வயிறு உப்பிச மடையும். மூச்சுவிட இயலாது. விதை இரண்டும் கீழே இறங்காதபடி தசை வளர ஆரம்பிக்கும்.

காலங்கடந்து தடவ முயற்சித்து வித்து இறங்காமலிருந்தால் மேலடங்கலை அழுத்தி, இவ்வர்மத்தின் மறுபுறத்தில் தட்டித் தடவவும்.

73. வலம்புரி வர்மம்

இடம் :- வலம்புரி வர்மம் ஆணுறுப்பின் வலது பக்கம் ஒரு விரல் (2.5 செ. மீ.) உள்ளாக நிலைத்துள்ளது.

குணம் :- வலம்புரி வர்ம நிலையத்தில் பாதிப்பு ஏற்பட்டால் நீர் மலம் போகாது. வயிறு பொருமும். கை - கால்கள் திமிர்பிடித்து வேலை செய்யாது. லிங்கத்தில் குத்தலுடன் வேதனை தோன்றும்.

இளக்கும் காலம் :- வலம்புரி வர்மம் கொண்ட ஏழு மணி நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- மூத்திரக் கால வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை வலம்புரி வர்மப்பாதிப்பை நீக்க கையாளவும்.

74. இடம்புரி வர்மம்

இடம் :- ஆணுறுப்பின் இடது பக்கம் ஒரு விரல் (2.5 செ.மீ.) உள்ளாக இடம்புரி வர்ம நிலையம் வியாபித்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் வலம்புரிவர்மம் பாதித்தால் தோன்றும் குறிகுணங்கள் காணப்படுவதுடன் தண்டில் உளைச்சலும், உடலில் வேதனையும் ஏற்படும்.

இளக்குமுறை :- மூத்திரக் காலத்தில் வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை இடம்புரி வர்மம் கொண்டோருக்கு செய்யவும்.

75. வில்லுறுமி வர்மம்

இடம் :- வலம்புரி வர்மத்தின் அருகில் வில்லுறுமி வர்மம் உள்ளது.

குணம் :- வில்லுறுமி வர்ம நிலையத்தில் பாதிப்புக் கொண்டால் அடிவயிறு மரத்துப் போகும். உடலில் உளைச்சல் தோன்றும். மயக்கம் ஏற்படும். காய்ச்சல் தோன்றும். அடிவயிற்றில் தரிப்பு உண்டாகும். சன்னி எழும். நாளடைவில் புத்தி மாறாட்டம் ஏற்படும்.

இளக்குமுறை :- மூத்திரக் காலத்தில் வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை வில்லுறுமி வர்மம் கொண்டோருக்கு செய்யவும்.

76. வல்லுறுமி வர்மம்

இடம் :- இடம்புரி வர்மத்தின் அருகில் வல்லுறுமி வர்மம் உள்ளது.

குணம் :- பொதுவாக வில்லுறுமி வர்மம் கொண்டால் தோன்றும் குறிகுணங்களே வல்லுறுமி வர்ம முற்றோருக்குத் தோன்றும்.

இளக்கும் காலம் :- வல்லுறுமி வர்மம் கொண்ட ஏழு மணி நேரத்திற்குள் இளக்கவும்.

இளக்குமுறை :- மூத்திரக் காலத்தில் வர்மம் கொண்டால் செய்யும் இளக்குமுறையை வல்லுறுமி வர்மமுற்றோருக்கு கையாளவும்.

குறிப்பு :- வல்லுறுமி வர்மம் ஆண்களுக்கு ஏற்படுமாயின் ஆண்மையை இழப்பர். பெண்களுக்கு இவ்வர்மம் ஏற்பட்டால் தீர்க்க முடியாத மாதவிடாய் கோளாறு உண்டாகும்.

குறிப்பு :- வலம்புரி வர்மம், இடம்புரி வர்மம், வில்லுறுமி வர்மம், வல்லுறுமி வர்மம் ஆகிய நான்கு வர்மங்களையும் ஒன்றாய் சேர்த்து மும்மூர்த்தி வர்மம் (ஆயி நரம்பு வர்மம்) என்பர்.

77. நரங்குக்குத்தி வர்மம்

இடம் :- வில்லுறுமி, வல்லுறுமி வர்மங்களின் அருகில் (குறிப்பாக ஆண்-பெண் குறிக்கும், மலத்துவாரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில்) நிலைத்துள்ளது.

குணம் :- நரங்குக் குத்தி வர்ம நிலையத்தில் பாதிப்பு ஏற்பட்டால், மயக்கம் ஏற்படும். மூச்சு கடுமையாக அடைக்கும். உடல் வீக்கம் எழும். வாய் பேச இயலாது. மாத்திரைக்கு மிஞ்சி வர்மம் கொண்டால், உடன் மரணம் நிகழும்.

இளக்குமுறை :- முதலில் மயக்கத்தைத் தெளிவிக்கவும். அடுத்து பிடரி முதல் மூலாதாரம் வரைக்கும், பக்கவாட்டில் கமுக்கூட்டிலிருந்து இடுப்புவரைக்கும் அழுத்தித்தடவி விடவும். மூத்திரக்காலத்திலும், மலக்காலத்திலும் தடவி விடவும்.

குறிப்பு :- வாய் பூட்டி பேச முடியாவிட்டால் சுக்கைப் பொடித்து தூள்செய்து, சிறிதளவு எடுத்து காது, மூக்கு இவைகளில் செலுத்தி ஊதவும். அதிக வியர்வை கொட்டுவதுடன் வாய் பூட்டும் திறக்கும்.

78. அணி வர்மம் (மேலணி வர்மம்)

இடம் :- நரங்குக் குத்தி வர்மத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீ.) மேலாக (தண்டின் - ஆணுறுப்பின் ஒரு விரல் (2.5 செ.மீ.) மேலாக) அணி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- அணி வர்ம நிலையத்தில் பாதிப்புக் கொண்டால் விந்து தானாக வெளியேறும்.

79. ஆந்தை வர்மம்

இடம் :- மேலணி வர்மத்தின் ஒரு விரல் மேலாக (அரையின் மேலாக) ஆந்தை வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- ஆந்தை வர்ம நிலையத்தில் பாதிப்பு ஏற்பட்டால் அடிக்கடி மயக்கம் வரும். பின்பு உணர்வு திரும்பும். இப்படி ஏழு நாட்கள் தொடரும்.

கையிலுள்ள 14 வர்மங்கள்

80 மொளிப்புற காமனை வர்மம் (தட்சணை காலம்)

இடம் :- கை மொளியின் வெளிப்பக்கத்தில் மொளிப்புற காமனை வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- மொளிப்புற காமனை வர்மத்தில் பாதிப்பு கொண்டால் கண்புகைச்சல், களைப்பு, காய்ச்சல், சன்னி ஏற்படும்.

இளக்கும் காலம் :- மொளிப்புற காமனை வர்மம் கொண்ட நான்கு மணி நேரத்திற்குள் இளக்கவும். தவறினால் மரணம் ஏற்படும்.

குறிப்பு :- உள்ளங்கையில் நிலைத்துள்ள வர்மங்கள் பல உயிர் காக்கும் வர்மங்களாகும். ஏதாவது காரணத்தால் மயக்கம் ஏற்பட்டால் அதை தீர்க்கவோ, திடீரென மாரடைப்பு ஏற்பட்டால் உடனடி முதலுதவி செய்து இரத்த ஒட்டத்தை சரி செய்யவோ, கைகளில் உள்ள பல வர்மங்கள் பயன்படுத்துகின்றன. இந்த வர்மங்களை அழுத்தி மயக்கமடையவும் செய்யலாம். கைகளிலுள்ள சில வர்மங்களுக்கும், இதயத்திற்கும் நேரடி தொடர்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

நாகவிடத்தை அதிகமாக பயன்படுத்தினால் மரணம் நிகழும். அந்த நாகவிடத்தை அளவாக பயன்படுத்தினால் தீர்க்க முடியாத பல நோய்களையும் தீர்க்கலாம். அதுபோல் இந்த வர்மங்களை தேவைக்கு கையாளவும். விசையுடன் அழுத்த அசாத்தியமாகும்.

81. சூண்டோதரி வர்மம்

இடம் :- தட்சணை வர்ம நிலையத்திலிருந்து ஒரு விரல் (2.5 செ.மீ.) அருகில் சூண்டோதரி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- சூண்டோதரி வர்ம நிலையத்தில் பாதிப்பு கொண்டால் உடல் துடிதுடித்து வீங்கும். உடல் அயர்ந்து மயங்கும். ஏழாம் நாள் அல்லது பதினொன்றாம் நாள் நோயாளிக்கு மரணம் ஏற்படும்.

குறிப்பு :- இளக்கு முறை செய்த பின்பு சூண்டோதரி வர்மம் இளகினால் பிழைத்திடுவார்.

82. குண்டோதரி வர்மம் (சூட்டுவர்மம்)

இடம் :- பெருவிரல் கவளியின் இடையில் குண்டோதரி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- குண்டோதரி வர்மம் ஏற்பட்டால் உடன் மயக்கம் உண்டாகும். உடல் வீக்கமுறும். குளிர் சுரம், காய்ச்சல், சன்னி ஏற்படும். உள்ளங்கையில் தாங்கமுடியாத வேதனை எழும். கைகால் வீக்கமுறும்.

குறிப்பு :- உடலில் தைலமிடவும். உள்ளுக்கு நெய் கொடுக்கவும்.

83. வெள்ளை வர்மம் (துதிக்கை வர்மம்)

இடம் :- வெள்ளை வர்மம் உள்ளங்கையில் நிலைத்துள்ளது. (இரேகைகள் நிறைந்த கைப்பகுதி வெள்ளைப்பகுதி என குறிப்பிடப்படுகிறது. அன்னத்தை அள்ளி அருத்த உதவும் கைப்பகுதி வெண்ணிறமாக உள்ளதால் இது வெள்ளை என அழைக்கப்படுகிறது. கையின் (10 செ.மீ.) வெள்ளைப்பகுதியில் காணப்படும் வர்மம் துதிக்கை வர்மம். உள்ளங்கையிலிருந்து சரியாக நான்கு விரல் (10 செ.மீ.) மணிக்கட்டை நோக்கி மேலே உள்ள மத்தியப் பாகத்தில் காணப்படும் வளைவில் வெள்ளை வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டு கணீரென்ற ஓசை எழும்பினால் கண் பிசகும். உடல் விரைத்துவிடும்.

தளர்ச்சி உண்டாகும். மரமரப்பு, உளைச்சல், காய்ச்சல், சன்னி ஏற்படும்.

மாத்திரைக்கு மிஞ்சி வெள்ளை வர்மத்தில் பாதிப்பு ஏற்பட்டால் நான்காம் நாளில் மரணம் ஏற்படும்.

இளக்குமுறை :- எண்ணெயிட்டு வர்ம முறைப்படித்தடவி விரல்களில் நெட்டி வாங்கவும். துணி வளையம் சுற்றி முறி வெண்ணெயை போட வேண்டும். வல்லாரையை இடித்துப் பிழிந்து சாறெடுத்து குடிக்கக் கொடுக்கவும்.

84. மணி பந்த வர்மம்

இடம் :- முழங்கையின் நடுமையத்தில் உள்ள பகுதி (மணிக்கட்டின் இரண்டு விரல் மேலாக) (5 செ.மீ.) உள்ளங்கை பக்கம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் சொண்டு முறிவுற்றால் பன்னிரண்டு நாட்களுக்குள் மரணம் ஏற்படும். அடிப்பட்டவுடன் கை இயங்காது. கையில் பயங்கர உளைச்சல் எழும். மயக்கம் ஏற்படும். குளிர்சுரம், விட்டுவிட்டு ஏற்படும்.

இளக்குமுறை :- இந்த இடத்தில் வர்மமுற்றால் முறிந்த மணிக்கட்டு எலும்பினை சீராக பொருத்தி, அளவான நான்கு மூங்கில் கம்பால் (கணையால்) எலும்பு பொருத்து மாறி விடாதபடி வைத்து, வெந்தயத்தை, தாளிசாறு விட்டு அரைத்து துணியில் தடவி, மூங்கில் கம்புகளை கையில் வைத்து, இந்தத் துணியால் சுற்றிக்கட்டவும். தொடந்து அதில் முறிவெண்ணெயை விட்டு வரவும். வல்லாரைச் சாறு உள்ளுக்கூட்டவும்.

85. கை - ஆந்தை வர்மம்

இடம் :- மணி பந்த வர்ம நிலையத்திலிருந்து நான்கு விரல் (10 செ.மீ.) மேலாக உள்ளது. (முழங்கை முட்டிலிருந்து இரண்டு அங்குலம் (5. செ.மீ.) கீழே உள்ளது).

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் உடல் சிறுகச் சிறுக அயரும். உடன் மயக்கம் ஏற்படும். உடல் வீக்கமடையும். சன்னி தோன்றும்.

குறிப்பு :- கை ஆந்தை வர்ம பாதிப்புற்றோர் பத்திய பாகத்துடன் இருக்க வேண்டும். பெண்போகம் கூடாது. சுமைகள் தூக்கக் கூடாது. மீறினால் கேடு விளையும்.

86. கவளி வர்மம் (கவளி அடங்கல்) (சன்னி அடங்கல்)

இடம் :- கை விரல்களுக்கிடையில் அமைந்துள்ளது. ஆங்கில எழுத்து 'V' வடிவத்தை கவளி எனலாம். மனிதனது கை விரல்களை விரித்து, இரண்டிரண்டு விரல்களாக பார்ப்போமேயானால் அவை கவளி வடிவத்திலேயே காணப்படும். ஒவ்வொரு கையிலும் கவளி வர்மங்கள் உள்ளன. இந்த கைவிரல்களின் இடையே உள்ள குழி பகுதியில் இந்தவர்மங்கள் நிலைத்துள்ளன.

கவளி வர்மம் (கவளி அடங்கல்) (சன்னி அடங்கல்) I

இடம் :- பெருவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் நிலைத்துள்ளது.

87. கவளி வர்மம் (கவளி அடங்கல்) (சன்னி அடங்கல்) II

இடம் :- ஆள்காட்டி விரலுக்கும் - நடுவிரலுக்கும் நடுவில் நிலைத்துள்ளது.

88. கவளி வர்மம் (கவளி அடங்கல்) (சன்னி அடங்கல்) III

இடம் :- சுண்டுவிரலுக்கும் - மோதிர விரலுக்கும் நடுவில் நிலைத்துள்ளது.

பொதுக் குணம் :- கவளி வர்மங்களில் பாதிப்பு ஏற்பட்டால் மயக்கம், சன்னி ஏற்படும். உயிருக்கு ஆபத்து ஏற்படாது.

இளக்கும் காலம் :- வர்மம் கொண்ட 7 மணி 30 நிமிட நேரத்திற்குள் இளக்கவும். எண்ணெய், ஒத்தடம், பூச்சு இவற்றால் குணமாகும்.

இந்த வர்மம் கொண்டவருக்கு இளக்குமுறை செய்யாவிடில் ஒரு வருட காலத்திற்குப் பின் கை - வெள்ளை பகுதியில் வெடிப்பு உண்டாகும். இங்ஙனம் ஏற்பட்டால் கருஞ்சீரகத்தைப் பொடித்து, சிவனார் வேம்பு தைலத்தோடு சேர்த்து நாற்பது நாட்கள் வெடிப்புப் பகுதியில் தடவவும். குணமாகும்.

குறிப்பு :- எந்த வர்மத்தில் அடிபட்டாலும் இந்த இடத்தைப் பிடித்து இளக்கலாம். சக்தியான இடம்.

சகலவிதமான சன்னியும் இவ்வர்மத்தில் பிடிக்க கட்டுப்படும்.

கர்ப்பிணிக்கு இந்த இடங்களை பயன்படுத்தினால் கருச்சிதைவு ஏற்படும்.

89. மூட்டு வர்மம்

இடம் :- கையின் நடுப்பகுதியின் (முழங்கைப் பகுதியின் மேல்பாகத்தில் காணப்படும் குழிவானப் பகுதியில்) மூட்டுவர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் கை உணர்ச்சி குன்றிவிடும். விறுவிறுப்புடன் வேதனை பெருகி, வீக்கம் உண்டாகும். மூட்டுப் பகுதியில் உள்ள சதைப்பகுதியில் இரத்தம் நீங்கி நீர்க்கட்டும்.

கையை தடவிய பின் நெட்டி வாங்க வேண்டும். தவறினால் கை விளங்காமல் போகும். வல்லாரையை அரைத்து உடலில் பூசவும்.

90. மொளி வர்மம் (மொளிப்பிறை காலம்)

இடம் :- மணிக்கட்டுப் பகுதியின் கீழ் ஐந்துவிரல்களும் இணையும் பகுதியான மொளியில் மொளி வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் அசைகின்ற மொளிப் பகுதியில் வீக்கம் உண்டாகும். அடிபட்ட இடத்தில் காயம் ஏற்படும்.

மொளியின் கண் உள்ள முண்டெலும்பு முறிந்துவிடுமானால் வேதனை தாங்கமுடியாமல் அடிப்பட்டவன் தரையில் படுத்திடுவான்.

இந்த வர்மத்தை குணப்படுத்த மிருதுவான துணியினை எடுத்து முறிவுற்றப் பகுதிகளை சீர்பட பொருத்தி வளையம் சுற்றி முறிவெண்ணெய் ஊற்றவும். அடுத்து வல்லாரையை இடித்துப் பிழிந்து சாறு எடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். புண் ஆறும் மட்டும் முறிவெண்ணெய் ஊற்றி வர வேண்டும்.

91. முண்டக வர்மம்

இடம் :- மொளி வர்மத்தின் அருகில் முண்டக வர்மம் உள்ளது.

குணம் :- முண்டக வர்மப்பாதிப்பால் மயக்கம், களைப்பு, சன்னி, காய்ச்சல் ஏற்படும்.

92. முடக்கு வர்மம்

இடம் :- முழங்கை முட்டுக் குழி மடக்கில் முடக்கு வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- முடக்கு வர்மம் பாதிப்பு கொண்டால் பாதித்த இடம் வீங்கும். கை-காலில் தரிப்புண்டாகும்.

93. மூட்டு மணி பந்த வர்மம்

இடம் :- மூட்டுகளில் மூட்டு மணி பந்த வர்மம் நிலைத்துள்ளது.

காலிலுள்ள 15 வர்மங்கள்

94. கால் வெள்ளை வர்மம் (பாத சக்கர வர்மம்) (அடங்கல் வர்மம்)

இடம் :- கால் வெள்ளை வர்மம் உள்ளங்காலில் உள்ள வெள்ளைப் பகுதியில் நிலைத்துள்ளது. இந்த வர்மம் உள்ள பாதப் பகுதி சக்கர வடிவத்தில் காணப்படுவதால் இந்த வர்மம் பாத

சக்கரம் எனப் டெ பெற்றுள்ளது. இந்த வர்மம் இருக்கால்களிலுமுண்டு.

குணம் :- கால் வெள்ளை வர்மம் கொண்டால் இருபது நாட்களில் கண்கள் குழிந்துவிடும். இருமல் தோன்றும். கபம் ஏற்படும். இருபது நாட்களுக்குப் பிறகு மேலும் இரண்டு நாட்கள் கழிந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படாது.

கால் வெள்ளை வர்மப் பாதிப்பை நீக்க வல்லாரைச் சாறு உள்ளுக்குக் கொடுத்து, அடிபட்ட இடத்திலும் பூசவும். வேதனை தீர வசவெண்ணெய், காயத்திருமேனி இவை இரண்டும் கலந்து இடவும்.

குறிப்பு :- கால் வெள்ளைப் பகுதியில் உள்ள நரம்பில் கால் வெள்ளை வர்மம் அடங்கியுள்ளது. பிற வர்மங்களில் அடிபட்டால் இளக்குவதற்கு அடங்கல் பகுதியாகவும் கருதப்படுகிறது. ஏனைய வர்மங்களெல்லாம் தீருவதற்கு அடக்கமாக காணப்படுகிறது. ஏனைய வர்மங்கள் கொண்டவரை எழுப்புவதற்கு இவ்விடத்தைப் பிடித்து அழுத்த வேண்டும். உடனே எழும்புவர். எல்லா வர்மங்களுக்கும் அடக்கப் பகுதியாக இந்த வர்மம் இருப்பதால் இதனை வர்மங்களின் தாயகம் எனக் கூறுவர்.

கால் வெள்ளை வர்மத்தில் மாத்திரைக்கு மிஞ்சி தாக்குப்பட்டால் அடிப்பட்ட ஆள் மயக்கமாகி மரணமடைவர்.

95. உப்புக் குத்தி வர்மம்

இடம் :- கால் பாதப் பகுதியில் (பின்பக்கம்) உப்புக் குத்தி வர்மம் நிலைத்துள்ளது.

96. மொளி வர்மம்

இடம் :- கால் விரல் மொளிகளில் மொளி வர்மம் நிலைத்துள்ளது

97. சூண்டிகை வர்மம் (குண்டு காலம்)

இடம் :- மொளி வர்மத்தின் அருகில் சூண்டிகை வர்மம் உள்ளது.

98. விறுத்தி வர்மம்

இடம் :- கால் பெருவிரலிலிருந்து ஒரு விரல் (2.5 செ.மீ.) மேலாக விறுத்தி வர்மம் நிலைத்துள்ளது.

99. கால் சுண்டோதரி வர்மம் (விதிர்வர்மம்)

இடம் :- கால் பெருவிரலிலிருந்து இரண்டு விரலளவு (5 செ.மீ.) மேலாக கால் சுண்டோதரி வர்மம் உள்ளது.

100. பட வர்மம் (திட வர்மம்)

இடம் :- கால் பட பாகத்தில் (கால் பெருவிரல் சுவளியில் - பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்கும் நடுவில் ஒரு அங்குலம் (2.5 செ.மீ) மேலே நிலைத்துள்ளது.

101. கண்ணு புகழ் வர்மம் (பூழிக்காலம்)

இடம் :- பெருவிரல் நகக்கண்ணில் கண்ணு புகழ் வர்மம் நிலைத்துள்ளது.

குணம் :- கண்ணு புகழ் வர்ம நிலையத்தில் வர்மம் கொண்டால் பெருவிரல் நரம்பு குன்றிப்போகும். அகோர சீதம் எழும். விக்கல் தோன்றும்.

இளக்குமுறை :- நோயாளியை தரையில் உட்காரச் செய்து கொண்டு கால் பெருவிரல் நரம்பினை தடவிவிட்டு, பெருவிரலில் நெட்டி வாங்க வேண்டும். வர்ம தைலத்தை நரம்பில் இட்டு நான்கு நாட்கள் தடவவும். உள்ளுக்கும் மருந்து கொடுக்கவும்.

102. குதிகால் வர்மம்

இடம் :- கால் விசை நரம்பில் (காலின் பின்னால்) உப்புக்குத்தியின் மேலாக குதிகால் வர்மம் உள்ளது.

103. குதிரை முக வர்மம்

இடம் :- குதிரை முக வர்மம் முழங்கால் பகுதியின் நடுவில் உள்ளது. கால் முட்டுப் பகுதிக்கும் பாதத்திற்கும் இடையில் காணப்படுகிற முன்பக்க எலும்புப் பகுதியில் நிலைத்துள்ளது.

குணம் :- குதிரை முக வர்ம நிலையத்தில் பாதிப்பு கொண்டால் அடிபட்ட இடம் வீங்கும். சூலைநீர் கட்டும். களைப்பு ஏற்படும். சன்னி தோன்றும். கொளுத்து, பிடிப்பு ஏற்படும்.

குறிப்பு :- இந்த இடத்தில் மாத்திரைக்கு மிஞ்சி வர்மம் கொண்டால் கீழே விழுந்து விடுவார். அடிபட்ட இடத்தில் புண்புரைகள் ஏற்படும். காயம் ஆறாமல் விரிந்து சென்று சூலைப் புண்ணாக மாறும்.

சூலை நீரினை போக்க பறங்கிபட்டை சூரணம், மற்றும் கஷாயம் பத்தியத்துடன் அருந்தவும். அடிபட்ட இடத்தில் எண்ணெய் இட்டு ஒத்தடமிடவும். பூச்சும் இடலாம்.

104. கொம்பேறி வர்மம்

இடம் :- குதிரைமுக வர்ம நிலையத்திலிருந்து 4 விரல் (10 செ.மீ) கீழாக கொம்பேறி வர்மம் நிலை கொண்டு உள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் உடல் முழுவதும் வியர்த்து, உடலில் விஷம் ஏறியது போல் விருவிருப்பு தோன்றும். சன்னி எழும். தளர்ச்சை உண்டாகும்.

குறிப்பு :- வர்ம தைலமிட்டு பாதிப்புக்குள்ளான இடத்தை தடவவும். கஷாயம் உள்ளுக்குக் கொடுக்கவும். உப்பில்லாத கஞ்சி கொடுக்கவும்.

காலில் பாதித்த சில வர்மங்களை இதனால் இளக்கலாம்.

105. முடிச்சு மைய வர்மம் (பட்சி வர்மம்)

இடம் :- முடிச்சு மைய வர்மம் முழங்காலின் ஏழு விரல் (17 செ.மீ) கீழாக (கொம்பேறி வர்மத்திலிருந்து மூன்று விரல்

(7.5 செ.மீ) கீழாக) நிலைத்துள்ளது. பாதமும், முழங்காலும் இணைகின்ற பகுதியில் உள்ளது. (குறிப்பாக பெருவிரலுக்குச் செல்லும் நரம்புப் டகுதியில் இவ்வர்மம் உள்ளது.)

106. கோணச்சன்னி வர்மம் (அடக்க வர்மம்)

இடம் :- கோணச்சன்னி வர்மம் முடிச்சு வர்மத்தின் அருகில், கணுக்காலின் பின்புறம் காணப்படும் பெரிய நரம்பில் நிலைத்துள்ளது.

குணம் :- கோணைச்சன்னி வர்ம நிலையத்தில் பாதிப்பு கொண்டால் சன்னி ஏற்படும். முகத்தை ஒரு பக்கமாக திருப்பி கோணச் செய்யும். உடல் முழுவதையும் முறுக்கி வைக்கும். நாடித்துடிப்பை அறிய உதவும் நரம்பு தளர்ந்து காணப்படும்.

கோணச்சன்னி வர்ம நிலையத்தில் வர்மபாதிப்பு மீறிக் கொண்டால் வர்மம் கொண்ட மூன்றாம் நாளில் மரணம் நிகழும்.

இந்த வர்மம் பட்டால் நாடித்துடிப்பை ஆராய்ந்து அதன் குணங்களை அறிந்து, வல்லாரை மூலிகையை இடித்துச் சாறு பிழிந்து உள்ளுக்கும் கொடுத்து, வெளியிலும் பூச வேண்டும்.

நல்லுயிராய் இருந்தால் மட்டும் பிழைப்பார். இல்லாவிடில் மரணமடைவான்.

கோணச்சன்னி வர்ம பாதிப்பு ஏற்பட்டால் பாதிப்பு ஏற்பட்ட இடத்தில் 'தீத்தைலம்' தேய்த்து வருவது நல்லது.

முடிச்சு வர்ம குணமும், கோணச்சன்னி வர்ம குணமும் ஒன்றாகும். முடிச்சுவர்மத்திற்கு, கோணச் சன்னி வர்மத்திற்குச் செய்யும் இளக்கு முறையைச் செய்யவும்.

குறிப்பு :- இந்த இடத்தை (குதிகால் நரம்பை) உயிரடங்கும் இடம் என்பர். உடலில் நாடித்துடிப்பு இல்லையென்றாலும், இவ்விடத்தில் கை வைத்து பார்த்தால் நாடிதுடிப்பு தெரியும். இதிலும் நாடி துடிப்பு தெரியவில்லை என்றால் உயிர் போய்விட்டது என தெரிந்து கொள்ளவும்.

107. முட்டு வர்மம் (சிரட்டை வர்மம்) (கெஜ கேசரி வர்மம்) (கோச்சல் வர்மம்)

இடம் :- கால் முட்டுப் பகுதியில் முட்டு வர்மம் நிலைத்துள்ளது (இறைவனை தொழும்போது முழங்கால் ஊன்றி தொழுவோம். அங்ஙனம் தரையில் கால் ஊன்றப் படும் பகுதியை ஒட்டி உள்ளது முட்டு வர்மம்.)

குணம் :- முட்டு வர்ம நிலையத்தில் பாதிப்பு ஏற்பட்டால் முட்டுப் பகுதியிலுள்ள சிரட்டைப் பாகம் இயல்பாக இருக்கும் இடத்தைவிட்டு நகண்டுவிடும். பொறுக்க முடியாத வேதனை உண்டாகும். மயக்கம், தளர்ச்சை ஏற்படும்.

இளக்கும் காலம் :- விரைவில் இளக்குதல் நலம்.

இளக்குமுறை :- சிரட்டைப் பகுதியினை முன்பு இருந்த இடத்தில் சீராக பொருத்தி, தாளி சாற்றில் அரைத்த வெந்தய பசையினை துணியில் தடவி, சுற்றிக் கட்டி முறிவெண்ணெய் விட்டுவரவும்.

குறிப்பு :- தவறினால் முடவனாவர்.

108. கால் உறுமி வர்மம் (தொடை வர்மம்)

இடம் :- கால் உறுமி வர்மம் தொடைப் பகுதியின் நடுவில் நிலைத்துள்ளது.

குணம் :- இந்த இடத்தில் வர்மம் கொண்டால் கால்களில் களைப்பு தோன்றும். வேதனை எழும். தொடை எலும்பு நுண்டாகி விடும். நடக்க இயலாது. இதமாய் பட்டிருந்தால் ஏழு நாட்களில் குணமாகும்.

இளக்குமுறை :- தண்ணீர் விட்டுத் தடவவும்.

குறிப்பு :- கால் உறுமி வர்மம் ஒரு அடங்கல் ஆகும். கால்கள் தொடர்பான வர்மங்களுக்கு இந்த அடங்கலை பயன்படுத்தலாம்.

குறிப்பு : 11, 8, 6, 3, 23, 30, 46, 49, 51, 52, 48, 71 ஆகியவை, வர்மசூத்திரத்திலுள்ள 12 படுவர்மங்களாகும்.

அனுபவ மருந்துகள்

(எல்லா வர்மங்களுக்கும் அடக்கி உபதேசம் செய்தது).

(1) கூழ்

மலைதாங்கி இலை, உழிஞ்ஞை இலை, வேலிப்பருத்தி இலை, ஆடாதோடை இலை, இசங்கு இலை ஐந்து கழஞ்சு (25 கிராம்) வீதம் எடுத்து வந்து காம்புகளை நீக்கிடவும். பச்சரிசி, வெந்தயம் வகைக்கு ஆழாக்கு (0.68 லிட்) எடுத்து ஊற வைத்து முன் சொன்ன இலைகளுடன் சேர்த்து தேங்காய்ப்பால் விட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். அதில் அமுக்கூரமாவு, உழுந்து மாவு, வகைக்கு ஐந்து கழஞ்சு (25 கிராம்) சேர்த்து காய்ச்சவும். இறுகி வரும்பொது கொம்பரக்கு இரண்டு கழஞ்சு (10 கிராம்), வெள்ளை குந்திரிக்கம் ஒரு கழஞ்சு (5 கிராம்), கற்கண்டு மூன்று கழஞ்சு (15 கிராம்) எடுத்துப் பொடித்து தூவிக் கிண்டி இறக்கவும். இதை சிறு சூட்டுடன் குடிக்கவும்.

இப்படி மூன்று நாட்கள் காலையிலோ அல்லது இரவு தூங்கப்போகும் முன்போ குடிக்கவும்.

பத்திய பாகம் :- இந்த மருந்து அருந்தும் போது புளி, புகை, வாய்வு பதார்த்தங்கள், போகம் போன்றவற்றை அறவே நீக்கவும். பத்து நாட்கள் சென்றப் பிறகு இவைகளை உபயோகப் படுத்தலாம்.

தீரும் நோய் :- சகல வர்மங்கள், மேக வறட்சை, சயம், காசம், இருமல், இளைப்பு, ஈளை இவைகள் நீங்கி இரத்த புஷ்டி உண்டாகும். தாது இறுகி வலுவடையும். உடலில் பலம் காணும். பெண்களுக்கு இடுப்பு முதலிய இடங்களுக்கு ஊக்கமுண்டாகும். இரத்தப் போக்கு, இரத்த மேகம், துவாலை முதலிய நோய்கள் மாறும். மனோதிடம் உண்டாகும். இருமல், நெஞ்சு வலி, நெஞ்சு வேதனை இவைகளும் தீரும்.

2. சூரணம்

திரிகடுகு, கொட்டம், அமுக்கூரம், இருவேலி, சடமாஞ்சி, அக்கிறா, அரத்தை, கற்கடக சிங்கி, கொம்பரக்கு, வால் மிளகு, இராமிச்சம், ஏலம், அதிமதுரம், நறுக்கு மூலம், வெள்ளை

குந்திரிக்கம், ஆடோதோடைவேர், கண்டங் கத்திரி வேர், நத்தைச் சூரி வேர், செஞ்சட்டி வேர், இசங்கு வேர், துதளை இலை வகைக்கு இரண்டு கழஞ்சு (10 கிராம்) எடுக்கவும். மேலும், அதிவிடையம் கழஞ்சு ஒன்று (5 கிராம்), சுற்கண்டு கழஞ்சு ஐந்து (25 கிராம்), கோரோசனை அரை கழஞ்சு (2 1/2 கிராம்). யாவற்றையும் எடுத்து பொடித்து சீலை வடிவு செய்து வைத்துக் கொண்டு, வெருகடி வீதம் தேனில் கலந்து ஆறு நாட்கள் சாப்பிடவும்; தொடர்ந்து இதனை பசுவின் நெய்யில் ஆறுநாளும், சீனி (சர்க்கரை) யில் ஆறுநாளும் சாப்பிடவும்.

பத்தியம் :- உப்பு, புளிப்பு, பழைய சாதம், போகம் இவைகளை நீக்கவும்.

3. (அ) கிழாயம்

குறுந்தோட்டி வேர், தாறா (நத்தைச் சூரி) வேர், ஆடாதோடை வேர், வேலிப்பருத்தி வேர் வகைக்கு மூன்று பலம் (105 கிராம்) எடுத்துக் கொள்ளவும். மேலும் அதிமதுரம் பலம் இரண்டு (70 கிராம்), கொம்பரக்கு ஒரு பலம் (35 கிராம்), அறுகம்புல் வேர் ஐந்து பலம் (175 கிராம்) எடுத்து, உழக்கு (0.135 லிட்) பாலும், இரண்டு நாழி (1.36 லிட்டர்) நீரும் விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி உரியளவாகக் (0.65 லிட்டராக) குறுக்கி ஒரு நாளைக்கு இரண்டு நேரம் வீதம் மூன்று நாள் ஆறு வேளை குடிக்கவும்.

(ஆ) கிழாயம் (வேறு)

அறுகம்புல் வேர், பணப் புல், விஷ்ணு கிராந்தி, குறுந் தோட்டி வேர், சின்னிவேர், தொடுப்பை, உதிஞ்ஞெ, வேலிப் பருத்தி, கோரங்கிழங்கு, பொடுதலை, வில்வ வேர், சுண்டை வேர், குட்டித் தக்காளி வேர், வேப்பின் பட்டை, செஞ்சட்டி வேர், வெள்ளைக் குன்றி வேர், நத்தைச்சூரிவேர், ஆடாதோடை இலை, கண்டன் கத்திரி, தூதளை இலை, குடங்கல், திரிசாதி, அரத்தை, சுக்கு, சீரகம், முந்திரி பழம், தாளீச பத்திரி, அமுக்கூரம், அதிமதுரம், திப்பிலி, அரிசிவகை ஆறு (வெந்தயம், கார்கோலரிசி, சீரகம், வெப்பாலரிசி, கொத்தமல்லி, விளாலரிசி), இசங்கு வேர், கொம்பரக்கு, தேவதாரம், இவைகள் வகைக்கு இரண்டு கழஞ்சு (10 கிராம்) எடுத்து இடித்து மூன்று பங்குகளாக்கி, ஒரு பங்கு மருந்துக்கு மூன்று படி (3.9 லிட்டர்)

நீர் விட்டு கிழாயமாகக் காய்ச்சி உழக்களவாக (0.135லிட்டர்) குறுக்கி வடித்துக் கொண்டு திப்பிலி பொடியை மேல் பொடியாக தூவி காலை-மாலை குடிக்கக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் ஆறு நேரம் கொடுக்கவும்.

பத்தியம் :- புளி, பழைய சாதம் சாப்பிடக்கூடாது.

4. தலைக்குத் தேய்க்க குறுந்தொட்டி எண்ணெய்

பத்து பலம் (350 கிராம்) குறுந்தொட்டி வேரை சிதைத்து 15 படி (19.5 லிட்) நீரிலிட்டுக் காய்ச்சி 21/2 படியாகக் (3.25 லிட்) குறுக்கி வடித்துக் கொள்ளவும். அதனுடன் நாழி (0.65 லிட்) நல்லெண்ணெயும், நாழி (0.65 லிட்) பாலும் சேர்க்கவும். குறுந்தொட்டி வேரின் தோல் மூன்று கழஞ்சு (15 கிராம்), சந்தனம், சீரகம் வகைக்கு இரண்டு கழஞ்சு (10 கிராம்) எடுத்து பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி மெழுகுபருவத்தில் வடித்துக் கொள்ளவும்.

குறுந்தொட்டி சாறு கலந்துக் காய்ச்சப்பட்டால் உள்ளுக்கும் கொடுக்கலாம்.

தலையில் தேய்த்துக் குளிக்கும்போது அரப்பு போடக்கூடாது.

பத்தியம் :- புளி, பழைய சாதம் சாப்பிடக் கூடாது.

5. வசவு எண்ணெய்

பாவட்டைச் சாறு, பச்சைப் பாக்கு சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு நாழி (0.65 லிட்) எடுக்கவும். கொட்டம், சீரகம், கொம்பரக்கு, சாம்பிறாணி வகைக்கு மூன்று கழஞ்சு (15 கிராம்) எடுத்துப் பொடித்து, கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

முறிவு, தல்லல், சிதைவு, வேதனை உள்ள இடங்களிலும் வசையாத இடங்களிலும் இட்டுத் தடவவும். நலமுண்டாம்.

6. வர்ம வறட்சை - இருமலுக்கு உபதேச மருந்து.

இசங்கு இலையை கொண்டு வந்து நரம்பை நீக்கவும். ஒரு பிடி இலைக்கு ஆழாக்கு (0.65 லிட்) பச்சரிசி யிட்டு நன்றாக இடித்துக் கொண்டு, காய் காய்க்காத தென்னைமர குருத்தோலை கொண்டு பெட்டி ஒன்று முடைந்து அதனுள்ளே இடித்தமாவை வைத்து மூடவும். ஒரு பானையில் பாதியளவு தண்ணீர் விட்டு, தண்ணீர் படாதவாறு, பானையின் உள்ளே பருத்தி கெம்புகளை குறுக்கும் நெடுக்குமாக வைத்து அதன்மீது இம்மருந்துப் பெட்டியை வைத்து வேகவைத்துக் கொள்ளவும்.

இதை இரவு சாப்பாட்டுக்குப் பின் படுக்கையில் படுத்துக் கொண்டு, நெஞ்சில் ஒரு சுத்தமான துணியை விரித்து அதன் மீது சூடாக இம்மருந்தை வைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிடவும். இவ்வாறு மூன்று நாட்கள் சாப்பிடவும்.

மறுநாள் ஆடாதோடை இலையும், கருநொச்சி இலையும் சேர்த்து பிட்டவியல் செய்து எடுத்து, கிழிகட்டி நெஞ்சில் சூடு பிடிக்கவும். இப்படி நாள் ஒன்றிற்கு மூன்று வேளை சூடு பிடித்தால் எந்தவித காரணத்தின் நிமித்தமாக எழுந்த இருமலும் மாறும்.

நெஞ்சில் வேதனை தோன்றினால் ஓரிதழ் தாமரை சமூலத்தை வெந்நீரில் அரைத்து நெஞ்சில் பூசவும். நலமாகும்.

7. வர்மத்தால் எழும் சயம் முதலியவற்றிற்கு கோழி நெய்

தசை சுறுத்த பெட்டைக் கோழி ஒன்றை பிடித்து வந்து, அசடு நீக்கி, பத்து படி (13 லிட்) நீரிலிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாகக் குறுக்கி வடிக்கவும்.

குறுந்தொட்டி, உழிஞ்ஞை, நாயுருவி வகைக்கு 10 பலம் (350 கிராம்) எடுத்து, 30 படி (39 லிட்) நீரிலிட்டு, இரண்டரை படியாகக் (3.25 லிட்டராக) குறுக்கி வடிக்கவும்.

ஆடாதோடை, நத்தைச் சூரி, வெண் குன்றி வகைக்கு ஐந்து பலம் (175 கிராம்) எடுத்து, 15 படி (19.5 லிட்)

நீரிலிட்டு காய்ச்சி ஒன்றேகால் படியாகக் (1.68லிட்) குறுக்கி வடித்துக் கொள்ளவும்.

கொம்பரக்கு, தேவதாரம், அழுக்கூரம் வகைக்கு ஐந்து பலம் (175 கிராம்) எடுத்து 15 படி (19.5 லிட்) நீரிலிட்டு காய்ச்சி ஒன்றேகால் படியாகக் (1.6 லிட்) குறுக்கி வடித்துக் கொள்ளவும்.

பசுவின் நெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் அரை படி (0.65 லிட்) வீதம் எடுத்துக் கொள்ளவும்.

மேலும் அதிமதுரம், கொத்தமல்லி, அதிவிடையம், வெந்தயம், திப்பிலி, வால் மிளகு, திரிசாதி, அக்கிறா, அரத்தை வகைக்கு இரண்டு பலம் (70 கிராம்) எடுத்து கிழாயம் செய்த நீரில் அரைத்துக் கொண்டு, கிழாயங்களையும், எண்ணெய் வகைகளையும், நெய்யையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி மெழுகு பருவத்தில் வடிக்கவும். நெய் வடிக்கும் போது வடி பாத்திரத்தில் கொம்பரக்கு, மீறை, வெண் குத்திரிக்கம் இவைகள் வகைக்கு இரண்டு கழஞ்சு (10 கிராம்) எடுத்துப் பொடித்துத் தூவி, கிளறி நெய்யை வடித்துப் பத்திரப்படுத்தவும்.

இதில் கறண்டி நிறைவீதம் பன்னிரெண்டு நாட்கள் சாப்பிட கொடுக்கவும். இந்த நெய் உட்கொள்ளும் போது உப்பு, புளி, இனிப்பு, பழைய சாதம் இவைகளை நீக்கி பத்தியமாக இருக்கவும்.

தீரும் நோய் : கும்பில் (ஈரலில்) ஏற்படும் காந்தல், எரிச்சல், நோவு, நெஞ்சில் ஏற்படும் நோவு, கருள் நோவு, குடல் நோவு, விலாக்கொளுத்து, இருமல், சயம், இளைப்பு, ஈளை, காசம், பசி மந்தம், முதுகு வேதனை, மேகம், வறட்சை, சிறுநீரில் தோன்றும் தோடங்கள், வாந்தி, கை - கால் அசதி, தலைச்சுற்றல், கண் மசவல், கணை, சூலை முதலியவை நீங்கி உடல் பலமுண்டாகும். உடல் தெளிந்து அழகுடன் காணப்படும்.

காண்டம் II

படுவர்ம திறவுகோல்

காப்பு

ஏக நாயகமாய் எங்கும் இயங்கும் ஈசர் பாதம்
பாகமாய் நின்ற சக்தி பாதமும் பணிந்துப் போற்றி
ஆகமாய் படுவர்மத்தின் ஆணியாம் திறவுகோல் பாட
ஏகவாகன முகத்தோன் இணங்கிய குமரன் காப்பே - - 1

பொருள் :- ஏகாந்தமாக எல்லா இடங்களிலும் நிறைந்து நிலவும் இறைவனின் பாதங்களை வணங்கி, அவருடன் இணைந்து நிற்கும் சக்தியின் மலர் பாதங்களை போற்றி, படுவர்மத்தின் ஆணியான திறவுகோலைப் பாடுவதற்கு விநாயகப் பெருமானும், குமரக்கடவுளும் எம்மைக் காத்து அருள் புரிவார்களாக!

இணங்கியே படுவர்மத்தில்
ஈராறு தலமும் சொன்னேன்
பிணங்கினால் அசாத்தியத்தை
பிரித்து நாம் பாடி விட்டோம்
குணங்களும் இளக்கு மற்ற
கொடுமுறை அவுடதங்கள்
மணம் புகழ் வீச எங்கும்
மறைத்திடாது உணர்ந்து செய்யே - - - 2

பொருள் :- படுவர்மம் பன்னிரெண்டின் இடங்களையும், சாத்திய, அசாத்திய குணங்களையும், ஒவ்வொரு வர்மத்தை இளக்கும் முறையையும், அதற்குத் தரும் மருந்துகளையும் விளக்கமாக ஏற்கனவே படுவர்மத்திரட்டு என்ற நூலில் கூறியுள்ளேன். அதனை நன்கு அறிந்து தக்க மருத்துவம் செய்யவும்.

சொன்னதோர் திறவு கோலில்
சூட்சமாம் இளக்கு ஒற்றல்
வன்னமாம் எண்ணெய் மூன்றும்

---

*'படுவர்மத் திரட்டு' (விலை ரூ.100/- கிடைக்குமிடம்: சித்தமருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், அண்ணாநகர் (கிழக்கு) பேருந்து நிலையம் சமீபம், சென்னை- 600 102

மகிமை தந்தருளத்தானே
தின்னமாம் சுவெட்டாகத் தான்
திறமுடன் முடித்துச் சொல்ல
பொன்னு மாமலையில் வாழும்
புகழ் சோதி அருளினாரே - - - 3

பொருள் :- படுவர்ம திறவு கோலாகிய இந்நூலில் சூட்சமான இளக்குமுறை, ஒத்தல், எண்ணெய் ஆகிய இம்மூன்று பிரிவுகளை பதினாறு பாடல்களாக பாடிட, பொன் மாமலையில் வாழுகின்ற சோதி வடிவான இறைவன் அருளினார்.

படுவர்மத்தில் ஊனம் கொண்டால் இளக்கு முறை

அருளினார் படுவர்மங்களில்
அடிகுத்து கொள்ளுமாகில்
கருளினால் குருவின் பாதம்
கருத்தினில் வைத்து முன்னால்
பொருளதாய் உபதேசித்த
புகழ் மூர்த்தி நரம்பைப் பற்றி
இருளதை நீக்கி நன்றாய் இருத்து நீ
இருவிரல் கொண்டு செய்யே - - - 4

பொருள் :- உடலில் படுவர்ம நிலையங்களில் அடி, குத்து போன்றவற்றின் காரணமாக ஊனம் கொண்டால், குருவை மனதில் தியானித்து, அவர் உபதேசித்த புகழ் பெற்ற மூர்த்தி நரம்பை சந்தேகமின்றித் தெரிந்து, அளவாக இரு விரல்களால் அழுத்தி விடவும். இதனால் வர்மமுற்றோர் கண் மயக்கம் என்ற இருளிலிருந்து மீளப்படுவர்.

செய் தவம் அறிந்த ஞானி
செய்துமே அறிந்து கொள்வான்
பைதலாம் மநியற்றோர்கள்
பார்த்திட அறியமாட்டார்
கைதவம் தவறினாலும்
கண்டிடார் தலங்கள் தன்னை
மெய்தவ முனிவோர் சொன்னார்
முழுவிவரம் அறிந்து பாரே - - - 5

பொருள் :- குருவின் மூலமாக இந்த இடத்தை நன்றாக அறிந்து மருத்துவம் செய்பவர் ஞானியாவர். அறிவற்றோர் இந்த

இடத்தை அறியமாட்டார். கைப்பழக்கம் இல்லாவிடில் இந்த இடத்தைத் தெரிந்துக் கொள்ள மாட்டார் என்று தவம் செய்யும் முனிவர்கள் சொல்லியுள்ளது சிந்தனைக்குரியது.

பாரப்பா படுவர்மம் பன்னிரெண்டுக்கும்
பக்குவமாய் ஆணியது திறவு கோலாம்
ஆரப்பா ஆதிசிவன் பாதம் தன்னை
அறிவார்கள் அறிந்தவரே ஆசானாகும்
காரப்பா அத்தலமே வெளியாய் சொல்ல
காட்டுகிறேன் பிராண கலையோரம் பக்கம்தன்னில்
சீரப்பா கண் விழிக்கும் தாழ்வாய் பாரு
செப்பினேன் முதல் தரமாய் இசைத்து தானே - - 6

பொருள் :- படுவர்மம் பன்னிரெண்டுக்கும் ஆணிபோன்ற திறவுகோலான இந்த இடம் சிவனின் பாதமாகும். இதை நன்கு உணர்ந்தவரே குருவாவர். இவ்விடத்தை விளக்கமாகச் சொல்லுகிறேன். கேள்.

பிராண கலையின் ஓரமாக, உள்ள கண்ணின் தாழ்வான (கண்-மூக்கோடு சேருமிடம்) பகுதி உள்ளது.

தானென்ற அத்தலமே சிவனார் பாதம்
தரணிதனில் அறிந்தவர்கள் யோகியாகும்
மானென்ற அத்தலத்தில் மனத்தை வைத்தால்
மகிழ்ச்சி தரும் சிவ பதமும் கானலாகும்
கோனென்ற குருபரனை அடிபணிந்து
கொற்றவனே அத்தலத்தை அறியப்பெற்று
தேனென்ற அமிர்தநிலை கொண்டாப் போலே
தெரிந்து நின்று சிவபதத்தை போற்றிச் செய்யே - 7

பொருள் :- இந்த இடமே சிவனின் பாதம் ஆகும். உலகில் இதைத் தெரிந்தவர்கள் யோகி எனப்படுவர். இவ்விடத்தில் மனதை வைத்தால் மகிழ்வை தருகின்ற சிவனின்(தாணுவின்) பாதத்தைக் காணலாம். குமரக்கடவுளை அடிபணிந்து இந்த இடத்தை நன்றாக அறிந்து அமிர்த நிலை கொண்டது போன்றுத் தெளிவுடன் சிவனின் பாதங்களைப் போற்றி மருத்துவம் செய்யவேண்டும்.

இளக்குமுறை (வேறு)

போற்றியே கீழ்நாடி மோனின் மேலாய்
புகழ் பெறவே குழியொன்று காதின் தாழ்வாய்

ஏற்றியே அக்குழியில் விரல் கொண்டுன்ற
எழுந்திருப்பார் எந்த வர்மம் கொண்டாலும்தான்
தூற்றியே இத்தலத்தை வெளியிட்டால்
துடருமடா வெகுகோடி துன்பமுன்னை
சாற்றினோம் இத்தலங்கள் அடக்கமாக
சடுதியுடன் செய்ய ஒரு ஒத்தல் கேளே - - - 8

பொருள் :- கீழ் நாடியின் மோணின் மேலாகவும், காதின் தாழ்வாகவும் குழிபொன்று காணப்படும் இந்தக் குழியில் விரல் கொண்டு அழுத்தினால் எந்தவித வர்மம் கொண்டவராக இருந்தாலும் எழுந்திருப்பர்.

இந்த இடத்தைத் தீயவர்க்குச் சொல்லிக் கொடுத்தால் மிகுந்தத் துன்பங்கள் தொடர்ந்து வரும். எனவே அடக்கமாக நல்லவர்க்கு மட்டும் சொல்லிக் கொடுக்கவும்.

இளக்கு முறைச் செய்தப் பின்னர் வர்ம முற்றோருக்கு தரும் ஒத்தல் முறையைச் இனிச் சொல்லுகிறேன்.

ஒத்தடம்

கேளப்பா மஞ்சள் சன்னமிளகு ஓமம்
குப்பை சுக்கு அரத்தை சாத்தும் சந்தம்
வாளப்பா நவசாரம் பூடு அரப்பு
வசம்பு எலிபுழுக்கை நொச்சி எருக்கை தும்பை
சூளப்பா வெற்றிலையும் நின்பு புங்கு
சூழ்ந்த வித்து சமனாய் கொண்டு
மீளப்பா கிழி செய்து நின்ப எண்ணெய் தன்னில்
வெதுப்பி அனலேறிடவே ஊன்றுவாயே - - - 9

பொருள் :- மஞ்சள், மிளகு, ஓமம், சதகுப்பை, சுக்கு, அரத்தை, கிரி சாத்து, சந்தனம், நவச்சாரம், பூண்டு, இலுப்பைப் புண்ணாக்கு, வசம்பு, எலிப் புழுக்கையும்; நொச்சி, எருக்கு, தும்பை, வெற்றிலை இவைகளின் இலைகளும், வேம்பு வித்து, புங்கு வித்து ஆகிய மருந்துகளை எடுத்துக் கிழியாகக் கட்டி வேப்பெண்ணெயிலிட்டுச் சூடாக்கி வர்ம முற்றோருக்கு ஒத்தடமிடவும்.

ஊன்றிடவே படுவர்மம் தொடுவர்மம் சன்னி
உள்முடக்கு சூலையுடன் வலியும் தீரும்
ஊன்றிடவே வாய்வு கோபம் முறிவு ரத்தம்
உள்கடுப்பு கொளுத்துடனே களைப்பு சீதம்

ஊன்றிடவே மாறியது சுகமதாகும்
உண்மையிது தவறாது உமையாள் பங்கன்
ஊன்றிடவே எண்ணெய் ஒன்று சொல்வேன்
உத்தமனே நீ கருத்தாய் உணர்ப்போய் தானே - - 10

பொருள் :- ஒத்தடம் தரபடுவர்ம- தொடுவர்ம பாதிப்புகளும், சன்னி, உள்முடக்கம், சூலை, வலிப்பு, வாய்வின் கோபம், முறிவிலிருந்து இரத்தம் வடிதல், உள்நடுப்பு, கொளுத்து, களைப்பு, சீதம் போன்றவை நீங்கி நலமுண்டாகும் என்று சிவபெருமான் அருளியுள்ளார்.

இனி எண்ணெய் செய்முறையைச் சொல்லுகிறேன்.

உள்ளுக்குக் கொடுக்க எண்ணெய்

தானே சூரிச்சாறு முன்னாழி
தக்க எள்ளெண்ணெய் படியொன்று
மானே அதின் வேர்பட்டை பலம்
மகிழவரைத்து உள்ளதில் கலக்கி
கோனே ரோசினை கஸ்தூரி
குளிர்ந்த புனுகு ஒரொன்றிடையாய்
நானே மூர்த்தி நயனமொன்று
நாடியெடுத்து அதில் சேரே - - - 11

பொருள் :- மூன்று நாழி (3.9. லிட்.) நத்தைச் சூரிச்சாறு, ஒரு படி (1.3. லிட்.) நல்லெண்ணெய் எடுத்துக் கலந்து கொள்ளவும். நத்தைச் சூரிவேர்பட்டை, ஒரு பலம் (35. கிராம்) எடுத்து வந்து நன்றாக அரைத்து எண்ணெய் கலவையுடன் கலந்துக் கொள்ளவும்.

மேலும் கோரோசனை, கஸ்தூரி, புனுகு இவைகள் ஒரு கழஞ்சு (5 கிராம்) வீதமும், தேங்காய் ஒன்று எடுத்து அரைத்து பால் எடுத்து கலவையுடன் சேர்க்கவும்.

சேர்த்தே மெழுகு பருவமதில்
சிறக்க காய்ச்சி தான் வடித்து
பார்த்தே கறண்டி உள் கொடுத்து
பதைப்பு நலங்கள் அதிலுமிட்டு
கார்த்தே பத்தியம் தவறாமல்
கருந்தாய் கந்தன்மால் பாதம் போற்றி
தீர்த்தே வர்மமத் தனையும்
தெளியச் செய்யும் எண்ணெயிதுவே - - - 12

பொருள் :- கலவையை அடுப்பிலேற்றிக் காய்ச்சி மெழுகு பருவத்தில் வடித்து வைத்துக்கொண்டு கறண்டி நிறை வீதம் உள்ளுக்குக் கொடுக்கவும். மேலும் இந்த எண்ணெயை பதப்பு மற்றும் பொறி இடங்களில் இடவும்.

இந்த எண்ணெய் அருந்தும் போது பத்தியம் தவறாமல் காத்துக் கொள்ளவும்.

இம்மருந்தை நோயாளிக்குக் கொடுக்கும் முன்பு கந்தன், திருமால் ஆகிய தெய்வங்களின் பாதங்களை வணங்கியப் பின் கொடுத்தால் எல்லாவித பாதிப்புக்களும் நீங்கி சுகமடைவர்.

இதுவே நெட்டெல்லிடை நடுவே
இடுப்போர் காணும் இடங்கண்டு
அதுவே தலமென்ற தலத்தில்
அடக்கிப் பிடிக்க உடன் இளகும்
பொதுவோர் பாகமானாலும்
பூண்ட மயக்கமது மாறும்
மெதுவாபதனை பக்தியுடன்
மேல்கீழ் ஏறாதே இளக்கே - - - 13

பொருள் :- நெட்டெல்லின் இடையின் நடுவே, இடுப்பின் அருகில் காணப்படும் 'ஆயக்காலம்' என்ற இடத்தைக் கண்டறிந்து அடக்கிப் பிடிக்கவும். இதனால் உடலில் ஏற்பட்ட வர்மம் இளகும். பொதுவாக இந்த இடத்தைப் பிடித்தால் வர்மத்தால் ஏற்பட்ட மயக்கம் நீங்கும். இவ்விடத்தைத் தெளிவாக அறிந்தப் பிறகு இம்முறையைச் செய்யவும்.

இளக்கே மாத்திரையது கண்டு
இயல்பாய் தடவி எடுத்திருத்தி
தளைக்க தண்ணீர் உள் கொடுத்து
தாரை விடவும் தான் தீரும்
பளக்குமுடனே குண்டலிக்குள்
பகரும் வட்டத்துள்ளாக
எளக்க இடமென்ற தலத்தில்
இசைந்து குருவோ டிருந்து செய்யே - - - 14

பொருள் :- மாத்திரைக்கு மீறாமல் இவ்விடத்தைப் பிடித்து இளக்கி நோயாளியின் உடம்பைத் தடவி, தூக்கி இருத்தி, சுடுதண்ணீரை உள்ளுக்கும் கொடுத்துத் தாரை விடவும். குண்டலி வட்டத்திற்குள் அடங்கியிருக்கும் இவ்விடத்தை குரு தொட்டுக்காட்ட அறிந்து கொள்ளவும்.

குருவொ லறிந்து செய்வோருக்கு
குற்றமொன்றும் வராது
கருவாம் வர்மம் அத்தனையும்
காசினி மீதில் காட்டாதே
பருவா பருவம் கண்டறிந்து
பகரும் உச்சிதனில் தட்டி
வருவாய் நீயும் மெதுவாக
வாங்காதே அரைக்காசு அச்சணமே - - - 15

பொருள் :- குருவோடு இருந்து அவர் தொட்டுக்காட்டிய இடத்தை நன்றாக அறிந்து மருத்துவம் செய்பவர்களுக்கு கேடு ஒன்றும் வராது. வர்மம் எல்லாவற்றையும் வெளியில் சொல்ல வேண்டாம். குணங் குறிகளைக் கண்டறிந்து தடவி இளக்கு முறை செய்த பின்பு உச்சியில் ஒரு தட்டும் போடவும். இளக்கு முறைகள் செய்த உடன் பொருளைப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

மந்திர முறை

சொணங்கொண்டு மயக்கமது மிகவானாக்கால்
செபிக்க ஆங் - வங் - றீங் - ந ம சி வ ய
எட்டெழுத்தும்
குணங்கண்டு நூற்றெட்டு துலங்கப் போற்றி
குருபரனை மறவாமல் முன்னிறுத்தி செய்தால்
மணங்கொண்டு வீசிடுமே மாநிலத்தில்
வந்த எந்த வர்ம மதுவும் இளகி மீளும்
பணங்கொண்ட புகழ்ச்சியடா இதுக்கொவ்வாது
பார்புகழும் படுவர்ம திறவு கோல் முற்றே

- - - 16

பொருள் :- வர்மத்தின் காரணமாக அதிகமாக மயக்கம் ஏற்பட்டால் "ஆங் - வங் - றீங் - நமசிவாய" என்ற எட்டு எழுத்தை நூற்றெட்டு தடவை தியானப் செய்து, குருபரனை முன் நிறுத்தி இளக்கு முறை செய்தால் எந்த வர்மம் கொண்டு மயக்க, முற்றாலும் வர்மம் இளகுவதுடன், மயக்கமும் தீரும். பணத்தினால் புகழ்ச்சிக் கொண்டவர்களுக்கு இதனால் பலன் ஏற்படாது.

இத்துடன் படுவர்மத் திறவு கோல் முற்றும்.

காண்டம் III

தொடுவர்ம திறவு கோல்

காப்பு

இருள் வெளி யொளி மூன்றாக
இணங்கிய ஈசன்பாதம்
பெருகவே சிரசி லேந்தி
பேசுவேன் தொடு வர்மத்தின்
மருவியத் திறவு கோலை
மாநில த்தறிய வேண்டி
கருவுருவாக வாணி
கந்தன் மால் கணபதியும் காப்பே - - - 1

பொருள் :- ஒளியும், இருளும், வெளியும் ஒன்று கலந்த இறைவன் பாதத்தைப் போற்றி, பெருமை வாய்ந்த தொடுவர்ம திறவு கோலை மனித இனம் அறியுமாறு எடுத்துரைக்க திருமாலும், கலைவாணியும், முருகனும், கணபதியும் காத்தருள்வீராக!

காப்பான தொடுவர்மந் தொண்ணூற்றாறும்
கண்டதனை வகுத்த சாத்தியா சாத்தியங்கள்
தாப்பான ஆனையைப் போல் வெகுரியாய்ப் பாடி
தரந்தரமாய் வாதபித்த சேத்துமத்தும்
கோப்பாக பிரித்து இதில் குணங்கள் சிகிச்சை
கூறினோம் நிதானமதில் குறிப்பாய்த் தானும்
ஆப்பான திறவு கோலா மிந்நூலுள்ளே
அடக்கிவிட்டோ மிளக்குமந்த தலங்கள் தானே- - 2

பொருள் :- தொடுவர்ம நிலையங்கள் தொண்ணூற்றாறாகும். இதில் சாத்திய, அசாத்தியப் பிரிவுகள் உண்டு. இப்பிரிவுகள் சரீரத்திலுள்ள வாத, பித்த, சிலேத்துமத் தோடங்களின் அடிப்படையிலாகும். இதன் குணங்களை "தொடுவர்மதிரட்டு"* என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளதைக் கண்டு தேர்ச்சி பெறுவீர். இந்த நூலில் தொடுவர்மபாதிப்பால் ஏற்பட்ட வர்மக் கேடுகளை நிவர்த்திக்கும் இளக்கு முறைகளைக் கூறுகிறேன்.

---

*தொடுவர்மத் திரட்டு (விலை ரூ.100/-) கிடைக்குமிடம்: சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், E – 32, அண்ணா நகர் (கிழக்கு), சென்னை 600 102.

பொது திறவு முறைகள்

தானான சுழிமுனையாம் கண்கள் மத்தி
தானதிற்கு மடைத்த கண்ணதிலே தாக்க
மானான பிடரியதாங் குழியோரத்தில்
மண்டையோடதின் தாழ்வாய் சேர்ந்திருக்கும்
வானான காலமிது வலுவாம் பாரு
வையகத்தி லுரையாமல் வைத்தார் முன்னோர்
கோனான குருவருளால் காட்டவேண்டும்
கொற்றவனே தவறி விட்டால் கொடிதாம் பாரே
- - - 3

பொருள் :- கண்களின் ஆரம்ப ஓரத்திற்கு (மூக்கை அடுத்த பாகத்திற்கு) சுழிமுனை எனப்படும். இதில் அடி, இடி, தாக்கல் காரணமாக மயக்கமுற்றால், பிடரியின் (மண்டை ஓட்டின் பின்புறம் தாழ்வான பாகத்தில்) குழியில் காணும் நிலையத்தை கையாள வர்மம் மாறும்.

இதன் பெருமையை பண்டைய காலத்திய நம் முன்னோர்கள் வெளிவிடாது அடக்கமாக வைத்து நடத்தி வந்தார்கள். இந்நிலையத்தைக் கையாளுவோர் குருவின் மீது பயபக்தி வைத்து நடந்திடுவீர்!

பாரப்பா மணிக்கட்டின் மேலேமோணில்
பகுத்தறி வர்மத்தலத்தை பரீட்சியாதே
சேரப்பா சிறுநரம்பும் பெருநரம்புஞ் சேர்ந்து
சிரசுவழி மாறிவரும் கத்தரிக்கோல் போலாம்
நேரப்பா வர்மமது யிளகிவிடுஞ் சொன்னேன்
நிமிடத்தில் மயங்கிவிடும் நெட்டுரமானால்
காரப்பா மாத்திரையைக் கருத்தாய் நீயும்
கருணையுடனிருந்து பதமிதமாய்ச் செய்யே - - - 4

பொருள் :- கைமணிக்கட்டின் மேல் மோணில் நிர்ணயமாய்ப் பதுங்கி நிற்கும் நிலையம் ஒன்றுண்டு. இதில் சிறு நரம்பும் பெரு நரம்பும் சேர்ந்து சிரசு வழியே கத்தரிக்கோல் மாறலாய் ஓடும். இத்தலத்தைத் தொட்டு இளக்க உடம்பில் கொண்ட தொடுவர்மங்கள் சில நிமிடங்களில் இளகும். இதில் கொடிதான அடி, இடி பட்டால் மயக்கம் வரும். மாத்திரை அளவை அறிந்து கருத்துடன் இந்த இடத்தைக் கையாளுவாயாக.

செய்யவே பெருவிரலின் கவளிக்கு மேலே
சேராக யிருவிரலா மத்தலத்தில்

உய்யவே விரல் கொண்டகப் புறமாய்த் தாக்க
உத்தமனே யிளகுமது சூட்சஞ்சொன்னேன்
பைய்யவே முழங்கையின் மத்தி தன்னில்
பாங்காக யிருபுறமும் மேல் கீழாக
மையமடா யெட்டுவிரல் தள்ளிப் பாரு
மாத்திரைதான் பிசகாமல் யிளக்கிக் கொள்ளே - - 5

பொருள் :- கைப் பெருவிரலின் கவளிக்கு மேல், உள்ளும் புறமுமாக இரு விரல்களால் தாக்க (அழுத்த) உடம்பில் கொண்ட தொடுவர்மங்கள் நிச்சயமாய் இளகும்.

இது போல் முழங்கையின் நடுவில் (மணிக்கட்டிலிருந்து எட்டு விரல் உள்ளளவில்) மேலும், கீழுமாக இரு விரல்களால் மாத்திரை அளவாக அழுத்த உடலில் கொண்ட தொடுவர்மங்கள் இளகும்.

இளக்கவே முட்டதனிலிரு வசவு பாகவேதான்
எல்லோரம் குழியொன்று யிடத்தைக்கண்டு
பழக்கமாய் முன்சென்ம குறையுள்ளோன் போல்
பகுத்தறிய மாத்திரையாய் பணிந்து செய்ய
தழைக்கவே உன்குலங்கள் வாழும் வாழும்
தன்மையுடன் கைக்குழியில் மத்திபத்தில்
வழக்கமா யிருவிரலின் கீழும் மேலும்
வகையான யிருதலமும் உண்டிதனைக்காணே - - 6

பொருள் :- கால்மூட்டின் இருவசங்களில் ஒரமாய்க் காணும் குழிநிலையத்தை அறிவுடனும், பழக்கமுடனும் நிச்சயப்படுத்தி, மாத்திரை அளவில் அடக்கமாய் அழுத்த தொடுவர்மம் இளகும். இதை ஒழுங்காகச் செய்ய புண்ணியமுண்டாகும். இது போன்று இனியொரு இடத்தைக் கூறக் கேட்பாய்.

கையில் நடுவில் குழி ஒன்று உண்டு. இது பெருவிரல் தூண்டு விரல்களைச் சார்ந்து நிற்கும் இடம் ஆகும். இதையும் கையாளலாம்.

காணவே பள்ளைதனில் கீழ்ப்பக்கத்தில் தானும்
கருத்தான முண்டெலலொன்று விரல்போல் காணும்
தோணவே யிதின் நுனியில் குழியில் தாக்க
துலங்குமடா அத்தலத்தின் மகிமையெல்லாம்
பூணவே கைமூட்டுமடக்கி வைத்து நீயும்
பொதுமயிலே அத்தலத்தின் புதுமை காணும்
பேணவே யிருவசமும் சரமடங்கில்
பிலன்களொன்றும் யேக்காது காலந்தானே - - - 7

பொருள் :- வயிற்றினருகே இருபக்கங்களிலும் விரல் போன்று காணும் முண்டெலும்புகளின் நுனியில் குழியென்று காணும். இது மகிமையுடையதாகும். கையின் மூட்டை மடக்கிய நிலையில் இத்தலத்தைக் காணலாம். இவ்விடத்தில் மாத்திரைக்குள்ளாகத் தாக்க உடன் வர்மம் இளகும். மூச்சு போய் உயிர் நீங்கும் நிலையில் இந்த நிலையத்தை தாக்குமிடத்து பயனளிக்காது.

கர்ப்பிணிக்கு திறவுமுறை

தானாக கர்ப்பமுற்ற மாதர்க்கேதான்
தல்லூன கூடதனால் மயக்கமுற்றால்
ஊனான முன் தலத்திலூன்றித் தாக்க
உத்தமனே எழுந்திருக்கும் உறுதிபாக
மானான குணம் போலே மனத்தை வைத்து
மகிழ்ச்சிபெற தொட்டிளக்க மகிமையுண்டாம்
கோனான குருடரைப்போல் செய்தாயானால்
கொன்றவனும் நீயெனவே கூறுபாரே - - - 8

பொருள் :- கருவுற்ற பெண்களுக்கு வர்ம அடிகள் உடலில் கொண்டால் மயக்கமும், ஆயாசமும் உண்டாகும். இந்த நிலையில் முன்பு கூறிய இடத்தில் மாத்திரைக்குள்ளாக ஊன்றித் தாக்க உறுதியாக நினைவு வரும் என்பதை அறிந்து கொள்ளவும். இதனைக் கையாளுகையில் கருத்தும், சாமார்த்தியமும், அறிவும் வேண்டும். அல்லாமல் கருத்தற்று இதனைக் கையாண்டால் பெரும் பாவமும், பழியும், வந்து சேரும்.

கூறுவார் குவலயத்நிலிதை யறிந்து
கொற்றவனே செய்திடுவாய் கூர்மையாக
நேற்றுவார் கழுத்தின் கீழுரைக்கு மேலே
தெளிந்துநீ செய்யாதே கர்ப்பிணிக்கு
வேறுதான் தலமறிந்து பிடித்தாயானால்
வெய்யவனே வையகத்தி லாசானாவாய்
பேறுதான் பெற்றகுறை நீங்கிப்போகும்
பெரியவனாயிருந்து மிக வாழுவாயே - - - 9

பொருள் :- கர்ப்பிணிக்குக் கழுத்தின் கீழ் இடுப்பின் மேல் வேறு இடங்களைப் பிடித்து இளக்க முயன்றால் இப்புவியில் ஆசான் என்ற நல்லபெயரை அடைய முடியாது. கெடுதியும் உண்டாக நேரிடும். எனவே மேலே கூறிய இடத்தின் மகிமையை இப்புவியில் கருத்தூன்றி அறிந்து நலன் பெற முயற்சிப்பாயாக.

வாழுவா யவரிதனில் கேர்த்தியாக
வரிசையுடன் தானிருந்து மஞ்சிப் பெற்று
ஆளுவாய் கையடக்கமாக வைத்து
அடவுமுறை பிசகாமல் அறிந்தென்னாளும்
சூளுவாய் ஆசானையடுத் தென்னாளும்
சூட்சமுடன் கேட்டறிந்து சுறுக்கதாக
நாளுமே நடத்திடுவாய் நானிலத்தில்
நன்மையுண்டா மென்னாளுங் குணமிதாமே - - 10

பொருள் :- வர்ம இளக்கு முறைகளை கசடறக் கற்றுத் தேர்ந்து செயல் புரிவோரை இவ்வையகம் என்றும் போற்றும். எனவே நூலறிவோடு, ஆசானுடன் இருந்து மேற்கொள்ளும் கைப்பழக்கமுடன் சிகிச்சையில் ஈடுபட நல்ல பயனுண்டு. இப்புவியில் அனைவராலும் போற்றப்படுவாய்.

பொது திறவுமுறை

குணமாக யின்னமொரு கருவைச் சொல்வேன்
குவலயத்தில் மாதர்முதல் மற்றபேர்க்கும்
இணையாகச் செய்து நலம் பெறுவதற்கு
இயற்றுகிறேன் துடையதின்கீழ் மூட்டின் மேலே
அணையான அயிந்துவிரல் மேலேயப்பா
அடித்துடையில் பிடித்திடுவாய் அறிவாய்தானும்
பிணமான சவம் போலே கிடந்திட்டாலும்
பின்முழித்து பார்த்திடு வாருணருண்டாமே - - 11

பொருள் :- மற்றுமொரு இளக்கு முறையைக் கேட்பாய். இதனை பெண்கள் முதல் அனைவருக்கும் பொதுவாகச் செய்து நலனை விளைவிக்கலாம். தொடையின் கீழாக, மூட்டிற்கு மேல் ஐந்து விரலளவில் அடித்தொடையில் காணும் இந்நிலையத்தை, பிடித்து இளக்க வேண்டும். இதனால் வர்மமுற்று பிணம் போல் கிடக்கும் நோயாளியும் உணர்வு பெற்று கண்விழித்துப் பார்த்திடுவர்.

நாசித்தூள்

உணருண்டாம் மேதியுட பாலாழாக்கு
உற்ற நல்மிளகு சுக்கு பிலியுந்தும்பை
இணருண்டாம் வேருடனே பழமுங்கூட்டி

இதனுடனே துரிசு வூர்முதலிவேரும்
பிணருண்டாம் கழஞ்சுவொன்று பொடித்து சீலை
வடிவெடுத்து அதுக்கொப்பம் எருச்சாம்பலிட்டு
முணருண்டாம் உணாக்கியந்த தூளைச் சற்றே
மூக்கினுள்ளே செலுத்திடவும் முழிப்பார்தானே- - 12

பொருள் :- ஆழாக்களவு (0.68 லிட்) எருமைப்பாலில், மிளகு, சுக்கு, திப்பிலி, தும்பைவேர், கடல் பழம், துருசு, முருங்கை வேர் இவை ஒரு கழஞ்சு (5 கிராம்) அளவாகக் சுட்டிப் பொடித்து சீலை வடிவெடுத்து, அதன் அளவு மாட்டின் சாணிச்சாம்பலும் (விபூதியும்) கலந்து காயவைத்து, பொடித்து பத்திரப்படுத்தவும். இத்தூளை வர்மத்தால் மூர்ச்சையுற்றோரின் நாசியில் சிறிதளவு செலுத்த, மூர்ச்சை நீங்கி கண் விழிப்பர்.

தானான அறிவு வந்து முழித்தபோது
சரம் பார்த்து யிதம்பார்த்து தடவி விட்டு
மானான குணங்கண்டு மாறிக் கொள்வாய்
மகிழ்ச்சி தரும் உன்மனதில் களிப்புண்டாகும்
தேனானயிதின் குணம் போல் உலகத்தோர்கள்
திரண்டுவுனை விட்டிடார் தியங்குவார்கள்
ஊனான உள்பொருளை வெளிவிடாதே
உத்தமனே யின்னமொன்று உரைக்கிறேனே- - - 13

பொருள் :- இங்ஙனம் விழிப்புற்றோரின் உடல்நிலை, மூச்சு நிலை அறிந்து, உடலைத் தடவி விடவும். இந்நிலையில் திருப்தி உண்டாகும். அருகிலுள்ளோர் உன்னைக்கண்டு சிறப்பித்து மகிழ்வர். இந்த வர்ம நிலையத்தின் கருப் பொருளை வெளியில் கூறக் கூடாது. மேலும் ஒரு இளக்கு முறையைக் கூறுவதை கேட்பாயாக.

உரைக்கிறேன் மூட்டின்கீழ் கரண்டைக்குமேலே
உத்தமனே மத்திபத்தில் ஆதிசிவக்காலம்
கரைக்கிறே னத்தலத்தில் கீழ்மேலாய்
கையை கனவருத்தப்படாமலிதமாய் தாக்க
துரைக்குமே யிதுவிசையாய் சிரத்திலேறி
தூக்கம்விட்டு எழுந்திருக்கும் துணிவாய் நிற்கும்
புரைக்குமே உள்வைத்து செய்தாயானால்
புதுமையடா வுனக்கதிகம் மேன்மையாமே - - - 14

பொருள் :- காலின் மூட்டிற்கும், கரண்டைக்கும் நடுவில் ஆதிசிவக்காலம் நிலைத்து நிற்கிறது. இந்நிலையத்தில் கீழ் மேலாய், கைவிரலை வைத்து சாதாரண அளவிற்கு வருத்தமுறாத

விதத்தில் அழுத்த அவ்விசை தலைக்கு ஏறி மயக்க நிலையுற்றோர் மூர்ச்சை தெளிவார். இதனை அடக்கமாய் அறையில் வைத்து செய்தால் உன்னை பிறர் புகழ்ந்து பேசுவர்.

ஆகுமே யிதுகளிலே யடக்கம் வேணும்
ஆசானின் ஓர்மையது மனதில் வேணும்
நோகுமே வருத்தமது காணலாகா
நூட்பமுள்ளயிடமென்று நுழைந்து மற்றோர்
வேகமே கண்டறிய யிடமுங் காட்டாது
உத்தமனே யிதம்பதமாய்ச் செய்தாயானால்
போகுமே பெவ்விதமாய் கொண்டிட்டாலும்
பொழுததற்கு யிட்டதுகை கழிக்கொண்ணாதே - 15

பொருள் :- இத்தனை இளக்கு முறைகளைச் செய்யும் வேளையில் அடக்கம், ஆசானின் நினைவு இருத்தல் வேண்டும். இதனால் துயர் நீங்கப்பெற்று ஆனந்தநிலை எய்தலாம். மனநுட்பமும் ஆழ்ந்த அறிவும், நோய்நிலை, வயது, உடல் நிலை இவற்றை அறியும் திறமையையும் கொண்டு சிகிச்சையில் இறங்கினால் பயனுண்டு.

துகைகழிக்கு முன்பாகச் செய்யவேண்டும்
சோதனைக்கு நீயறிந்து வைக்கவேண்டும்
பகைமுடிக்கு மிடமென்று அறிந்து சற்றே
பாதகத்தை செய்திடவும் நினைத்திடாதே
வகை துகையும் காட்டிவிட்டோம் நூல்கள் தோறும்
வருந்தியிதை அறிந்துகொண்டு மாட்டைப்போலே
நகைபுரியு மிவ்வுலகில் நூல்கள் நன்னை
நன்றாக அடக்குமித்தொடுவர்மத் திறவுகோல்முற்றே
- - - 16

பொருள் :- முக்கியமாக ஒவ்வொரு வர்மத்துக்கும் அதற்கு உரிய இளக்கு முறையை வர்மத்தின் கால அவதிக்குள் செய்ய வேண்டும். கேடான நிலையை அறிந்திருந்தும், சிகிச்சையைச் செய்ய முற்பட்டால் நீ அனைவருக்கும் பகைவனாவாய். எனவே அப்படிப்பட்ட நோயாளியை விட்டு அகல வேண்டும்.

இதுவரை தொடுவர்ம இளக்கு முறைகளின் அரும்பெரும் பொருளையும், வகைகளையும் பிறர் அறியக் கூறினேன். அடக்கமும், தெய்வ சிந்தையும் மேற்கொண்டு செயல்பட்டால் நலம் விளையும்.

காண்டம் IV

வர்ம ஆணித் திறவு கோல்
(பொது முறைகள்)

காப்பு

அருளாங் குருவை மனதி லுன்னி
அரனார் பாதமதனைப் பணிந்து
பொருளாம் பூட்டின் திறவு கோலைப்
பொருந்தும் முறையாய்ப் புகன்றிடவே
இருளா மதனைத் தான் போக்கி
இறைவன் வாணி மால் முருகன்
கருளா மதனில் வந்து நின்று
கருணை செய்து காத்திடுமே. - - - - 1

பொருள் :- அருளுக்கு இருப்பிடமான குருவை மனதில் நினைத்தும், இறைவன் திருவடியை அடிபணிந்தும், "வர்ம ஆணித்திறவுகோல்" என்ற மர்மமான வர்மாணி நூலை முறைப்படி சொல்லிட சரஸ்வதி, திருமால், முருகன் முதலிய தெய்வங்கள் எம் மனதில் நிறைந்து காத்தருள்வாராக!

காப்பா மாணித்திறவு கோலைக்
கலங்கா துரைக்கக் காசினியில்
கோப்பாங் குருவின் சொல்படிக்குக்
குறியாய்ப் பொறியை எளிதாக
ஏப்பா மிடங்களொன் றொன்றாய்
இயல்பா யறிந்து செய்திடவே. - - - 2

பொருள் :- வர்மஆணி என்ற திறவுகோலை ஐயம் திரிபடக் கற்றுக் குருவின் சொல்படி உலகத்தாருக்கு எடுத்துரைக்க, ஒவ்வொரு பொறியின் நிலையத்தைக் குறிப்பாய் அறிந்து பழக்கப்படுத்தி வைப்பாய்.

வர்மத்தால் கண்ணடைத்தால் திறவு
(இளக்கு) முறை

வர்மம் கொண்டு கண்ணடைத்தால்
வருந்திச் செய்ய முறை கேளீர்

தர்மஞ்செய்யும் விரலிரண்டும்
தானே கடைக்கண்ண ருகுதனில்
விர்ணம் படாதே யமர்த்தி விடு
விழித்துக் கண்ணும் திறந்து விடும்
மர்ம மிதனை யடக்கி வைத்தார்
மாமுனி வொரு மண்டலத்தே. - - - 3

பொருள் :- உடலில் ஏற்படும் வர்மத்தால், கண்கள் இரண்டும் மூடிக்கொள்ளுமானால், இதற்குரிய இளக்கு முறையைச் சொல்லக் கேளீர்.

தர்மம் செய்வது வலது கை. இக்கையின் பெருவிரல், தூண்டு விரல் இரண்டாலும் மூக்கினைத்தொட்டு உற்பத்தியாகும் கடைக் கண்ணின் அருகில் ஊனம் ஏற்படாதவாறு அழுத்தவும். இதனால் இரண்டு கண்களும் திறக்கும். இந்த மர்மமான இடத்தைச் சித்தர்கள் இவ்வுலகத்தில் அடக்கமாய்க் கையாண்டு வந்தனர் என அறியவும்.

தலையில் அடிபட்டு வர்மத்தால் வாய்விட்டு அலறினால் இளக்கு முறை

மண்டை யதினில் வலியெடுத்து
வாய் விட்டலறி விளித்திடுகில்
கண்டீர் புருவமதனைத் தடவிக்
கடைக்கண் மோனெல்லமர்த்தி
கொண்ட புறத்தின் எலும்பிருத்தி
குறியாய்ப் பொருத்தும் தடவி விட்டு
விண்ட காதின் பிறமோணில்
விசையாயி ருத்த விட்டிடுமே. - - - 4

பொருள் :- தலையில் வலியுண்டாகத் தக்க அடியோ, தட்டோ படுமிடத்து, அதனால் வாய்விட்டு அலறிக் கூப்பாடு போடுவர்.

இதற்குரிய பரிகாரமாவது: கண்களின் புருவங்களை இருபுறமாய் அழுத்தித் தடவி விடவும். கடைக்கண்களுக்கு மேலாகத் தள்ளிக்காணும் எலும்புகளையும், புருவத்தோடு ஒட்டியிருக்கும் எலும்புகளையும் அழுத்தமாய்த் தடவி விடவும். அடுத்து, தலையின் பின் புறத்தையும், தலையின் எலும்புக்கூட்டின் பொருத்துகளையும் தடவவும். காதின் பின்பக்கத்து மோணில் அடங்கித் தாழ்ந்து இருக்கும் பாகத்தைச் சற்று அழுத்தமுடன் அழுத்த குணமேற்படும்.

வர்மத்தால் வாய் பூட்டிடுகில் இளக்கு முறை

அடுத்த வாயது பூட்டிடுகில்
கொடுத்த கவிள் கீழ்க் குழிதனிலே
பிடித்து வருத்தப் படுத்தாமல்
அடுத்தே (பதந்தில்) அமர்த்த வாய் திறக்கும். - - - 5

பொருள் :- வர்மத்தால் வாயானது கீழும் மேலும் நெருங்கி அடைத்து விட்டால், கவிழ்க்கூட்டின் கீழே காணும் குழியில் பதமாய் அழுத்த மூடிய வாயும் திறக்கும்.

வர்மத்தால் கண்விழி பிசகி, தலைவலி எடுத்தால் இளக்கு முறை

விழியைச் சுழித்து வலித்திழுத்து
பழியே செய்யும் மண்டை வலி
சுழியாம் முனையில் தாக்கிவிட
விழியும் நேராய் வலிபோமே. - - - 6

பொருள் :- வர்மத்தால் கண்விழிகள் சுளித்து, பக்க வாட்டில் இழுத்து, பொல்லாத தலைநோவைத் தரும். இதனை நிவர்த்தி செய்ய, மூக்கைத் தொட்டு உற்பத்தி ஆகும் கடைக்கண்ணின் அருகில் (மெய் தீண்டாக்காலம்) அழுத்தக் கண் விழிகள் செம்மையாகும். மேலும், தலைவலியும் மாறும்.

வர்மத்தால் கண்கள் திறந்த நிலையில் இருந்தால், இளக்கு முறை

விழித்தே கண்கள் திறந்திடுகில்
விடுத்த புருவத் தமர்த்த சுகமாமே. - - - 7

பொருள் :- வர்மத்தால் கண்விழிகள் பெரிதாய்க் (கூர்விழிகள்) கண்டிடுகில், கண்களின் மேல் புருவத்தை அழுத்தித் தடவி விடக் கண் விழிகள் சீர்ப்படும்.

வர்மத்தால் மூக்கு சுளித்து, விறையல், சன்னி, சுரம் கண்டால் இளக்கு முறை

மூக்குச் சுழிந்து விறையலுடன்
தூக்கம் சுகசன்னி யிக்களுபாய்
தீக்கம் திலர்தம் விரல் மேலே
தாக்கி யமர்த்தச் சுகம் வருமே - - - 8

பொருள் :- வர்மத்தின் நிமித்தம் முக்கு சுழித்தும், உடல் விறைத்தும், கண்ணில் தூக்கம் கொண்டும், சன்னியுடன் இக்கல் காணுமிடத்து, திலர்த வர்மத்தின் (இருபுருவத்தின் நடுமையத்தில்) ஒரு விரல் மேலாகக் காணும் நிலையத்தை அழுத்திட நலமுண்டாம்.

வர்மத்தால் வாய் திறந்திடுகில் இளக்கு முறை

வல்லா வாயது திறந்திடுகில்
வழுத்தும் சென்னியில மர்த்திடப்போம் - - - 9

பொருள் :- வர்மத்தால் வாய் திறந்து காணப்பட்டால் சென்னியில் இருபுறத்தும் அழுத்திவிட நலப்படும்.

வர்மத்தின் நிமித்தம் பெருமூச்சுவிட்டு, வலியும், இக்கலும் கண்டால், இளக்கும் முறை

பொல்லா சுவாசம் வலி யிக்கள்
போகப்பேன் குழிதனில் தாக்கே - - - 10

பொருள் :- வர்மத்தின் காரணமாக, பெரும் சுவாசமும், வலியும், இக்கலும் கண்டால் பிடரிக்குழியில் அழுத்த குணமாகும்.

வர்மத்தால் தலை ஆட்டங்கொண்டால் இளக்கு முறை

தலையது ஆடின பேர்களுக்கு
மனதில் பரனைத் தியானித்து

மிலையா கழுத்து கீழ் சிப்பி தாரை
எலும் பினிசவி லமர்த்திடுமே - - - 11

பொருள் :- வர்மம் கொண்டு, தலையானது தன் சுய நிலையிழந்து, ஆட்டங் கொண்டால், இறைவனை மனதில் தியானித்து, கழுத்தின் கீழ் சிப்பியின் தாரைப் பாகத்தில் காணும் எலும்பின் இசைவில் அமர்த்திட சுகம் ஏற்படும்.

வர்மத்தால் நாக்கு வெளியே தள்ளினால் இளக்கு முறை

நாக்கது வெளியே தள்ளிடுகில்
நலமாய் வலமார்பின் மேலே
தாக்க விரல் வைத்தமர்த்திடுகில்
தானுள்ளே யது போய்விடுமே - - - 12

பொருள் :- வர்மத்தின் காரணமாய், நாவானது வெளியே தள்ளுமானால், வலதுமார்பின் ஒருவிரல் (2.5. செமீ) மேலாக விரலால் அழுத்தி அமர்த்திடுகில் வெளியே தள்ளிய நாக்கானது, வாயின் உள்ளே புகும்.

வர்மத்தால் நாக்கு உள்ளே இழுத்து விட்டால், இளக்கு முறை

நாக்கது உள்ளே வாங்கிடுகில்
நலமா யிடதுகால் தொடை பொருத்தில்
தாக்க யிதமாய் விதிமுறையாய்
தானும மர்த்த சரியாமே. - - - 13

பொருள் :- வர்மத்தின் காரணமாக நாவானது உள்ளே இழுத்து விட்டால், இடது கால் தொடைப் பொருத்தில் முறைப்படி அழுத்த நாக்கு சுயநிலைக்கு வந்து விடும்.

வர்மத்தால் லிங்கத்தில் இந்திரியம் கசிந்தால், இளக்கு முறை

இந்திரியம் லிங்கத்தில் கண்டிடிலோ
எந்தன் குருவை உள் நினைந்து

முந்தித் திலர்தமரை யிறை கீழ்ப்புறமாய்
முறையாய்க் கைகுத்தச் சுகமாகும் - - - 14

பொருள் :- வர்மத்தின் நிமித்தம், ஆண்குறியில் இந்திரியம் வடிந்து கண்டால், ஆசானை மனதில் நினைத்து, திலர்தம் என்ற வர்மத்தின் அரை விரல் அளவு (1.25 செமீ) கீழாக அழுத்தச் சுக மேற்படும்.

வர்மத்தால் கைப்புஜம் நழுவி விழுந்தால், இளக்கு முறை

புசமது நழுவி பதிந்திடுகில் புகல்வேன்
கைக்குழியி லமர்ந்த தொன்று
விசை யெலும்பின் பொய்கையி லமர்த்த
நழுகி உருளை யேறுமன்றே - - - 15

பொருள் :- வர்மத்தின் காரணமாக கைப்புஜமானது நழுவிக் கீழிறங்கி விட்டால், கைக்குழியில் (கழுக்கூட்டில்) காணும் விசையெலும்பில் அமர்த்தவும். கைப்புஜத்தின் உருளை எலும்பு நழுவி மேலே ஏறித் தன்னியல்பான இடத்தை அடையும்.

வர்மத்தால் சலாசயம் அடைத்தாலோ, இளகினாலோ இளக்கு முறை

சலாசயமடைத்தா லிடமார்பில்
மூவிரல் யிடமாய் அமர்ந்திடுவாய்
சலாசய மிகவும் யிளகிடுகில்
வலமார்பில் முன்முறைப் படியாம் தானறியே - - 16

பொருள் :- வர்மத்தின் பொருட்டு சலாசயம் என்று கூறும் சிறுநீரகம், அடைத்து வருத்த மேற்பட்டால், இடது மார்பின் இடது பக்கம் மூன்று விரல் (7.5 செ.மீ.) தாழ்த்தி விரலால் அமர்த்திட நலம் ஏற்படும்.

அதிகமாக சிறுநீரானது வெளியாகி விடில், வலது மார்பின் கீழ் மூன்று விரல் (7.5 செமீ.) இடம் தாழ்த்தி விரலால் அமர்த்திட இயல்பான நிலையுறும்.

மேற்படி வகை செய்தும் பயனில்லை எனில் உள்வர்மம் என அறிந்து வேறு இளக்கு முறை

அறியே அம்மட்டா யிருந்தால்
அது உள்வர்ம மென்றறிவீர்
பிறியா மலமும் நீரடக்கில் பிசகா
நீர் விலக பையில் தாக்கிடுமே - - - 17

பொருள் :- சலாசயம் எனக்கூறும் சிறுநீர் அடைப்பட்டு மேற்படி இளக்குமுறை செய்தும் நலம் ஏற்படாவிடில், அதனை உள்வர்மம் என அறிவீர்.

மலமும், மூத்திரமும் அடைத்திடுகில், விலாவின் வலது இடது பக்கத்தில் காணும் மல-சலப்பையை அழுத்த மலமும், மூத்திரமும், முறையே வெளியாகும்.

வர்மத்தால் மூத்திரமும், மலமும் அடைபட்டால் இளக்கு முறை

மூத்திர மலமும் தான் சிக்கில்
மூலாதார வுட் பொருத்தசவில்
பத்திரமாக ஊன்றிடவே
பாரும் சுகமாய் வந்திடுமே - - - 18

பொருள் :- வர்மத்தால் மூத்திரமும், மலமும் சிக்கி வெளி வராமலிருந்தால், மூலாதாரத்தின் மேல் காணும் எலும்புப் பொருத்தில் கவனமுடன் விரல் ஊன்றி அழுத்திட மலமும், நீரும் வெளியாகும்.

வர்மத்தால் சன்னி வந்து வலித்திழுத்தால் இளக்குமுறை

வெட்டு வெட்டி மறித்திடுகில்
மூலாதாரம் முதற் கொண்டு
மட்டா யாறு விரல் மேலே யதில்
அந்த வுயர்ந்தல மதிலே
அங்கே பார்த்தால் காணுதடா

தாரை யென்ற வோரெலும்பு
இங்கே யந்த யெலும்பதின் மேல்
இசைவிலமர்த்தச் சுகமாமே. - - - 19

பொருள் :- வர்ம முற்றோர் சன்னி வலிப்பால் அவதிப்பட்டால், மூலாதாரத்திற்கு ஆறுவிரல்களுக்கு மேல் உயர்ந்து காணும் தாரை எலும்பின் இசைவில், விரலால் அமர்த்த சன்னி நீங்கிப் பழைய நிலை யடைவார்.

வர்மத்தால் மலமும் மூத்திரமும் வராது அடைத்தால் இளக்கு முறை

செலமே போகா திருந்திடுகில்
தொப்புளின் கீழ் நால் விரலிடமாய்
மலமே போகா தானாக்காலது போல்
வலத்தே பிட்டி எல்லின் மேலே
பதமாய் நசுக்க மல சலங்கள்
பகரும் வெளியில் சுகமாக - - - 20

பொருள் :- வர்மம் கொண்டு மூத்திரம் போகாதிருந்தால், தொப்புளின் இடப்பக்கம் கீழ் நான்கு விரல் தள்ளி அழுத்த நீரிறங்கும். மலம் போகாதிருந்தால், வலது பக்கம் பிட்டி எலும்பின் மேல் மெதுவாக அழுத்திவிடவும். மல மிறங்கும்.

வர்மத்தால் காம வெறியுற்று லிங்கம் நிமிர்ந்திட்டால் இளக்கு முறை

மதமாய்க் காமவெறியாலே
மதர்த்து லிங்கம் தானெடுத்தால்
கொடிதாம் கறண்டை கண்ணதிலே
சடிதாய் தட்டவுடன் தளருமடா - - - 21

பொருள் :- வர்மத்தின் காரணமாகக் காமவெறி யுற்று, மதம் பிடித்த வகையில் ஆண் குறியானது நிமிர்ந்து நின்றால், கொடிதான வர்மநிலையமான கறண்டைக் கண்ணில் பலமாக தட்டொன்று தட்ட ஆண்குறி தளர்ந்து சுயநிலை அடையும்.

வர்மத்தால் மலம், சிறுநீர் அடைபட்டு சுவாசம் விட அவதிப்பட்டால் இளக்கு முறை

இடிதான் கொண்டே சுவாசமது
விடவே சீரா யில்லாட்டால்
கைக்குழிதான் கீழ் வாறெலும்பில்
மெய்க் குழிபோலே காணுமதில்
அக்குழி யதனில் தானமர்த்த
சிக்கும் மலசல சுவாசம் நேராமே - - - 22

பொருள் :- உடலில் குத்து அல்லது தாக்குப்பட்டு, மலம், சிறுநீர் அடைப்பட்டு, சுவாசமானது தடைப்பட்டு வருத்தம் கொடுத்தால், கைக்குழியின் கீழாக உள்ள வாறெலும்பின் மேலாகக் காணும் மெய்க் குழி போல் காணும் இடத்தில் விரலால் அமர்த்த, சிக்கிய மலமும் மூத்திரமும் வெளிப்பட்டு, சுவாசம் சரிவர விட இயலும்.

11,864

வர்மத்தால் ஆண்குறி உள் வாங்கிடில் இளக்கும் முறை

உள்ளே லிங்கம் வாங்கிடுகில்
மெள்ளே கூம்பின் குழிவதிலே
தள்ளோர் விரல் பேலிடமாக
வில்லே யமர்த்த வருமே லிங்கமதும் - - - 23

பொருள் :- வர்மத்தின் காரணமாக ஆண்குறி உள்வாங்கினால், மெதுவாகக் கூம்பின் குழியில் ஒருவிரல் (2.5. செமீ.) மேலாக அமர்த்த லிங்கம் தன்னிலையுறும்.

வர்மத்தால் ஆண்குறி வெளியே நீண்டிடுகில் இளக்கும் முறை

ஆண்குறி வெளியே நீண்டிடுகில்
அதுவும் பயமே யல்லாது
தான்குறி மட்டா யாவதற்கு
தானே தொப்புளினிருவசமும்
வான்குறி யிரு விரல் தான்தள்ளி
வைத்து விரலா லழுத்திடவே

சாண்குறியான ஆண்குறியும்
சரியாய் மட்டாய் வந்திடுமே - - - 24

பொருள் :- வர்மம் காரணமாக ஆண்குறி வெளிப்புறமாய் நீண்டிடுகில், தொப்புளின் இருபக்கமும் இருவிரல் (5. செ.மீ.) தள்ளி விரலால் அழுத்திட ஆண்குறி சரியான நிலையை அடையும்.

வர்மத்தால் உள் மூலம் வெளியே தள்ளி விட்டால், இளக்குமுறை

மூலந்தள்ளி கொண்டாக்கால்
முறையாய்ச் செய்ய வகை கொளாய்
கோலாங் கைக்குழி காறையுடன்
கருத்தாக யமர்த்த வந்திடுமே - - - 25

பொருள் :- வர்மத்தால் மூலமானது (மல துவார உறுப்பு) வெளியே தள்ளி விட்டால், கழுக்கூட்டோடு இணையும் காறை எலும்பைச் சார்ந்த பெரிய நரம்பை நுணுக்கமாக அமர்த்த, மூலம் தன்னிலை யுறும்.

வர்மத்தால் உள் யோனிட்டாகம் வெளியே தள்ளி விட்டால், இளக்கு முறை

யோனி வெளியில் நீண்டிடுகில்
உகந்து சூட்சித்து பார்த்து
தானே கூம்பிலோர் விரல் வலமாக
சலியா தமர்த்த சாந்த மென்னே - - - 26

பொருள் :- உடலில் ஏற்பட்ட வர்மத்தால், பெண்குறி வெளியே நீளமாய்த் தள்ளிவிட்டால், கவனமுடன் சோதித்து, கூம்பின் வலப்புறம் ஒருவிரல் (2.5 செமீ.) அளவில் அமர்த்தப் பெண்குறி தன்னிலையடையும்.

வர்மத்தால் வாந்தியும், சுரமும், விக்கலும் கண்டால், இளக்கு முறை

சாந்தமுடனே சர்த்தல் விக்கல்
தணியாச் சுரமும் தான் தணிக்க

வாய்ந்த யிடுப்பின் பெரு நரம்பை
வழியா யமர்த்த மாறிடுமே - - - 27

பொருள் :- வர்மத்தின் காரணமாக வாந்தியும், விக்கலும், நீங்காத சுரமும் உடலில் கண்டால் இடுப்பில் காணப்படும் பெரும் நரம்பினை அமர்த்தச் சுகமாகும்.

வர்மத்தால் இக்கல், விக்கல் கொண்டால் வேறு இளக்கு முறை

மாறா யிக்கள் விக்கலுந்தான்
மாற்றப் பிடி யொன்றது கேளு
கூறா யுச்சி யதில மர்த்தக்
குணமாம் விக்க லிக்களதே - - - 28

பொருள் :- வர்மத்தால், நீடித்துக்காணும் இக்கல், விக்கலை மாற்றிட இனியொரு வழியைச் சொல்லக் கேளாய். உச்சியில் அமர்த்தித் தடவி விட விக்கல், இக்கல் மாறும்.

வர்மத்தால் இரத்தம் முறிந்து பாய்ந்திட்டால் நிறுத்தும் முறை

ரெத்தம் முறிந்து பாப்ந்திடுகில்
உத்த முழங்காலின் கீழே
பற்றும் நரம்பில் தானமர்த்த
வற்றி வறளும் ரெத்தமதே - - - 29

பொருள் :- வர்மத்தால் இரணப்பட்டு, இரத்தமானது முறிந்து உடம்பின் எந்தப் பாகத்திலிருந்தாவது வெளியே பாய்ந்தால், முழங்காலின் கீழே காணும் சிவசக்தி நரம்பினைப் பிடித்து அமர்த்த, ரத்தம் பெருக்கெடுத்து வடிதல் கட்டுப்பட்டு நிற்கும்.

வர்மத்தால் சன்னி, வலி வந்து இழுத்திடுகில் இளக்கு முறை

வலியாய் வலித்து யிழுத்திடுகில்
வாங்கும் பெருவிரல் மொழியதின் மேல்
வலியா நமர்த்தி யிழுத்திடுகில்
சன்னி வலியினை மாறிடுமே - - - 30

பொருள் :- உடலில் ஏற்படும் வர்மத்தால் மயக்கத்துடன் வலிவந்து இழுத்தால் கால் பெருவிரல் மொழியின் மேல் கூச்சமின்றி அமர்த்தி இழுத்திடுகில் சன்னி, வலி இவைகள் மாறும்.

வர்மத்தால் கழுத்தைக் கோணி இழுத்து நோவுற்றால், இளக்கு முறை

கழுத்தைக் கோணி யிழுத்து நொந்நால்
கருத்தாய்க் கேளு மோர் முறையை
இகேத்த புறத்தின் மறுவசங் கை
உசத்திக் குழியுள் நரம்பிழுக்க
கழித்த நரம்பு விட்டிளகிச் சுகமாய்
கழுத்து கோணலும் தான்போகும்
அழுத்த முடனே என் குருவும்
அறியச் சொன்னார் அவனியிலே - - - 31

பொருள் :- வர்மத்தால், கழுத்து இழுபட்டு, தாழ்ந்து நோவுற்றால், இதைச் சரிப்படுத்த ஒரு முறையைக் கவனமாய்க் கேட்பாய். எந்தப் பக்கம் இழுப்பட்டுத் தாழ்ந்து இருக்கிறதோ அதன் மறுபக்க கையை உயர்த்திக் கழுக் கூட்டில் காணும் நரம்பை இழுக்க நலமேற்படும்.

இதனால், முகத்தில் சுழியுற்ற நரம்பு இளகி, கழுத்து தன்னிலையுறும் என்று சித்தர் உலகோருக்கு உபதேசமாய்க் கூறியதாகும்.

வர்மத்தால் கழுத்துக் குழைந்து விழுமானால், இளக்குமுறை

கழுத்துக் குழைந்து விழுந்திடுகில்
கண்டே யூகர்த்த முறையது கேள்
வழுத்தும் ஆளை நிமிர்த்திருத்தி
வரியாம் முதுகில் தான் தடவி
அழுத்தமாக உச்சி மீதிலடியும்
திடமாய் அஞ்சுக் குத்தே
கழுத்திய தனில் தான் தாக்கி
சுற்றும் தடவி விடப்போமே - - - 32

பொருள் :- வர்மமுற்று கழுத்து தன்னிலைக் கெட்டு, குழைந்து விழுந்திடுகில், இதை மாற்ற வழி கூறுகிறேன்.

வர்மமுற்றோரை, நிமிர்த்தித் தரையில் அமர்த்தி இருத்தவும். முதுகின் நடுவரியை மேல் கீழாய்த்தடவி விடவும். பின்பு நோயாளியின் தலையில் மருத்துவர் தன் கையால் ஐந்து குத்துக்கள் இடவும். பின்பு கழுத்துப் பாகத்தைச் சுற்றி அழுத்தித் தடவி விடச் சுகமேற்படும்.

வர்மத்தால் இடுப்புக் குழைவுற்றுக் கடுத்திட்டால் இளக்கு முறை

இடுப்புக் குழைந்து கடுத்திடுகில்
இதுவே தீர்க்க முறையது கேள்
முடுக்காய் தாரையது தடவி
முழுவதும் பிட்டி யசைத்திருத்தே
இருத்தித் தூக்கி எழுப்பி யிருத்தி
இதமாய் யுச்சியில் கையை வைத்து
வருத்தி பிட்டி மத்தி தனிலே
அமர்த்தி தட்டயிதம் வருமே - - - 33

பொருள் :- வர்மத்தின் காரணமாக, இடுப்பு தன்னிலை கெட்டு குழைந்து கடுத்துக் காணப்பட்டால், அதற்குரிய பரிகாரத்தைச் சொல்லக் கேளாய்.

தாரையை (இடுப்பின் பின் புறத்தை) தடவி தாழ்த்தி, இடுப்பை அசைத்து, பலமாகத் தூக்கி இருத்தவும். பிறகு உச்சியில் மருத்துவர் தனது கையை வைத்து மற்றொரு கையால் ஒரு தட்டு போடவும். மருத்துவர் தனது பின்னங்காலால் பிணியாளியின் பிட்டியின் மத்தியில் அமர்த்தித் தட்டச் சுகமாகும்.

வர்மத்தால், குழந்தை திவங்கி அழுது சோர்ந்து மயங்கிடுகில் இளக்கு முறை

குழந்தை யழுது திவங்கியுடன்
தளர்ந்து மயங்கி கிடந்திடுகில்
அழுந்த முதுகு விலாவு நெஞ்சும்
அமர்த்தித் தடவத் தீர்ந்திடுமே - - - 34

பொருள் :- வர்ம முற்று, குழந்தை திவங்கி, அழுது, சோர்வுற்று மயக்கமுற்றால் அதற்குப் பரிகாரம் சொல்லக் கேட்பாய்.

குழந்தையின் முதுகு, விலாப்பக்கம், நெஞ்சு இவற்றை முறைப்படித் தடவி விட சுகமேற்படும்.

வர்மத்தால், குழந்தை நோயுற்றால் கண்டறியும் முறை - நடவுமுறையும், மருத்துவமும்

வர்மங் கொண்டு மயங்கிடுகில்
வளர் சறுவாங்கத் மத்திடுமே
வர்மமென்று அறிந்திடவே
வாள கண்திறந்து பார்த்திடுகில்
வர்மமென்றால் கருவிழியில்
வளர்மணியதுவும் பிசகாக
வர்ம மென்றாலிட வலமாய்
வளர் மணி சரியில் வர்மமிதே - - - 35

பொருள் :- வர்மத்தால் மயக்கமுற்ற குழந்தையின் சரீரம் முழுவதையும் நன்றாக வர்ம முறைப்படித் தடவி விடவும்.

வர்மத்தால், உற்றநிலையென்று திடமாய்க் காண வழியொன்று கூறுக் கேட்பாய். குழந்தையின் கண்களைத் திறந்து பார்த்திடும்போது, கண்களின் கருவிழியின் வளர் மணிகள் இடது அல்லது வலது பக்கமாகப் பிசகி இருந்தால் வர்மம் கொண்டது என தீர்மானிக்கவும். வர்மம் கொள்ளாதிருந்தால், வளர்மணி சரியாகக் காணும்.

வல்லீரான மருத்துவரே
வகையாய்ப் பொறியில் தான் பட்டால்
வெல்வீரான யிடமதனை
விளம்பக் கேளீர் மேதினியில்
சொல்வீரோ ரொன்றாகவே தான்
சூட்சத்துடனே தானறிய
கல்வீர் சிறந்த கருணையுள்ளோர்
காட்டும் வர்மம் தானமதே - - - 36

பொருள் :- ஐம்பொறிகளில் வர்மமுற்ற வரை நலப்படுத்த, நல்ல முறையில் வர்ம மருத்துவம் பயின்ற மருத்துவர்கள் முற்படுவார்கள். இதனைக் கருத்துடன் கேட்டு, கருணையுடன் செயலாற்ற முற்படுவீர்.

காட்டும் வர்மத் தலங்களையும்
கருத்துளச் செய்யும் வகையதுவும்
மூட்டும் விசையும் மாத்திரையும்
முன்பின் செய்யுமுள் கருவும்

சூட்டும் மருந்தும் சுகவாழ்வும்
சொல்வோ மொத்தல் தலைக்கெண்ணெய்
ஊட்டும் நெய்யும் தைலமதும்
உள்ளில் கொள்ளும் வர்மமுமே - - - 37

பொருள் :- வர்மப்பாதிப்பு ஏற்பட்ட அறிகுறிகளையும், வர்ம இடங்களையும் அறிந்து கைமுறை, மருத்துவ பாகங்கள், ஒத்தடம், தலைக்கெண்ணெய், உள்ளுக்கு ஊட்டும் நெய், தைலம் இவைகளை வரிசைப்படி செய்து கொடுத்து வர்ம பாதிப்புக்களை நீக்கவும்.

வர்மத்தால் கையின் மணிக்கட்டு நகர்ந்திட்டால், தடவுமுறையும், சிகிச்சையும்

மணிக் கெட்டிளகி நகன்றிட்டால்
மலர்த்தி கை நிமிர்த்திழுத்து
தணிக் கெட்டுழுத்து பொருத்தில் வைத்து
தலத்துள்ளிருத்தி யசையாமல்
துணி கொண்டிறுக்கி அடைவைத்து
சுற்றிப் பிலக்க தான் கெட்டி
நுணிக்கை யசையா தனுபதுவாம்
நுகர்த்த கடிகை வைத்த விளித்திடுமே - - - 39

பொருள் :- கையின் மணிக்கட்டு அடி, தட்டு, போன்ற காரணத்தால், புரண்டிடுகில், அக்கையை மலர்த்தி நீட்டி, விரல்களை இழுத்து விடவும். பிறகு கைமணிக்கட்டை இயல்பான நிலையில் கொண்டு வந்துப் பொருத்தி இயற்கை நிலையில் வைத்து, இசைவுகளில் அடைவைத்து அசையாமல் கெட்டியாகக் கட்டி விடவும். இன்னிலை இரண்டொரு நாட்கள் கொண்டொழுகல் வேண்டும். சுக மேற்படும்.

வர்மத்தால் கால் முட்டு சிரட்டை புரண்டு விட்டால் தடவுமுறையும், சிகிச்சையும்

முட்டில் சிரட்டை பிரண்டிட்டால்
முன்னே யிழுத்து அசைத்தசைத்து
மட்டிற் குழிதனி லமர்த்தி வைத்து
முன்கை சுழுத்தின் கீழ்கெட்டே
கட்டயிப்படி மூன்று விசை
கருத்தாய் அசைத்துத் தடவிவிட்டு

முட்டதனை படக்கி முன்போல்
முறையாய் எண்ணெயிட்டுத் தடவிடுமே - - - 40

பொருள் :- (காலின்) மூட்டுப்பாகச் சிரட்டையானது தன்னிலை விட்டுப் புரண்டு விட்டால், அக்காலை முதலில் நீட்டி பின்னர், காலை சிறிது சிறிதாக அசைக்கவும். மற்றொரு கையால், காலின் கீழ் பாகத்தைத் தாங்கிடவும். இம்முறையால், சிரட்டையை மட்டாகத் தன்னிலைக்குக் கொண்டு வரவும். பின்பு காலைமடக்கி (நெடுஞ்சோடு அணைத்து) துணியால் கெட்டியாகக் கட்டி விடவும். இப்முறைப்படி மூன்று தடவை கட்டி விடவும். கால் மூட்டினை முன்பு போல் மடக்கி வர்மத்திற்கு வேண்டிய வசவெண்ணெய் இட்டுத் தடவவும். சுகமாகும்.

காண்டம் V

வர்மபொறி நாடி திறவு கோல்

காப்பு

சொல் தனக்கு எட்டாத சூடரின் பாதம்
சோதிமணி ரூபமதாய் துலங்கும் சூட்சம்
தொல்லுலகில் கண்டு தினம் தொழுது போற்றி
துறந்துள்ளே சுத்தமதாய் களங்கம் நீங்க
அல்லு பகலனுதினமும் கருணை கூர்ந்து
அடியேனை ஆதரிப்பாய் ஆதி நாதா
வெல்லுமிடம் கொல்லுமிடம் இரண்டும் தேர்ந்து
வெளிவிடவே ஐங்கரனும் அருள் செய்வீரே - - - 1

பொருள் :- சொற்களால் விளக்க இயலாத சுடரொளியாக நிற்கும் இறைவனின் பாதத்தையும், ஜோதி மணியாக துலங்கி சூட்சமாயிருக்கும் இறைவனை உலகில் தினமும் போற்றி, என் உள்ளத்தை களங்கமில்லாது செய்து, அல்லும் பகலும், அனுதினமும் கருணை கூர்ந்து என்னை காத்திட வணங்குகின்றேன். ஆதி நாதா! வெல்லுமிடம், கொல்லுமிடம் ஆகிய இரண்டையும் வெளியில் சொல்லுவதற்கு ஐங்கரன் எனக்கருள் புரிவாராக!

அருள் செய்வீர் பொறிநாடி திறவு கோலை
ஆராய்ந்து கண்டறிந்து அவனிதன்னில்
அருள் செய்வீர் மருத்துவர்கள் அறிந்து தேறி
அனுதினமும் பிசகாமல் நடப்பதற்காய்
அருள் செய்வீர் வாத பித்த அய்யம தன்னை
ஆகமதில் அதின் குறைவும் கெதியின் பேதம்
அருள் செய்வீர் பதினாறில் அடக்கியே தான்
ஆதியந்தம் வாதம் முதல் சொல்லக் கேளே - - - 2

பொருள் :- பொறியான நாடி திறவுகோலை ஆராய்ந்து கண்டறிந்து உலகில் மருத்துவர்கள் அறிந்து கொள்ளுவதற்காகவும், பிழையற சிகிச்சை யளிப்பதற்கும் வாத பித்த சிலேற்பனத்தையும், அதன் பேதங்களால் ஏற்படும் குணங்களையும் வர்ம பொறி நாடி திறவுகோல் என்ற இந்நூலில் பதினாறு பாடல்களில் அடக்கமாகக் கூறியுள்ளேன்.

சொல்லக்கேள் வாதமொடு பித்தம் அய்யம்
சூட்சமுடன் பார்த்திடுகில் துலங்கச் சொல்வேன்
வெல்லக்கேள் வாதமொன்று பித்தம் பாதி
விதித்த கால் பங்காக அய்யம் ஒடில்
கொல்லக்கேள் ஒரு நாளும் வழியே யில்லை
கோபமுடன் பிணங்கியது கொளுகி நின்றால்
மெல்லக்கேள் அதின் குணங்கள் மாறி மாறி
மெய்யதனை வருத்தமுறச் செய்யும் தானே - - - 3

பொருள் :- வாத பித்த, சிலேற்பன நாடிகளை சூட்சமாகப் பார்த்திடக் கூறுகிறேன்.

வாதம் ஒரு பங்கும், பித்தம் அரை பங்கும், சிலேற்பனம் கால் பங்குமாக நடந்தால், உடலில் நோய் இல்லை.

இந்த நாடிநடைகள் வேறுபட்டு நின்றால் குணங்கள் வெவ்வேறாகி நோய்கள் உடலை வருந்தச் செய்யும்.

வர்மம் ஏற்படுதலின் அறிகுறிகள்

தானமுள்ள வாதமது கலக்க முற்று
தன்னடையில் நின்று கொண்டு பரதவித்து
ஏனமுள்ள மாத்திரையும் குறைந்து பின்னே
இடையூடே பித்தத்தின் கீழதாக
மானமுள்ள அய்யத்தை இழுத்துத் தாழ்த்தி
மாத்திரையை மீறாமல் செய்து கொண்டால்
ஊனமுண்டாம் பித்தத்தில் கூடே ஏறி
உள்வேவு அதிகரித்து சயமுண்டாமே - - - 4

பொருள் :- வாத நாடியானது கலக்கமுற்று, தன் நடையிலிருந்து தவறி பரதாபம் கொண்டு மாத்திரை (அளவு) குறைந்து, பித்த நாடியை விட குறைவாகவும், சிலேற்பன நாடியை அழுத்தித் தாழ்த்தி அளவு மீறாமல் நின்றால் வர்மம் ஏற்பட்டுள்ளது என அறிவீர். இதனால் பித்தத்தில் கூடேறி உள்வேவு அதிகமாகி சயம் ஏற்படும் எனவும் அறியவும்.

மார்பில் வர்மம் கொண்டால்

உண்டான வாதந்தான் அய்யந்தன்னை
ஊடுருவி சேர்ந்திடுகில் பொறியில் சேர்ந்தே

துண்டான ஊனந்நான் என்று நீயும்
சூட்சமுடன் கண்டறிந்து கூறுக்நதாக
வண்டாரும் மொழியாள்க்கும் மற்றோர்க்கும்
வகையுடனே மார்பில் கொண்ட ஊனமென்று
கொண்டோர் கைநாடி பார்த்து கூறலாகும்
கூர்மையுடன் மறுவசமாய் உரைத்திடுரே - - - 5

பொருள் :- வாதமானது சிலேற்பனத்தை ஊடுருவிச் சேர்ந்து நின்றால் பொறியில் வர்மம் ஏற்பட்டுள்ளது என்று கண்டு கொள்ளவும்.

இப்படிப்பட்ட நாடி நடந்தால் ஊனமானது மார்பில் ஏற்பட்டது என்பதை கை நாடியைப் பார்த்துக் கூறவும்.

தலையில் வர்மம் கொண்டால்

உரைத்திடிர் பித்தமது தாழ்ந்து சற்றே
உறுதியுடன் அய்யத்தை அணுகிச் சேர்ந்து
கரைத்திடிர் வாதத்தைப் பற்றிப் பின்னே
கருணையுடன் இழுத்துவதின் கனம் குறைந்தால்
சிரத்திடை நொந்து மிக வலியும் குத்தும்
சீர்கேடாய் முகவலியும் பீனிசமும் காணும்
திரத்துடன் தலைதனிலே கொண்ட ஏமம்
திடமுடனே தான் தோன்றுமென செய்யலாமே - - 6

பொருள் :- பித்த நாடியானது சற்றுத் தாழ்ந்து, சிலேற்பன நாடியுடன் சேர்ந்து, பின்னர் வாதத்தை சேர்ந்து நின்று, அதன் அளவு குறைந்து காணப்பட்டால் சிரத்தில் வேதனையும், வலியும், குத்தும், முக வலியும், பீனிசமும் தோன்றும். இது தலையில் ஏற்பட்ட வர்மம் என்று தெளிவாகக் கூறலாம்.

செய்யலாம் பித்தமது கோபத்தோடு
சிறியே வாதத்தை இழுத்துத் தாழ்த்தி
வெய்யமாய் அய்யத்தோடு ஒத்துக்கேறி
விரைவிலது மேல் நோக்கில் விலாவில் நின்று
அப்பொழுதே கபமதனை இளக்கித் தொண்டை
அடைத்து விழி மேல் சொருகி தேம் கொண்டு
குப்பெனவே மேல் சுவாசம் குமறிப்பாய்ந்து
கொல்லுமது திட்டமெனக் கருதிப்பாரே - - - 7

பொருள் :- பித்த நாடியானது கோபம் கொண்டு, வாத நாடியை

இழுத்துத் தாழ்த்தி, வெப்பமுடன் சிலேற்பன நாடியோடு சரியாய் சேர்ந்து மேல் நோக்கி நின்றால் விலாவில் நின்று அப்பொழுதே கபத்தை இளக்கி தொண்டையை அடைக்கும். விழிகளை மேல் சொருகச் செய்து சீதம் ஏற்பட்டு மேல் சுவாசம் குமுறிப் பாயும். இந்நிலை ஏற்பட்டால் மரணம் ஏற்படும் என்பதை அறிந்து கொள்வீராக.

கருதிய்யார் பித்தமது சாந்தமுற்று
கலந்துமே வாதமய்யம் இரண்டிலுந்தான்
பருதிப்போய் சேர்ந்திடுகில் பரனார் வந்து
பார்த்தாலும் மீளாது பொறிதானேற்று
உறுதியாய் சொல்லிவிடவும் வேண்டுமப்பா
உண்மையிது பிசகாது உறுதியாகும்
சுருதி முறை பிசகாது சூட்சா சூட்சம்
சூடேறி வாதத்தை சேராதாகில் - - - 8

பொருள் :- பித்த நாடியானது அமைதியுற்று வாதம், சிலேற்பன நாடியோடு சேர்ந்து விட்டால் இறைவனே வந்து மருத்துவம் செய்தாலும் உயிரை மீட்க முடியாது. இது உறுதி என்று சொல்லிவிடவும்.

சேராமல் அய்யத்தோடு அணைந்து நின்றால்
சிரசுமுதல் நெஞ்சுவரை வலியும் காணும்
பாராமல் இளைப்புடனே ஈளை காசம்
பரதவிப்பு கபத்தினுட முட்டலாகும்
தீராமல் சயமுடனே சுரமுண்டாம்
தீங்கு செய்யும் வருடமது மூன்றுக்குள்ளே
வாராமல் அவுடத்தை வருந்திச் செய்து
வரிசையுடன் தீர்ப்பதற்கு வரிசை செய்யே - - - 9

பொருள் :- பித்த நாடியானது சூடாகி வாதத்தோடு சேராமல் சிலேற்பனத்துடன் அணைந்து நின்றால் சிரசுமுதல் நெஞ்சுவரையிலும் வேதனை தோன்றும். இளைப்பு, ஈளை, காசம், பரதாபம், கபத்தின்முட்டல், சயம், சுரம் போன்றவை தோன்றும். மூன்று வருடகாலத்திற்குள் கேடு விளையும். இதனை நன்குணர்ந்து நோயை தீர்ப்பதற்குத் தகுந்த மருந்துகளை செய்து கொடுக்கவும்.

செய்யவே வாத பித்தம் இரண்டும் சேர்ந்து
சீர்கேடாய் அய்யத்தை நெருக்கி யேறி
பய்யவே இழுத்திழுத்து பதையச் செய்யில்
பாரதடல் ஆனாலும் பதறி வீழும்

அய்யனே கபமுண்டாம் வியர்வை கொட்டும்
அடுத்து இக்கள் விக்கலுடன் அசதியாகும்
துய்யனே இதுவறிந்து சூட்சமாக
தொடர்ந்து வரும் பிணியதனை செய்யக்கேளே - 10

பொருள் :- வாதமும், பித்தமும் சேர்ந்து சிலேற்பன நாடியை நெருக்கி ஏறி இழுத்து இழுத்து அழுத்தினால், திடமான உடலாக இருந்தாலும் உடல் பதறி விழும். கபம் தோன்றுவதுடன் வியர்வையும் கொட்டும். இக்கலும், விக்கலும், அசதியும் உண்டாகும்.

செப்பக்கேள் அய்யாமது அயர்ந்து சாய்ந்து
சீறியெழும் பித்தமதை சேரலுற்றால்
அப்பக்கேள் கழிச்சலொடு அளச்சல் ரெத்தம்
அதிசாரம் மூலவாய்வு அதனால் குற்றம்
ஒப்பக்கேள் கிராணியொடு சோகைபாண்டு
உள்மூலம் நீராம்பல் உதிர ரோகம்
எப்பக்கேள் மரணமது அடுக்குமென்றும்
இதனோடு சேர்த்து உரை செய்திடாதே - - - 11

பொருள் :- சிலேற்பனமானது அயர்ந்து சாய்ந்து பித்தத்தைச் சேர்ந்தால் கழிச்சல் அளச்சல், இரத்தம், அதிசாரம், மூலவாய்வு, கிராணி, சோகை, பாண்டு, உள்மூலம், நீராம்பல், உதிரரோகம் இவைகள் தோன்றி மரணத்தை உண்டாக்கும்.

மரணக்குறிகள்

உரை செய்வேன் சிலேத்துமத்தில் வாதம் சேர்ந்தால்
ஊடுருவி உயிர்க்காலை இழுக்கச் செய்யும்
உரை செய்வேன் பொறியதிலே நோவுற்றாலும்
உயிர்க்காலை இழுத்து கபம் வாதம் சேரும்
உரை செய்வேன் சன்னி வலி சீதமானால்
உற்றகபம் வாதத்தை உறப்பாய் சேரும்
உரை செய்வேன் பொறியட்டு மயங்கி சீவன்
உடன்போக அதற்குமிது உதிக்கும் காணே - - 12

பொருள் :- சிலேத்துமத்தில் வாதம் சேர்ந்தால் உயிர்க்காலை (சுவாசம்) இழுக்கும். பொறிகளில் வேதனைகண்டாலும் உயிர்க்காலை இழுத்து, கபம், வாதம் ஏற்படும். சன்னி, வலி, சீதமானால் சிலேற்பனமானது வாதத்தைப் பற்றி நிற்கும். இந்நிலையில் மயக்கம் ஏற்பட்டு உயிரும் பிரியும்.

காணவே பொறிபட்ட பேர்களுக்கெல்லாம்
கருதிடவே முன் பார்க்க கையே வேண்டும்

தோணவே மருத்துவர்கள் சூட்சமாக
தொடுகுறிபோல் நயனத்தை கருதவேண்டும்
பேணவே வேறுமென்றால் பிசகிடாதே
பிழையாமல் மலசெலமும் பேணவேண்டும்
நாணவே செய்யாமல் நயனம் தன்னை
நடுவனை விட்டகன்று நின்றால் நாடிடாதே - - 13

பொருள் :- பொறிகளில் வர்ம முற்றவரின் கைநாடியைப் பார்த்து நிலையை அறிந்து கொள்ளவும். மேலும் தொடு குறிபோல் கண்களையும், மலம், சிறுநீர் இவற்றையும் சோதனை செய்யவேண்டும். கண்களிலுள்ள கருவிழிகள் நடுவிலிருந்து விட்டகன்று நின்றால் மருத்துவம் செய்யாமல் அவ்விடத்தை விட்டு அகலவும்.

நாடிடவும் பொறி நாடி திறவுகோலில்
நயனத்தை முன்பார்த்து பின்கை பார்த்து
தேடிடவும் உயிர் நிலையில் தேட்டம் வைத்து
தெளிந்திடவே கை முறையை சரியாய்ச் செய்வாய்
ஆடிடவும் மனரியதிலே அனக்கமற்றால்
அச்சடத்தை விட்டு உடன் மாறு மாறு
ஓடிடவும் வழி தேடு உற்றாரோடு
உறுதி சொல்லி அதனில் நின்று வாங்கு வாங்கே 14

பொருள் :- முதலில் கண்களை சோதனை செய்த பின்பு, பொறி நாடி திறவு கோலான இப்பகுதியில் சொல்லியுள்ள முறைப்படி கை நாடியைப் பார்த்து குணங்களை ஆய்ந்தறிந்து நிலைமைத் தெளிவாக இருந்தால் மருத்துவம் செய்ய முயலவேண்டும். கண்கருவிழி அசைவில்லாமலிருந்தாலும், நாடி நிலையானது அசைவில்லாமலிருந்தாலும் மருத்தும் செய்யாமல், அவ்விடத்தை விட்டு வெளியேறி விடவும்.

வாங்கு முன்னே மணிசரிந்து வலத்தே நின்றால்
வந்தடரும் பொறியதுதான் வெகுநாள் செல்லும்
தங்கியது இடம் சரிந்து தளர்ந்து நின்றால்
தளமான வருடமொன்றில் தானே மாறும்
ஓங்கியது முன் கவிழ்ந்தால் உடனே சாகும்
உற்றதிது சொல்லாது உதடுமூடும்
ஏங்கியது விட்டிடுமே சுவாசம் தன்னை
இழுத்திழுத்துக் கலையதுதான் கழியு முன்னே - 15

பொருள் :- நாடி பார்க்கும் முன்னர் கண்களை சோதனை செய்யவும்.

கண்மணி சரிவாக வலது புறத்தில் நின்றால் நோய் தீர வெகு நாட்களாகும் எனவும்,

இடதுபக்கம் சரிவுற்றுத் தளர்ந்து நின்றால் ஒரு வருடத்தில் சரிப்படும் எனவும்,

முன்பக்கமாக கவிழ்ந்தால் உடன் மரணம் ஏற்படும் எனவும் தெரிந்து கொள்ளவும்.

நோயுற்றவர் தன் எண்ணங்களை சொல்லாமல் உதடுகளை மூடுவர். உயிர் பிரியும் முன்பாக சுவாசத்தை இழுத்து இழுத்து விடுவர்.

கழியுமுன்னே இருகலையும் சுழிமுனை நாக்கி
கருத்துடனே வாசியதை இழுத்து மூட்டி
தெளியுமுன்னே அமுர்தமதை உண்ணா வண்ணம்
தேனுருவி பாயச்செய்யும் சிவனார் பாதம்
ஒளியும் முன்னே கண்டு அருள் பெற்று உண்டு
உயிர்க்காலை அனுதினமும் உறுதியாக்கி
வெளியுமுன்னே திறந்து வைத்தேன் மருத்துவர்க்காய்
விபரமதாய் பொறி நாடி திறவு கோல் முற்றே - 16

இருகலை - வலக்கலையும், இடக்கலையும், சுழிமுனையையும் ஒருங்கே சேர்த்து வாசி என்ற மூச்சை இழுத்து மூட்டி தெளியும் முன்பே அமுர்தத்தை உண்ணாதவாறு ஒரே நினைவாய் தேனருவிப்பாயச் செய்யும் சிவனார் பாதத்தைக் கண்டு, அருள் பெற்று, உயிர்க்காலை தினமும் உறுதியாக்கி, வெளியில் மருத்துவர்களுக்காகச் சொன்ன பொறி நாடி திறவுகோல் முற்று பெறுகிறது.

கர்ம காண்டம்

காப்பு

கருதுவேன் முன்னுரைத்த கர்மகாண்டம்
கனகவிந்தை முன்னூறாய் பாடிவைத்தேன்
விருது பெற்ற சித்தரென்னை சபையிட்டு
வெளிவிடாதே என்றவர்கள் பகையானார்கள்
உறுதியுள்ள புலத்தியனே உனக்காயிப்போ
உரைக்கிறேன் கர்மமது நிவிர்த்திக்காக
பருதிகண்ட பனிபோலே முப்பதாக
பாடுகிறேன் தாணுவின் பாதம் போற்றி - - - 1

பொருள் :- ஏற்கனவே, மூன்னூறு பாடல்களைக் கொண்ட கர்ம காண்டம் என்ற நூலை சித்தர்கள் பாடியுள்ளனர். பல பாராட்டுகளைப் பெற்ற சித்தர்கள் கருப்பொருளாய் இயற்றிய இந்த நூலைப் பார்த்து வெளியிடக்கூடாது என்று கருதினர் போலும்!

எனினும், உலகத்தோரின் கர்ம நிவிர்த்திக்காக, முப்பது பாடல்களான கர்மக் காண்ட எனும் இந்த நூலை தாணுமாலையன் கமலபாதத்தை வணங்கி பாடுகின்றேன்.

பண்ணுவாய் உனக்கிசைந்த சீடன் வந்து
பாதமதை வணங்கியே பணிந்து கேட்டால்
பின்னுமவன் மனதறிந்து இந்நூலீவாய்
பேசாதே அவையடக்கம் பண்ணச் சொல்லு
இந்நூலுக்கொப்ப முண்டோ எவர் நூலுந்தான்
இதையறிந்து மனதுள் வைத்து ஏற்றிப்பாரு
அந்நூலை மடக்கி வைக்கும் இந்நூலப்பா
அரிதரிது வெளிவிடாது அடக்கினாலே - - - 2

பொருள் :- உன்னை அடிபணிந்து இருப்போருக்கும், உன் மனதை மகிழ்ச்சிப் படுத்துவோருக்கும், உன்னை வணங்கி நிற்போருக்கும் இந்த நூலின் நுட்பத்தை நீ கொடுப்பாயாக.

இந்த நூலின் இரகசியத்தை அறியும் உன் சீடரிடம், அடக்கத்தைக் கடைபிடிக்கச் சொல்லவும். இந்த நூலுக்கு வேறு எந்த நூலும் ஈடாகாது. இதை மனதில் வை.

இந்நூல் அரிதானது. எனவே, இதை வெளியிடாது அடக்கமாய் வைத்துக் கொள்ளவும்.

நாலான சாதிகளுக்கும் பிணிகள் கொண்டால்
நவிலுவேன் தீரும் நோய் தீரா நோய்கள்
பாலான சாத்திரத்தின் படி ஆராய்ந்து
பார்மகனே முன்கர்ம வினையின் போக்கும்
வாரான நோய் வந்து விட்டாலும்தான் தீர்க்க
மார்க்கமாய் சொல்லுகிறேன் வரிசையாக
ஆராலும் உனை பணிந்து தீர்க்கச் சொன்னால்
அவர் நிலையும் குறிப்புமறிந் தாருமென்னே - - - 3

பொருள் :- உலகு மக்களுக்கு நோய்வந்தால், அந்த நோய் நலப்படும் அல்லது நலப்படாது என்பதின் நுட்பத்தை அறிய முற்படுவாய்.

சாத்திரங்களில் சொல்லியுள்ள படி, நோய்கள் முன்சென்ம செய் கர்மத்தால் வந்ததா என்று கணிக்கவும்.

இன்னும், வந்த நோயை தீர்க்க உன்னை பணிந்து சிகிச்சைச் செய்ய நாடினால், வந்தவர் நிலையையும், குறிப்பையும் தெரிந்து ஆவனச் செய்வீர்.

திசை பலன்

என்னவே மேடத்தில் இருந்திட்டாக்கால்
இது தீரும் பின்னாலே என்று சொல்லு
சொன்னதோர் இடத்திலிருந்து கேட்டாலே
சுகிர்தியாய் தீருமென்று சுகிர்தம் செய்வாய்
அன்னமே மிதுனத்திலிருந்து கேட்டால்
அது தீருமென்று சொல்லி அவுடதம் செய்
கன்னவே கடகத்திலிருந்து கேட்டால்
கடிதாக தீருமென்று கவர்ந்து கொள்ளே - - - 4

பொருள் :- சிகிச்சைக்காக வந்தவர், மேட இராசியில் இருந்து கேட்டால், நோய் சற்று தாமதமாய் தீரும் என்று பகரவும்.

இடபத்திலிருந்து கேட்டால் நோய் நிச்சயமாய் தீரும் என்று கூறவும்.

மிதுனத்திலிருந்து கேட்டால், நோய் தீரும் என்று கூறி சிகிச்சையளிக்கவும்.

கடகத்திலிருந்து கேட்டால், நோய் கஷ்டப்பட்டு நிவிர்த்தியாகும் என்று தெரிவிக்கவும்.

கொள்ளவே சிங்கத்திலிருந்து கேட்டால்
கொடிதென்று விலகிவிடு அது தீராது
மெள்ளவே கன்னியிலே நின்று கேட்டால்
வெகுநாளே சென்று தீருமென்று சொல்லு
விள்ளவே துலாமதிலே இருந்து கேட்டால்
வியனாக தீருமென்று விளம்புவாய் நீ
வள்ளலே விருச்சிகத்தில் நின்று கேட்டால்
வந்தபிணி பின் தீரும் என்று சொல்லே - - - 5

பொருள் :- சிங்க இராசியில் இருந்துக் கேட்டால், நோய் கொடியதென்று நாசூக்காக விளக்கிவிட்டு விலகிடவும். இது தீராத நோயாகும்.

கன்னி இராசியில் இருந்துக் கேட்டால், நோய் வெகு நாட்கள் கழிந்து தீரும் என்று இதமாகக் கூறவும்.

துலாம் இராசியில் இருந்துக் கேட்டால், நோய் சற்று தாமதமாக தீரும் என அன்பாக தெரிவிக்கவும்.

விருச்சிக இராசியில் இருந்துக் கேட்டால், வந்தப்பிணி நீடித்து இருந்து பிறகு தீரும் என்று நம்பிக்கையுடன் விளம்பவும்.

சொல்லுவாய் தனுசதிலே நின்று கேட்டால்
சுகமாக தீருமென்று தூரியஞ் செய்வாய்
கல்லுவாய் மகரத்திலிருந்து கேட்டால்
கடிதான வியாதியது கனநாள் செல்லும்
மல்லுவாய் கும்பத்தில் நின்று கேட்டால்
வளருமது தீராது வலு நோயாகும்
வெல்லுமே மீனத்திலிருந்து கேட்டால்
வியனாக தீருமென்று விரைந்து பாரே - - - 6

பொருள் :- தனு இராசியிலிருந்து வினவ, நோய் நலப்படும் என்று உறுதியாக கூறவும்.

மகர இராசியிலிருந்து கேட்டால் வியாதி கடினமாகும் என்றும், பல நாட்கள் கழிந்து பேதப்படும் என்றும் நளினமாக பகரவும்.

கும்பத்திலிருந்து வினவ, நோய் வளரும்; தீராது என அறிதியிட்டு அமைதியாகக் கூறவும்.

மீனத்திலிருந்து கேட்க, நாளடைவில் தீருமென்று நயமாகக்கூறி விரைவில் மருத்துவம் செய்யவும்.

ஆண், பெண் இருக்கைப் பலன்

பாரப்பா இப்படியே பார்த்துச் செய்தால்
பலிக்குமடா நோய் தீரும் பலிதமாகும்
தீரப்பா மயங்காதே இன்னமொன்று
செப்புகிறேன் இதுவுமொரு குறிதானாகும்
சீரப்பா ஆண் வலமும் பெண்ணிடமுமானால்
தீர்ந்து விடும் இருவருக்கும் மாறி நின்றால்
நேரப்பா வியாதியது தீராதென்று
நிச்சயமாய் நீயறிந்து நினைவு காணே - - - 7

பொருள் :- இப்படியே குறிப்பறிந்துச் செய்தால், உன் கணிப்பு உண்மையாய் இருக்கும். நோயும் தீரும்.

இதை அறிந்து மயக்கம் கொள்ளாதே. அகங்காரம் கொள்ளாதே.

இன்னும் ஒரு கணிப்பு முறையை கூறுகிறேன். உம்மைக் காணக் வருவோரில், ஆண் வலப்புறமும், பெண் இடப்புறமுமாக இடங்கொண்டால் நோய் தீரும்.

இவர்கள் இடம் மாறி இடங்கொண்டால், நோய் தீராது என்று மனதில் தீர்மானிக்கவும்.

கர்ம நிவர்த்தி

காணுவாய் தீருமென்று அறிந்தாயானால்
கைத்திறமும் அவர்திறமும் அறிந்து கொண்டு
பூணுவாய் அட்டகர்ம சக்கரத்தை நீயும்
போட்டிடாய் அடுத்தடுத்து அதனுக்குள்ளே
நாணுவாய் ஏக பூரண சூட்சத்தை தான்
நாட்டியே நாற்பது நாள் தியானம் பண்ணு
வேணுமே இதற்கவர்கள் திறமில்லாட்டால்
வியனாக சுருக்கியே எந்திரவோமம்
பேணுவாய் இதற்கு வகை சொல்லக் கேளு
பேசாதே இதையறிந்து பேணிப்பாரே - - - 8

பொருள் :- இப்படியாக நோய் தீருமென்று நிச்சயப்படுத்தியப் பிறகு நோயாளியின் நாடி நடையையும், நோயின் தன்மையையும் நிச்சயப்படுத்தவும்.

அடுத்து அஷ்டகர்ம சக்கிரத்தை எழுதி, அதில் ஏக பூரண சூட்சத்தை நாட்டவும்.

இந்தச் சக்கிரத்தை பூஜையில் வைத்து நாற்பது நாட்கள் தியானம் பண்ணவும்.

இங்ஙனம் செய்ய வசதி இல்லாவிடில், சுருக்கமான முறையில் எந்திர வோமம் செய்யவும். இதற்கான விபரங்களை கூறக் கேட்பாயாக.

பார்க்கவே வகை சொல்வேன் நன்றாய் கேளு
பஞ்சபட்சி ஐந்துண்டே அவர்கள் பட்சி
தீர்க்கமாய் அறிந்து கொண்டு அட்சரத்தைக்கீறி
செய்ய இன்னும் வகை சொல்வேன் திறமாய் கேளு
ஏர்க்கவே அவர் நீளம் அகலம் கண்டு
இதற்குமேல் வூணரசு வரைந்து கொண்டு
சேர்க்கவே வஸ்திரந்தான் ஒன்று வாங்கி
செய்ய வின்னும் வகை சொல்வேன் வளமாய்கேளே9

பொருள் :- பஞ்சபட்சியில் நோயாளியின் பட்சி எது என்பதை கேட்டறியவும். அந்த அச்சரத்தை (எழுத்தை) எழுதிடவும். நோயாளியின் நீளம், அகலம் கண்டு அதன் மீது வூண் - அரசு வரையவும்.

இன்னும், துணி ஒன்று வாங்கி வந்து செய்யும் முறையை கூறுகிறேன்.

கேளப்பா வகை தீர்ந்தான் முந்தினாலும்
கெடியாக அவரவர் மேலென்ற மட்டும்
நாளப்பா சொர்ண பற்பம் முடியச் சொல்லு
நலமாக அதன் பிறகு நால் மடிப்பாய்
ஆளப்பா மடித்துவைத்து அதன்மேலே நீயும்
அட்சரத்தை கீறியே விபூதி இட்டு
தேளப்பா கொட்டுதல்போல் சிதம்பரத்தை பூட்டி
திறமாக இது இருக்க இன்னும் கேளே - - - 10

பொருள் :- வாங்கி வந்தத் துணியின் மூலையில் (முந்தியில்) நோயாளியின் வசதிக் கேற்ப சொர்ணமும், திருநீறும் வைத்து முடிந்துக்கட்டச் சொல்லவும்.

அடுத்து, மேலே கூறிய துணியை நான்கு மடிப்பாக மடித்து அதன் மேல் எழுத்தை எழுதி விபூதி இடவும். இதை அடக்கமாகச் செய்யும் போது வாய் மூடி, சிதம்பரத்தை (ஓம், ந-ம-சி- வா-ய என) தியானிக்கவும்.

இன்னங்கேள் கன்னியிலே கணபதியை வைத்து
இதமாக சோடசந்தான் படைப்பாய் ஏற்றி
முன்னந்தான் வஸ்திர சிதம்பரத்தை வைக்க
முன்பாக குப்ப குடம் நடுவே வைக்க
பின்னமில்லா பச்சரிசி கீழே போட்டு
பேராக இலை பரப்பி யதன் மேல் நெல்லு
சென்னெல்லாய் பரப்பிய பின் கும்பம் வைத்து
செபிக்கவே சொல்லுகிறேன் திறமிதாமே - - - 11

பொருள் :- கணபதியை மனதில் தியானித்து, கன்னித் திசையில் படுக்கைப் போடவும். பூசை சாமான்களை படைக்கவும்.

கணபதியின் முன்பு வஸ்திர சிதம்பரத்தை படைக்கவும்.

பச்சரிசியை கீழே பரப்பி, அதன் மீது வாழையிலையை போட்டு, அதில் நெல் பரப்பி படியச் செய்து, அதன்மீது கும்பத்தை வைக்கவும்.

அடுத்து செபிக்கும் முறையை சொல்லக் கேட்பாயாக.

ஆமப்பா கும்பத்தில் தெட்சணைகளிட்டு
அதன்பிறகு வாழைத்தண்டாக்கை கொண்டு
நாமப்பா கிழக்காறு தெற்காறு போட்டு
நலமாக இருபத்தஞ்சறையுமாகும்
ஓமப்பா அறைக்கறையே பச்சரிசியிட்டு
உச்சாடன மந்திரத்தை அதனுள்ளே தாக்கு
தாமப்பா கோத்திரியை நடுவே குத்தி
சகஸ்திரமாய் முன்னிருத்தி தகமை கேளே - - - 12

பொருள் :- கும்பத்தில் தட்சணை இடவும். அதன் முன்பு வாழைத்தண்டின் ஆக்கைக் கொண்டு கிழக்கு ஆறும், தெற்கு ஆறும் கோடுகள் போடவும். இதனால் இருபத்தைந்து அறைகள் அமையும். ஒவ்வொரு அறையிலும், கொஞ்சம் பச்சரிசி இடவும். உச்சாடன மந்திரத்தை அதனுள் தாக்கவும். கோத்திரியை (உலர்ந்த தென்னம்பாளையை சிறிதாகக் கீறி துணியால் சேர்த்துக்கட்டியதை) எண்ணெயில் தோய்த்து கட்டத்தின் நடுவில் குத்தி வைக்கவும்.

தகமையென்ன முந்த முந்த உச்சாடணமே செய்து
தம்பித்து வேறிடத்தில் ஓமம் செய்து
உகமையுடன் களிப்பித்து தடையை போக்கி
உற்றதொரு சக்கிரத்துக் கோமம் செய்து

சுகமாக மந்தரித்து தூப தீபம் காட்டி
துலங்கவே பிணிமாற பலியை செய்து
விகடமுள்ள ரெட்சையதை கட்டிப் போடு
வினைகளெல்லாம் பறந்து விடும் விருதுகேளே - 13

பொருள் :- உச்சாடன மந்திரத்தை செபிக்கவும். வேறிடத்தில் ஹோமம் செய்யவும். களிப்புமுறை செய்து நோயின் கேட்டை நீக்கவும். முன்பு எழுதிய சக்கிரத்துக்கு மந்திரம் செபித்து தூபம், தீபம் காட்டவும்.

கும்பளங்காயை வெட்டி பலி கொடுக்கவும்.

நோயாளிக்கு வெள்ளி அல்லது தங்கத் தகட்டில் சக்கரம் வரைந்து மந்திரம் எழுதி, செபித்து, பூஜை செய்து தாயத்தில் அடைத்துக் கட்டவும்.

இதனால் கர்ம நோய்கள் நீங்கும் என்று அறியவும்.

விருதான பஞ்சபட்சி பஞ்ச பூதம்
விளலான மண் நீர் தீ காற்றாகாசம்
பெரிதான வகையாலே முளைத்த சேவல்
புல் பூண்டு விருட்சமுதல் பஞ்ச பூதம்
உருவான பட்சியிலே உதித்த சேவல்
உள்ள கர்ம நிவர்த்திக்கு இதுவே ஆதி
தருவான இம்முறைகள் செய்யாயானால்
சாகும் வரை தீராது சளமேயாகும் - - - 14

பொருள் :- பஞ்சபூதம், பஞ்சபட்சி இவைகளிலிருந்து நல்வினை காரணமாக உருவான மனிதப்பிறவிக்கு உண்டான எல்லா கருமங்களுக்கும் சாந்தி கிடைக்கும்.

இந்த சாந்தி முறை செய்யா விடில், கருமத்தால் வந்த நோய் வாழ்நாட்கள் பூராவும் நோயாளியை விட்டு விலகாது. துயரை தந்த வண்ணமாய் இருக்கும்.

ஆகுமென்று சொன்னதற்கு அடையாளம் கேள்
அப்பு மிஞ்சி மண்ணதுதான தனேகம் சேர்ப்பார்
ஏகமென்ற மண்ணதுதான் மிஞ்சிற்றானால்
எவருமுள்ள நீரை விட்டிறுக்கி சேர்ப்பார்
போகுமென்ற தீயதுவும் மிஞ்சிற்றானால்
புனலான நீரைவிட்டு ஆற்றிவிப்பார்
வாகுபெற்ற காற்றதுவும் மிஞ்சிற்றானால்
வளமான படம் கட்டி காப்பார் பாரே - - - 15

பொருள் :- மேலே கூறியதுக்கு பல தடயங்களை கேட்பாய். உடலில் தண்ணீர் அதிகமிருந்தால், மண்ணை அதிகம் சேர்ப்பாய்.

மண் அதிமானால், நீர் சேர்த்துக் கொள்ளவும்.

தீ அதிக மானால், நீரை ஊற்றி ஆற்றிடவும்.

காற்றானது அதிகரித்தால், படம் கட்டி காக்கவும்.

பாரப்பா இவ்வகைபோல் பஞ்சகர்த்தா
பரிவான பஞ்சபட்சி ஆனதாலே
நேரப்பா இவ்வகையை உரைத்தேனப்பா
நீ நினைத்து புத்தியினால் நிறுத்திப்பாரு
ஆரப்பா என்னைப் போல் சொல்லப் போறார்
ஆகாகா மனோன்மணி தாய் அருளி செய்ய
தீரப்பா மயங்காதே புலத்தியனே
திறமாக உனக்குரைத்தேன் திறமிதாமே - - - 16

பொருள் :- இவைகளைப் போலவே பஞ்ச கர்த்தா, பஞ்சபட்சிகள் ஆகும். இதை, நீ புத்தியால் அறிந்து, மனதில் வைத்து உணர்வாய். மனோன்மணி தாய் அருளியதை உன் நன்மைக்காய் வெளிப்படையாக அறிந்து, இங்கு கூறுயுள்ளேன்.

மருந்து வகைகள்

மேகத்திற்கு சூரணம்

ஆமப்பா இதன்பிறகு மருந்து சொல்வேன்
அப்பனே கூவளத்தின் சாறு வாங்கி
நாமப்பா படியொன்று மிளகுபடி ஒன்று
நன்றாக ரெவி முகத்தில் ஊறவைத்து
தாமப்பா உலர்த்திபொடித்து பாண்டத்திட்டு
தறுகாமல் தினமொன்று வெருகடிதான் கொள்ள
போமப்பா சர்க்கரையில் கொண்டாயானால்
கொடியபினி தீரும் வகை கூறுவனே - - - 17

பொருள் :- இனிமேல் மருந்துவகைகளை கூறக் கேளாய். வில்வ இலை இடித்துப்பிழிந்து சாறு ஒரு படி (1.3 லிட்டர்) எடுக்கவும். அடுத்து மிளகு ஒரு படி (1.3 லிட்டர்) கொண்டு வந்து, இவை இரண்டையும் நன்றாகச் சேர்த்து ஊறவைத்து வெயிலில் உலர வைக்கவும். சில மனி நேரம் கழிந்து, எடுத்து பொடித்து பரணியில் பத்திரப்படுத்தவும். தினம் ஒரு வெருகடி (மூன்று

விரலால் அள்ளி எடுக்கும் அளவு) எடுத்து சர்க்கரையில் சேர்த்துத் தின்னவும். இதனால் தீரும் நோய்களைப் பார்ப்போம்.

கூறுவேன் சர்க்கரையில் கொண்டாயானால்
கொடிதான மேகமெல்லாம் கூட்டோடேகும்
நாறுகின்ற செலம் இரத்தம் கடுப்பு புண்கள்
நலமான தேகத்தில் தடிப்பு புற்று
ஏறுகின்ற விஷவாயு மலசலகட்டு
எழில்வாத சூலையுடன் கரைப்பன் குட்டம்
மாறுமிது அனுபானத்துடனே கொண்டால்
மலைபோல வந்த நோய் மாய்ந்துபோமே - - - 18

பொருள் :- சர்க்கரை (வெல்லத்தில்) சாப்பிட கொடிய மேக நோய் குணப்படும். இரத்தக் கடுப்பு, புண்கள், சருமத்தில் எழும் தடிப்பு, மற்றும் விஷவாயு, மலசலக்கட்டு, வாதம், சூலை, கரைப்பன், குட்டம் போன்றவைகளுக்கு, தக்க அனுபானங்களில் இம்மருந்தைச் சேர்த்துத் தர நோய்கள் குணமாகும்.

இலேகியம்

போமப்பா இன்னமொரு லேகியம் சொல்வேன்
புகழான ஆவரை வேர் தைலம் வாங்கி
லேமப்பா கடை சரக்கு விபரம் சொல்வேன்
மேதினியில் கடுக்காய்தாள் பலமோரண்டு
நாமப்பா வெள்ளுள்ளி பலமோ ரெண்டு
நன்றான கடுகுதுதான் பலமோ ரெண்டு
ஆமப்பா இவ்வளவும் சூரணமே செய்து
அழகான தைலத்தில் குழப்பிச் சேரே - - - 19

பொருள் :- இனியும் ஒரு இலேகியத்தின் செய் பாகத்தைக் கூறக்கேளாய்.

ஆவரை வேர் தைலம் வடித்துக் கொள்ளவும்.

மற்றும், கடுக்காய் பலம் இரண்டு (70 கிராம்), பூண்டு 2 பலம் (70 கிராம்), கடுகு பலம் இரண்டு (70 கிராம்) இவை யாவற்றையும் பொடித்து சீலை வடிவு எடுத்து, மேலே கூறிய தைலத்தில் இட்டு குழப்பி சேர்க்கவும்.

சேர்ந்தொரு லேகியத்தை கொண்டாயானால்
செகந்திலுள்ள மேகவகை தீரும் பாண்டு
மாத்திரமோ வாதமொடு சூலை தீரும்
மகத்தான கிருமி முதல் மந்தம் வாய்வு
நாற்றிசையிலுள்ள விஷம் சிரங்கு புண்கள்

நவமூலம் உள்ளில் ரெத்தம் நாடாதோடும்
பார்த்துதான் அனுபானம் அறிந்து கொண்டால்
பலகாலம் விறுத்திருக்கும் பருகுவாரே - - - 20

பொருள் :- இந்த இலேகியத்தை சிறிய கரண்டி அளவு எடுத்து நோய்க்குரிய அனுபானத்தில் சேர்த்து சாப்பிட கொடுக்கவும்.

இதனால், மேக வகைகள், பாண்டு, வாதம், சூலை, கிருமி, மந்தம், வாய்வு, விடம், சிரங்கு, புண்கள், மூல நோய் முதலியன ஒழியும்.

நீண்ட நாள் இருந்துவரும் நோய்களுக்கு, நீண்டநாள் சாப்பிட்டுவர, நோய் நலப்படும்.

மதன காமேஸ்வர இலேகியம்

பருகுவது மதன காமேஸ்வரந்தான்
பண்பான காரமுடன் சாரம் கூட்டி
நறுகுவது சாதிலிங்கம் கட்டியாக
நாடிவரும் இலவங்கம் மதுரம் பத்திரி
புருகுவது தேற்றான் வித்தாவரையின் வித்து
புகழான முருங்கை வித்து அவரி வித்து
முறுகுவது முருக்கம் வித்து கஞ்சா வித்து
முத்தக்காசுடன் கிழங்கும் முழுதுமினி கேளே - 21

பொருள் :- அடுத்து மதனகாமேஸ்வர இலேகியம் செய்பாகத்தை அறைகிறேன்.

காரம், சாரம், சாதிலிங்கம், இலவங்கம், அதிமதுரம், சாதி பத்திரி, தேற்றான்வித்து, ஆவரை வித்து, முருங்கை வித்து, அவுரி வித்து, முருக்கம் வித்து, கஞ்சா வித்து, கோரைக் கிழங்கும்.

கேளப்பா மத்தன் வித்து காஞ்சிரையின் வித்து
கெட்டியாய் வகைக்கு வகை சரியாய் கொண்டு
மீளப்பா காடியிலே நனைத்துலர்த்தி தூளாய்
மேலான ஆவின் நெய்யில் மெழுகாய் செய்து
நாளப்பா சுண்டைக்காய் வீதம் கொள்ளா
நமனேது பிணியேது நாடா தோடும்
கேளப்பா கொட்டுதல் போல் சகல நோயும்
தீர்ந்து விடும் மண்டலத்தில் திறமிதாமே - - 22

பொருள் :- இன்னும், ஊமத்தை வித்து, எட்டி வித்து இவையாவும் வகைக்கு சமநிறை எடுத்து காடியில் நனைத்து, உலர்த்தி, தூளாக இடித்துப் பொடித்து எடுக்கவும். இதில் பசுவின் நெய் வார்த்து கிண்டி பத்திரப்படுத்தவும்.

இந்த இலேகியத்தில், சுண்டைக்காய் அளவு எடுத்து உள்ளுக்கு தரவும் இப்படி ஒரு மண்டலம் (41 நாட்கள்) சாப்பிட்டு வர சகல நோயும் விட்டோடும் என்பது உறுதி.

திடமாக கொண்டிடவே அந்நாள் மட்டும்
ஸ்திரி போகம் ஆகாது நோயாளிக்கு
அடவாக நல்லெண்ணெய் கூட்டலாகா
அது தவிர்ப்பாய் பசுவின்பால் நெய் தேய்
மடமாதர் ஆபிரம் பேர் உனக்கெய்யாது
மகர விஷ்ணு நீயல்லோ மதனும் நீயே
நடமாடும் மாதர்கள் சேராதே நீ
நன்றாக தேகமது நளினமாமே - - - 23

பொருள் :- இந்த மருந்தைச் சாப்பிடும் போது, சில பத்திய பாகங்களை கடை பிடிக்க வேண்டும். உடலுறவு கொள்ளல் கூடாது. நல்லெண்ணெய் தலையில் தேய்க்கவோ, உணவு பதார்த்தங்களில் சேர்க்கவோ கூடாது.

பசுவின் பால், பசுவின் நெய் உபயோகிக்கவும். கட்டுப்பாடுடன் நடந்தால் உடல் தெளிந்து மன்மதனைப் போன்று தோற்றமளிப்பாய்.

கர்ம நிவிர்த்திக்கு சாந்தி

நளினமுடனாவதற்கு கருவை சொல்வேன்
நாடி வரும் கர்மத்தின் நிவிர்த்தியாலே
சுளினையடா அஷ்டகர்ம வகையிதாச்சு
சொற்காதி யோகமாம் துயரம் தீரும்
களினமிது களிப்பிக்க மறைத்து வைத்த
கூடாட்சமது சொல்லுகிறேன் கனிந்து கேளு
தெளிவாக இம்முறையை செய்தாயானால்
தீராத கர்மம் முதல் தீரு மென்னே - - - 24

பொருள் :- நல்வாழ்வு வாழ்வதற்கு வழிமுறையை கூறுக்கேளாய் இதனால் கரும நிவிர்த்தி யுண்டாகும். அஷ்ட கர்மங்களும் மாயும். துயரங்கள் விட்டோடும்.

இத்துணை களிப்பு பிக்கதும், பயனுள்ளதுமான முறைகளை நம் முன்னோர் நமக்கு கூறாது இருந்தனர்.

இங்குக் கூறும் விபரங்களை கவனமுடனும், பணிவன் புடனும் செய்து வர நன்மையுண்டு. தீராத கருமமும் நீங்கும்.

என்னவே எக்கிய த்துக்கான சிப்பியில்
அத்தி ஆல் அரசு மாவு இலுப்பை
நன்னயமாய் சூரியுடன் வேம்பும் கூட்டி
நறுநெய்யை விட்டு நசி-மசி என்றோது
அன்னவே இது நிற்க வைரவர் பூசை
அனுஷ்டிக்க சொல்லுகிறேன் அறிந்து பாரு
தென்னவர்க்கு வடமாலை சோட்சந்தான் செய்து
திறமாக தேவியுட பூசை செய்யே - - - 25

பொருள் :- அத்தி, ஆல், அரசு, மாவு, இலுப்பை, நத்தைச்சூரி, வேம்பு இவைகளை நன்கு இடித்து பசும் நெய்யை விட்டு "நசி...மசி" என்று ஓதி சேர்க்கவும்.

மற்றும், வைரவருக்கு பூசைசெய்தும், தென்னவருக்கு வடமாலை சாத்தியும், தேவிக்கு பயபக்தியுடன் பூசையும் செய்யவும்.

பூசையிலே தேவிக்கு பரிவட்டம் சாற்றி
புகழான வைரவர்க்கு பட்டும் சாத்தி
ஆசையால் மனங்களிக்க தெட்சணைகளிட்டு
அது மடித்து முன்புவைத்து அட்சரத்தைக் கீறி
பூசைபெற செபியாத பாவத்தோர்க்கு நீ
மவுனமாக உள்ளுக்கு தியானித்து ஓமென்றோது
வாசமுடன் செய்யப்பா புலத்தியனேயப்பா
மகத்தான கர்மமெல்லாம் மடிந்து போமே - - - 26

பொருள் :- தேவி பூசைக்கு பரிவட்டம் (துணி) சாற்றவும். வைரவருக்கும் பட்டு சாத்தவும். மனம் கனிந்து பல தட்சணைகள் வைக்கவும். அடுத்து மடித்து வைத்திருக்கிற துணியில் அச்சரத்தை எழுதவும். பூசைச் செய்ய தெரியாதவர்களுக்காக 'ஓம்' என்று நாமே உச்சாடணம் சொல்லவும். இதனால் கர்மமெல்லாம் மடிந்துப்போம்.

போகவே இம்மட்டும் செய்யானாகில்
போகாது கர்மமுதல் பிணிகளெல்லாம்
ஏகவே இப்படித்தான் செய்தால் தீரும்

என்மகனே உன்மனது இரங்கி செய்வாய்
தேகமது பூரிக்க செய்யச் சொல்லு
செய்யாமல் தீராது சொல்லோமெத்த
நாகமது தேடிவைத்த மணியைப் போலே
நரசென்மம் மடியுமட்டும் நருங்குவீரே - - - 27

பொருள் :- இந்த நிவர்த்திகளை செய்யத் தவறினால், கர்ம நோய்கள் யாவும் பாறாது.

உன் நலனுக்காக இந்த வகைபறாக்களை முறையாக கூறியுள்ளேன்.

நீ, நோயாளியின் உயிர்மீது அன்பு கூர்ந்து ஆவனச்செய்வாய். தவறினால், நலன் பிறவாது.

இந்த வழிமுறைகள் நாகப்பாம்பின் நாகமணிப் போன்றதாகும். இதை அறியா வண்ணம், இந்த சென்மம் அல்லலுற்று வீணாகிறது.

நடுங்காமல் செய்பவனே புண்ணிய வானாம்
நவகோடி சித்தர்களும் நவில் வாரப்பா
நெருங்குமிது கர்மத்தின் நிவிர்த்தி யப்பா
நிலைநிற்கும் சிவன் நிற்கும் சக்தி நிற்கும்
சுருங்காமல் இம்முறையை செய்யும்போது
சுறுக்கான கர்மங்கள் விலகி பின்னால்
கருங்குரங்கை கண்டவர்கள் வதனம் போலே
கனக மகாலெட்சுமியாள் நிற்பாள் பாரே - - - 28

பொருள் :- மக்களுக்கு நலம் புரிவதே புண்ணியமாகும். இதனால் கோடி சித்தர்களும் உனக்கு துணை நிற்பர். கரும நிவர்த்தியும் உண்டாகும். இன்னும் சிவசக்தி துணை கிட்டும்; இலட்சுமி கடாட்சமும் உண்டாம்.

பாரப்பா இம்முறையை செய்யும் போது
பகருகிறேன் இடறுகள் தான் விலகிப் போகும்
நேரப்பா கைபாகம் செய்யாகத்தோடே
நிச்சயமாய் செய்பவனே நிஷ்டையோகி
ஊரப்பா இருப்பவனே ஒருவன் செய்வான்
உலகிலுள்ள மடையரோ செய்யப் போறார்
வேரப்பா கர்ம மதுக்கிதுவே ஆதி
விள்ளாதே ஒருவருக்கும் வெளிவிடாதே - - - 29

பொருள் :- இந்த முறைகளைச் செய்துவர எல்லா துன்பங்களும் மாறும். கைபாகம், செய்பாகத்தை குருமூலம் அறிந்து செய்பவன் நிஷ்டை யோகி ஆவர். மக்களுக்கு அன்புடன் உதவுவது மனிதாபிமானம். இம்முறைகளை பிறருக்கு இலகுவில் தராது கையடக்கமாய் வைப்பாயாக.

வெளிதனிலே போட்டாக்கால் பலியாதப்பா
மேன்மையது இம்மட்டோ வென்பார் மட்டே
துளிசிதறி குளம் பெருகி வந்தாப் போலே
சொற்காதி தேவர் முதல் ரிஷிகள் தாமும்
நளினமுடன் அவ்விடத்தில் வருவார் பாரு
நாதாந்தம் சீதாந்தம் ரெண்டும் சொல்வார்
மொழிகுழறி வாய் புலம்பி உரைத்திடாதே
மொய்குழலாள் முப்பதுந்தான் முற்று முற்றே - - 30

பொருள் :- இதை இலகுவில் வெளியிட்டால் பலியாது.

மற்றும், இதை மனமொத்து செய்பவர்கள் முன்பு தேவர் முதல் ரிஷிகள் யாவரும் தோற்றமளிப்பார்கள். இவர்கள் நாதாந்தம், சீதாந்தங்களை விளக்குவர்.

எனவே, எந்நிலையிலும் மெய் மறந்து இந்நூலின் திறனை வெளியிடாதே.

ஓம் சாந்தி!!! சாந்தி!!!



1,864